நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 164 | ஜன 28 - பெப் 10, 1999 | விலை ரூபா 10/=


ஆலிம்சேனை :

## முஸ்லீம்களை விரட்டும் பேரினவாதச் சதி!





வடமேல் மாகாணசபை தேர்தல்:

## ரத்துச் செய்!

பயங்கரவாத எதிர்ப்பியக்கம்:

## தமிழ் முஸ்லீம்களுக்கு அச்சுறுத்தல்!

நன்றி - நூலகத்திட்டம்



## புதிய இராணுவத் தளபதி கொலைக்குழுக்களுக்கு அழைப்பு!

இலங்கை இராணுவத்தின் புதிய தளபதியான லெப். ஜெனரல் சிறிலால் வீரசூரிய மட்டக்களப்பிலுள்ள ராசிக்குழு, மற்றும் ரெலோ உறுப்பினர்களைச் சந்தித்து புலிகளுக்கெதிராகப் போர் புரியவும், புலிகளிடமிருந்து தாம் கைப்பற்றப் போகும் பிரதேசங்களைப் பாதுகாக்கவும் கூடுதலான தமிழ் இளைஞர்களைச் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

ஜனவரி 23ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மட்டக்களப்பு நகருள்ள 233ம் பிரிகேட் தலைமையகத்தில் இராணுவத் தளபதி இவர்களைச் சந்தித்துள்ளார். இவர்களைச் சந்திப்பதற்கு முன்னர் உள்ளூர் இராணுவ அதிகாரிகளையும் இராணுவத் தளபதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதில் பிரிகேட் கொமாண்டர் லக்கி, மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

அன்வர் (டெலோ), ராசிக் குழுவினரிடம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளின் ஊடுருவலை முற்றாகத் தவிர்ப்பதற்கான அவசிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

அன்வர் என்பவர் ரெலோ குழுவின் தலைவராவார். இவரின் தலைமையிலான குழு விசேட அதிரடிப்படையுடன் இணைந்து ஆரையம்பதியில் செயற்படுகிறது. இது இலங்கை இராணுவத்தின் ஒரு பகுதியாகவே செயற்பட்டாலும், மக்கள் இன்னமும் இக்குழுவை 'ரெலோ' எனவே அடையாளப்படுத்துகின்றனர். அன்வர் என்பவர் தமிழ்ப் பெண்ணொருவரைத் மணமுடித்த ஒரு முஸ்லிம் வாலிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவத் தளபதியுடனான கூட்டத்திற்கு புளொட், ஈ.பி.டி.பி. இராணுவ பிரிவினர் அழைக்கப்படவில்லை. இதற்குப் பிரதான காரணம் அவர்கள் இராணுவத்தின் ஓர் அங்கமாக இல்லாததே.

புலிகளின் ஊடுருவலுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொதுமக்களைக் கண்காணிக்குமாறு கேட்டுள்ள இராணுவத் தளபதி எதிர்காலத்தில் கிழக்கில் எந்தச் சிறுபிரசுரமும் 'கட்டுப்பாடில்லாத' பகுதி என்று இருக்கக் கூடாது எனவும் கூறியுள்ளார்.

புலிகளின் பிரதேசங்களில் ஒரு பாரிய தாக்குதலை மேற்கொள்வது சம்பந்தமாகவும் இவர்களுடன் இராணுவத் தளபதி கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விடுபட்டவர் மீண்டும் கைது!

விடுதலைப்புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பெயரில் கடந்த வருடம் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின் விடுதலை செய்யப்பட்ட நாகராஜா மதனராஜா என்ற இளைஞர் மீண்டும் கொழும்பில் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பம்பலப்பிட்டி பனை அபிவிருத்திச் சபையில் தொழில் புரியும் 21 வயதான இவ்வாலிபர் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணம் கைதடிப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் அனுராதபுர மஜிஸ்ரேட் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இம்மாதம் 18ம் திகதி பம்பலப்பிட்டிப் பகுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட இராணுவத்தினர் இவ்வாலிபரை மீண்டும் கைது செய்துள்ளனர். மறுநாளே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இவ்வாலிபர் மீது தடுப்புக்காவல் உத்தரவைப் பிறப்பித்த நீதிபதி அதே தினமே வெலிக்கடைச்சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கவும் உத்தரவிட்டார். இவ்விடயம் தொடர்பாக மனித கௌரவத்துக்கான மன்றத்தின் செயலாளர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் சட்ட விரோத கைதுகள் மற்றும் துன்புறுத்தல் தொடர்பான விசாரணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

## குடும்பத்தோடு கைது!

வல்வெட்டித்துறை சமரபாகு எனுமிடத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவத்துடன் மோதலொன்றில் ஈடுபட்ட புலிகளின் குழுவொன்றுக்கு இவர்கள் உதவி புரிந்துள்ளார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சண்டை இடம் பெற்ற இடத்தில் புலி உறுப்பினர் ஒருவரின் சடலம் கிடந்ததாகவும் அது ஊறணி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் தொடர்பில் ஒரே குடும்பத்தில் கைதானோர் வருமாறு:

1. முருகேசு சசிகுமார் (20),
2. முருகேசு சிறிருபாணி (23),
3. முருகேசு ஜெயலோகராணி (25),
4. முருகேசு சுதாகரன் (19),
5. திருமதி சந்திரலிங்கம் ஞானம்மா (32) -இவரும் முருகேசு குடும்பத்துடன் வசித்துவந்தவர்.

இவர்களுடன் இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி ரவி(23) என்ற நபரையும் தடுத்து வைத்துள்ளனர். இவர்கள் அனைவரும் பருத்தித்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## வீடு தேடி வந்த சூடு!

வாழைச்சேனை கறுவாக்கேணி என்ற இடத்தில் இ.சுபாஷினி(15) என்பவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளாகி மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜனவரி 15ம் திகதி இரவு ஒன்பதரை மணியளவில் தமது வீட்டின் முற்றத்திலிருந்து கதைத்துக் கொண்டிருந்த போது எங்கிருந்தோ வந்த துப்பாக்கி வேட்டொன்று சுபாஷினியின் இடுப்புப் பகுதியில் வந்து விழுந்ததில் இவர் படுகாயத்துக்குள்ளானார்.

துறைமுக இராணுவ முகாமிலிருந்து தீர்க்கப்பட்ட வேட்டுக்களே சுபாஷினியைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

## அது புளொட்டின் கைவரிசை!

யாழ்ப்பாணத்தில் தர்மலிங்கம் கேதீஸ்வரன் என்பவர் காணாமல் போயுள்ளதாக அவரது தந்தையார் யாழ். தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறையிட்டுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் கட்டிடப் பகுதியில் கடமையாற்றி வந்த இவர் ஜனவரி 23ம்திகதி கடமைக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் கிடைத்த தகவல்களின்படி இவர் புளொட் இயக்கத்தினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டு கடுமையான தாக்குதலுக்குள்ளாக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது தவிர யாழ்ப்பாணத்தில் புளொட் உறுப்பினரான சத்தியசீலன் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து புளொட் உறுப்பினரால் சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இன்னொரு தகவல் தெரிவிக்கிறது.

## வாலிபர் கொலை!

23ம் திகதி இரவு நுணாவில் இராணுவத்தினர் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு இளைஞர் கொல்லப்பட்டதுடன் சாவகச்சேரி, நுணாவில் மேற்கைச் சேர்ந்த சின்னராசா ஜெகன் 18வயது வாலிபர் காயமடைந்துள்ளனர். இவர் தற்போது பொலிஸ் பாதுகாப்புடன் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் ஊரெழுவைச் சேர்ந்த 16 வயதான செல்வரத்தினம் கௌரிதாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் புலி இயக்க உறுப்பினர் எனவும் ஜெகன் இவரின் உதவியாளர் எனவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இருவரும் ஒன்றாகச் செல்கையிலேயே இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

## அந்த 109 பேரின் கதி ?

1996ல் கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 164 பேர் காணாமல் போயுள்ளனரென கச்சேரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவர்களில் 109 பேரின் கதி என்ன என்பது தெரியாதுள்ளதெனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எட்டுப்பேர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 47 பேர் விடுதலையாகியுள்ளனர்.

22பேரின் விடுதலை தொடர்பாகவே உத்தியோகபூர்வமான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவர்களின் விடுதலைதொடர்பாக பலாலி இராணுவத் தலைமையகம் யாழ்.அரச அதிபருக்குத் தெரிவித்திருந்தது.

கதி என்னவென்று அறியப்படாத 109 பேரும் - இவர்களில் பெண்களும், பிள்ளைகளும் அடங்குவர். - இந்தியாவுக்குச் செல்லும் வழியில் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

## ஷெல்லுக்குப் போன பலி !

வாகரைப் பிரதேசத்திலுள்ள மதுரங்கேணிக்குளம் என்னும் இடத்தில் பொதுமக்கள் குடியிருப்பு மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் அன்னதானம் இராசநாதன் (35) ஸ்தலத்திலேயே பலியானார்.

இராசநாதன் நரேஸ்காந்தன் (10), வைரமுத்து கிருஸ்ணபிள்ளை (50), காளிக்குட்டி சம்பு நாதன் (50) ஆகியோர் காயமடைந்து மட்டக்களப்பு வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜன.23ம் திகதி சனிக்கிழமை காலை பத்து மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. மாங்கேணி இராணுவ முகாமிலிருந்தே இந்தச் ஷெல் ஏவப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கிறார்கள்.

மதுரங்கேணிக் குளத்தில் 2 ஷெல்களும், குஞ்சான்குளத்தில் 4 ஷெல்களும் விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டுகின்ற போதிலும் குஞ்சான்குளப் பகுதியில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட சேத விபரங்களை அறிய முடியாதிருக்கிறது.

வாகரையிலிருந்து ஒன்பது மைல்களுக்கப்பால் இந்தக் கிராமங்கள் உள்ளன.

காலை 10 மணிக்கு இந்தப் பொதுமக்கள் காயப்பட்ட போதிலும் மாட்டு வண்டி மூலம் வாழைச்சேனைக்குக் கொண்டு வந்து அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் மாலை 5 மணிக்கே மட்டக்களப்பு பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## முகாமுக்குப் பின்னால் சடலம்!

மைலம்பாவெளியைச் சேர்ந்த ஏகாம்பரம் ஆனந்தராஜா(17) என்ற இளைஞர் ஜனவரி 17ம் திகதி மாலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவரது சடலம் சத்துருக்கொண்டான் இராணுவ முகாமின் பின்புறத்தில் கிடக்கக் காணப்பட்டது. தலையில் இரண்டு துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

16ம் திகதி மாலை நான்கு மணியளவில் மைலம்பாவெளியிலுள்ள அவரது வீட்டிலிருந்து சத்துருக்கொண்டானிலுள்ள அவரது சித்தி வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றதாகவும் வழியிலுள்ள சத்துருக் கொண்டான் படையினர் இவரை வழிமறித்து விசாரித்ததை அவ்வழியால் சென்ற பொதுமக்கள் கண்டதாகவும் சில தகவல்கள் கூறுகின்றன.

ஆனந்தராஜாவின் சித்தியின் வீடு சத்துருக்கொண்டான் முகாமுக்கு அருகில் இருக்கிறது. சித்தியுடன் அவரது தாயார் மட்டுமே வசித்து வருவதால் அவர்களுக்குத் துணையாக ஆனந்தராஜா சென்று தங்குவது வழக்கம் என்றும் வழமை போல அன்று மாலையும் அவர் சித்தி வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த போதே படையினரால் வழிமறித்து அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அதன் பின்னரேயே ஆனந்தராஜாவின் சடலம் முகாமுக்குப் பின்புறத்தில் கிடக்கக் காணப்பட்டது.

## சுதந்திரப் போராளிகள் பிரசுரம்!

யாழ்.குடாநாட்டில் செயற்படும் தமிழ் அமைப்புகளுடன் தொடர்புகள் வைத்திருப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வடமராட்சிப் பிரதேசத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. சுதந்திரப் போராளிகள் என்ற பெயரில் அச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ்க்குழுக்கள் சிவில் நிர்வாகத்தை மீளக்கொண்டு வரப் போவதாகக் கூறி மக்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். இந்தக் குழுக்களுக்கு உதவி செய்ய வேண்டாம், இந்தக் குழுக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டாம் என்று கூறப்பட்டுள்ள அச்சுவரொட்டிகளில் நீதியும் தர்மமும் நிச்சயம் வெல்லும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அது ஒரு விபத்து!

சத்தியலிங்கம் மஞ்சுளா(23) என்ற இளம் பெண் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். புன்னாலைக் கட்டுவன் சந்தியில் ஜனவரி 24ம் திகதி மாலை ஐந்தரை மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. கணவனுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது தெருவோரத்தில் காவலுக்கு நின்ற படையினன் ஒருவனின் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததாலேயே இச்சம்பவம் நடைபெற்றதாக படைத்தரப்பு அறிவித்துள்ளது. இப்பெண் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நன்றி - நூலகத்திட்டம்



## வட மேல் மாகாண தேர்தல் வன்முறை :

# வோட்டுக்குக் காலில் விழுகிறார்கள், பின்னர் தலைக்கு வேட்டு வைக்கிறார்கள்!

"இலங்கையின் அரசியல் பற்றிச் சொல்ல எமது அகராதியின் சொற்கள் போதாது. காலில் விழுந்து எமக்கு வாக்களியுங்கள் என்கிறார்கள். பின்னர் குண்டர்கள் எம்மை கலைத்துவிட்டு வாக்களிக்கிறார்கள்" இது, கிரியுல்லைவைச் சேர்ந்த ஹெரிமல் கொமுவவின் வாக்குமூலம்.

வடமேல் மாகாண சபையின் தேர்தல் நிதர்சனத்தை அப்பட்டமாக காட்டும் கூற்று இது. 1998 டிசம்பர் 7ம்திகதி தொடக்கம் 1999 ஜனவரி 20ம் திகதி நள்ளிரவு வரையான 45 நாட்களில் இடம்பெற்றுள்ளன. வன்முறைச் சம்பவங்கள், 1997 உள்ளுராட்சித் தேர்தல் சம்பவங்களை விட 83சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த 45 தினங்களில் மட்டும் 611 வன்முறைச் சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேர்தல் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையின்படி, இதுவரை 02 கொலைகள், 09 கொலை முயற்சிகள் 39 காயப் படுத்தல்கள், 158 தாக்குதல்கள், 26 கொள்ளை, 15 வீடுடைப்புச் சம்பவங்கள் என்றவாறு வன்முறைகள் பரவலாக இடம்பெற்றுள்ளன. குருணாகல் மாவட்டத்தில் மட்டும் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் 429 இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

ஜனநாயகபூர்வமான சுதந்திரத் தேர்தலை விரும்பும் எந்தவொரு நபர்களுக்கும் இந்த புள்ளிவிபரங்கள் பலத்த அதிர்ச்சியைத் தரவல்லன. ஜனநாயகம் தொடர்பான உறுதிப்பாட்டையும், வாக்குறுதிகளையும் அள்ளிவீசும் அரசாங்கத்தின் ஆளும் கட்சிக்கு இந்தத் தேர்தல் வன்முறைக்கான விளையாடு களமாக மாறிப்போனது துரதிருஷ்டவசமானதே.

சந்தர்ப்பம் கிட்டும் போதெல்லாம் ஐ.தே.கவின் ஆட்சியையும், நடவடிக்கைகளையும், எள்ளிநகையாடும் பொ.ஐ.மு., இந்த வடமேல் மாகாண சபைத் தேர்தல் நடவடிக்கைகளின் மூலம் தாம் எவ்விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என நிரூபிக்கும் அளவுக்கு, வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றது. இதை உறுதிப்படுத்தும் வகையில், சுமார் 210 வன்முறைச் சம்பவங்களில் பொ.ஐ.மு. ஆதரவாளர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர்.

"வடமேல் மாகாண சபைத் தேர்தலில் அரச தீவிரவாதம் பிரதான காரணியாகியுள்ளது. சாதாரண மொழியில் கூறுவதாயின், சந்திரிகாவின் சண்டித்தனம் அதிகபட்சம் அனைத்துக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சந்திரிகாவின் பேச்சு மற்றும் உடல் மொழி (Body Language) என்பவற்றை அவனிதானிக்கும்போது, ஜனநாயக ரீதியிலான ஒரு எதிர்க்கட்சி எனும் ஏற்பாட்டுக்கு எதிரான கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் அவர் கடைப்பிடிக்கின்றார் என்பது விளங்கும். இது பயங்கரமானதொரு நிலைமை" என்கிறார் தயான் ஜயதிலக்க. ஆனால், வட மேல் மாகாண சபைத் தேர்தலில் பொ. ஐ. மு. சார்பாகப் போட்டியிடும் எஸ். பி. நாவின்ன, "நாம் சட்டத்துக்கு முரணான செயல்களில் ஈடுபடுவதில்லை. குண்டர்களை அழைத்து வந்து எம்மை பயமுறுத்துவது ஐ. தே. கவினரே. இதனால், வட மேல் மாகாணத்தில் பயங்கரமான நிலை தோன்றியுள்ளது என நாடு முழுவதும் பொய்ப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றது" என்கிறார்.

இவ்வாறு கட்சிகள் இரண்டும் பரஸ்பரம் தம்மைக் குற்றம் சுமத்திக் கொண்டிருக்கும்வேளை, இரு கொலைகளுடனான வரலாறு காணாத மோசமான வன்முறைகளுக்கு பொறுப்புச்சொல்ல வேண்டியது யார் என்பது மிக முக்கியமான கேள்வி.

வட மேல் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான அரசாங்கத்தின் ஆயத்தங்கள் தொடர்பான தகவல்களின்படி அரச வாகனங்கள் 700க்கும், அதிகமானவை குருணாகல் மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இலக்கத் தகடுகளின் முதல், இறுதி இலக்கங்கள் மாற்றப்பட்டுப் பரவலாகப் பாவனை செய்யப்படுகின்றது. குறிப்பாக, தேசிய இளைஞர் சேவை மன்றம், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுதாபனம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மீன்பிடிகள் நீர்வளத்துறை அமைச்சு, பயிர்ச்செய்கை, காப்புறுதிச் சபை ஆகிய நிறுவனங்களின் வாகனங்களே இவ்வாறு பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், வாக்குகளைப் பெறுவதற்காகத் துரித அபிவிருத்தியை மேற்கொள்ளும் முகமாக, வீதியோரங்களில் தூண்கள், தொலைபேசி இணைப்புக்கான தூண்கள் என்பன குவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சமுர்த்தி உதவிகள் பெறுபவர்களை ஒன்றிணைத்து பொ.ஐ.மு. கட்சிக்கு வாக்கிடும் பிரச்சாரத்தை மேற்கொள்ளும் புதிய தொழிலொன்றும் சமுர்த்தி ஊழியர்களுக்கு கிடைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்தத் தேர்தல் ஐ.தே.கவுக்கும், பொ.ஐ.முவுக்கும் தமது எதிர்கால அரசியலைத் தீர்மானிக்கும் களமாக உள்ளதால், எவ்வாறாயினும், எப்படியாயினும், தேர்தல்களில் வெற்றி பெறுவது என்பது இருதரப்பாரிடம் வன்மையாக உள்ள உறுதிப்பாடாகும்.

இதன்படி ஆளும்கட்சி என்ற வகையில் அனைத்து விடயங்களும் பொ.ஐ.முவுக்குச் சாதகமாகவே அமைந்து விட்டதென்பது உண்மை. இதுவரை பொலிஸ் தலைமையகத்துக்கு 650 தேர்தல் வன்முறை முறைப்பாடுகள் கிடைத்துள்ளது என்பதனையும் வடமேல் மாகாண தேர்தல்களின் பாதாள உலக கோஷ்டியினரின் களமிறங்கலையும் பொருத்திப் பார்ப்பதும் நன்று.

அன்று ஐ.தே.க. பிரதான ஆதரவாளர்களாக இருந்த பாதாள உலகத்தினர்கள் இன்று பொ.ஐ.முவினரின் பாதுகாவலர்களாக மாறியுள்ளனர்.

கடுவெல வசந்த, தம்மிக, அமரசிங்க, கொம்பனித்தெரு கொட்ட, காமினி, மோதர கிம்புலா அல குணரத்தினம்(குணா), தெமட்டகொடை அம்பிகா என்போர் வட மேல் மாகாண சபைக் களத்தில் உலவும் பாதாள உலகப் பிரபலங்களாவர். இவர்கள் அனைவரும் அன்றைய ஐ.தே.க. ஆதரவாளர்கள். ஆனால், இன்று பொ.ஐ.முவின் தீவிர ஆதரவாளர்கள். பாதாள உலகத்தின் ஹெரோயின் விற்பனையின் பிரதான விற்பனை முகவரான குணா, பொ.ஐ.மு. கொழும்பு மாவட்டப் பா. உ. ஒருவரின் மெய்ப்பாதுகாப்பாளர்.

சுதந்திரமான நீதியான ஒரு தேர்தலை நடாத்திமுடிக்கும் பொறுப்புக் கொண்ட பொலிசாரும் கூட, பொ.ஐ.மு. ஆதரவாளர்களாக நடந்துகொண்டனர் எனப் பலர் குற்றம் சுமத்துகின்றனர். வட மேல் மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நிமல் பண்டார (ஐ.தே.க.), அவர்கள், வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முயற்சிக்காதிருந்தனர் எனப் பொலிசாரைக் குற்றம் சுமத்துகின்றார்.

பொ.ஐ.முவின் ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளுக்கெதிரான முறைப்பாடுகள் பொலிசாரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லையெனத் தெரிகின்றது. மாதம்பே ஜே.வி.பியின் தேர்தல் அதிகாரச் சபையின் செயலாளர் குணதிலக்க மாரசிங்க, ஆனமடுவ பொ.ஐ.மு கட்சியைச் சேர்ந்த த.மு.தசநாயக்கவினதும், அவரது ஆதரவாளர்களதும் தாக்குதல் பற்றிய முறைப்பாடுகளை மேற்கொண்டபோது அதனைப் பொலிசார் ஏற்றுக்கொள்ளவில்லை என்கிறார். அத்துடன் பல வன்முறைச் சம்பவங்கள் பொலிசாரின் முன்னிலையில் இடம்பெற்றதாகவும் பலர் தெரிவிக்கின்றனர். ஆனால், புத்தளம் உதவிப் பொலிஸ் அதிகாரி நளின் இலங்கக்கோன் அவர்கள், அங்கு சிறுசிறு சம்பவங்களைத் தவிர மோசமான சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்கிறார்.

மேலும், தற்போது 40 கள்ள வாக்குப் பெட்டிகள் அளவில் வட மேல் மாகாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்தாகவும் அறியக் கிடைத்துள்ளது. இப்பெட்டிகளை எடுத்துக்கொண்டு, அசோக் லேலண்ட் ரக 43-5942 லொறி, 99.01.19ம் திகதி இரவு 11-12 மணியளவில் கொழும்பிலிருந்து பயணித்துள்ளது. இவ்வாகனம் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானது. இந்த லொறி கொழும்பிலிருந்து, குருணாகலையில் உள்ள பொ.ஐ.மு. பா.உ. ஒருவரின் கட்சி அலுவலகத்துக்குச் சென்றடைந்ததாகவும், இந்த லொறி பயணத்தை ஆரம்பிக்கும் முன், சோதனையைத் தவிர்க்குமாறு அனைத்து பொலிஸ் காலவரண்களுக்கும் அறிவிக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

அத்துடன், மேலும் பல கள்ளவாக்குப் பெட்டிகளை எடுத்துச்சென்று கொண்டிருந்த டொயொட்டா ரக வான், கிரிபத்கொடைக்கு அருகாமையில் வைத்து இயங்காமல் போனதாகவும், பின்னர் கொழும்பு மாவட்டப் பொ.ஐ.மு. பா.உ. ஒருவருக்கு இது பற்றி அறிவிக்கப்பட்டு, அவரால் டாட்டா ரக பஸ்ஸொன்று அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

எவ்வாறாயினும், இத்தேர்தலின் வாக்குப் பதிவு நாளன்று வன்முறைகள் அதிகம் இடம் பெறக் கூடும் என்பது உறுதி. தேர்தல் தொடர்பான அசம்பாவிதங்கள், அட்டகாசங்கள் என்பன இதையே எடுத்துக் காட்டுகின்றது. இதறகிடையில், வட மேல் மாகாண சபைத் தேர்தல்களைக் கண்காணிக்கும் இரு அமைப்புக்களான " சுதந்திரமானதும், நீதியான தேர்தலுக்கான மக்கள் செயற்குழுவும் தேர்தல் வன்முறையின் கண்காணிப்புக் நிலையமும் வன்முறைகள் தலைவிரித்தாடும் தேர்தல் என இத் தேர்தலை விபரித்துள்ளது. எவ்வாறாயினும் முழு அரச பலமும் இத் தேர்தலுக்காக பிரயோகிக்கப்பட்டுள்ள நிலையில் பொ.ஐ.மு. தோல்வியைப்பற்றி கிஞ்சித்தும் எண்ணிப்பார்க்கவேண்டியதில்லை

இன் நிலமையின் கீழ் வாக்காளர்கள் வாக்கிடாமல் இருப்பதே நன்று. எனினும் கட்டாயம் தமது வாக்கைப் பயன்படுத்த வேண்டும் அல்லது கள்ள வாக்களிக்க சந்தர்ப்பம் அளித்ததாகிவிடும். நான் வடமேல் மாகாண வாக்காளராயின் வாக்குச்சீட்டில் கிறுக்கி விட்டுத் தான் வருவேன். இவ்வாறு அனைவர்களும் செய்வார்களாயின் நமது வேட்பாளர்களுக்கு மண்டையில் உறைக்கும் என்கிறார் பேராசியர் ஜெயதேவ உயன்கொட.

—ரதினா—

### கொல்லப்பட்டோர்

1. வடமேல் மாகாண சபைத் தேர்தல் அபேட்சகரான காமினி திசாநாயக்காவின் குளியாபிட்டியவில் அமைந்துள்ள வீட்டிற்கு ஆயுதந்தாங்கிய நபரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஐ.தே.க. இளைஞர் முன்னணியின் பொருளாளர் ஜி சிவகுமார் ஸ்தலத்தில் மரணம்

2. புத்தளம் பிரேத சபை பொ.ஐ.மு. மநிதிரி ருவன் வீரசிங்க அவர்களின் பால்விய இல்லத்திற்கு ஐ.தே.க. ஆதரவாளர்கள் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் காமினி வீரசிங்க ஸ்தலத்தில் மரணம்.

### காயம், தாக்குதல், பயமுறுத்தல்

1. மாவத்தகவைச் சேர்ந்த ஜே.வி.பி. ஆதரவாளர்கள் வீட்டிற்குள் நுழைந்த நபர்கள் ஜே.வி.பி.க்கு ஆதரவளித்தால் கொல்வோம் என பயமுறுத்தல்.

2. குருணாகலில் போட்டியிடும் புதிய இடதுசாரி முன்னணி தலைவர் பெட்ரிக் விஜய பெர்ணாந்து மற்றும் விக்கிரமாகு கருணாரத்ன அவர்களுக்கு எதிரான தாக்குதல்

3. மஹாவயில் பொ.ஐ.மு. ஆதரவாளர்களுக்கெதிரான தாக்குதலில் ஒருவர் காயம்.

4. ஐ.தே.க. அபேட்சகர் அனுர கோபல்வின் ஆதரவாளரான பிக்குவை பொ.ஐ.மு. ஆதவாரளர்கள் தாக்கியதால் காயம்.

5. ஐ.தே.க. தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுவிட்டு திரும்பிய ஐ.தே.க. ஆதரவாளர்கள் 30 பெருக்கு ரிதிகமவில் தாக்குதல்.

6. ஐ.தே.க.அபேட்சகர் ஜோன்சன் பெர்ணாந்து ஆதரவாளர்கள் பயணித்த வான், இனந்தெரியாத நபர்களால் தாக்குதல்.

7. ஐ.தே.க. பா.உ. ராஜித சேனாரத்ன அவர்களின் வாகனம் பங்கதெனியாவில் வைத்து கடத்தப்பட்டதால் ஒருவருக்கு காயம்.

8. கல்கமுவையில் ஐ.தே.க. பா.உ. உள்ளிட்ட ஆதரவாளர்கள் சிலர் பொ.ஐ.மு. ஆதரவாளர்களுடன் மோதியதால் ஐ.தே.க. ஆதரவாளர்கள் ஒன்பதுபேர் காயம்.

9. பன்னவில் இடம்பெற்ற ஜே.வி.பி. பிரச்சாரக் கூட்டத்தில் புகுந்த 150க்கு மேற்பட்ட நபர்கள் வன்முறை.

10. வாரியப்பொலவில் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்ட ஐ.தே.க. தென் மாகாண பா.உ. ஜஸ்டின் கலப்பத்தி அவர்கள் மற்றும் பெண் உள்ளிட்டவர்கள் இலக்கத்தகடு அற்ற வாகனத்தில் வந்தவர்களால் தாக்கப்பட்டு நிர்வாணப்படுத்தப்பட்டனர்.

11. ஐ.தே.க. கொழும்பு மாவட்ட பா.உ. பிரேமரத்தன குணசேகர, பொ.ஐ.மு. ஆதரவாளர்கால் சுட்டுக் காயப்படுத்தப்பட்டார்.

12. கல்லடிச் சந்தியில் பிரச்சார வேளையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த டபிள்யூ. எம். அனுர ரஞ்சித் (ஐ.தே.க)வுக்கு கொலைப்பயமுறுத்தல்.

13. சிலாபம் பிரதேச சபை (சுயாதீனக் குழு) அபேட்சகர் ஆர்.டி. ஜயவீரவிக்கிரமரத்ன பொ.ஐ.மு. ஆதரவாளர்களால் கத்திக்குத்துக்கு இலக்காக்கப்பட்டு காயம்.

### சேதப்படுத்தப்பட்ட கட்சி அலுவலகங்கள்

1. புத்தளம் பாராளுமன்ற உறுப்பினர் த.மு.தசநாயக்கவும் அவரது ஆதரவாளர்களும் ஐ.தே.கட்சி அலுவலகத்தை சேதப்படுத்தினர்.

2. சிலாபம் மைக்குளம் பொ.ஐ.மு. கிளை அலுவலகத்துக்குள் பிரவேசித்த ஐ.தே.க. ஆதரவாளர்கள் சேதப்படுத்தினர்.

### சேதப்படுத்தப்பட்ட சொத்துக்கள்

3. மாவத்தகம பரகஹதெனியவில் அமைந்துள்ள பொ.ஐ.மு ஆதரவாளர் இலத்திற்குள் சேதத்தை ஏற்படுத்தி, வாகனத்தையும் தாக்கியுள்ளனர்.

4. ஆராச்சியக்கட்டுவ பிரதேசத்தில் பயணித்துக்கொண்டிருந்த ஐ.தே.க. பா.உக்களின் வாகனங்கள் பொ.ஐ.முவினரால் தாக்கப்பட்டன.

5. கல்லடிய ஐ.தே.க. இணைப்பாளர் அனுர குமாரசிறி அவர்களின் வீடு, குண்டுவீசி சேதப்படுத்தப்பட்டது.

நன்றி - நூலகத்திட்டம்



# கா. ஆதிரை எழுதுவது...

## ரமேஷ் ; சற்றுத்தலை நிமிரும்!

'மக்களின் குரல்' அன்று பிரேமதாச காலத்து தமிழ் மக்களின் மீதான இனஅழிப்பு யுத்தத்தைப் புலி எதிர்ப்பு என்ற பெயரில் நியாயப்படுத்தியும், வக்காலத்து வாங்கியும் வந்த மக்கள் விரோத வானொலி நிகழ்ச்சி. ஈ.பி.டி.பியினரால் நடாத்தப்பட்ட அந்நிகழ்ச்சி மோசமான தோல்வியைத் தழுவி விட்டதைப் பற்றி அதனை எழுதி இயக்கி நடாத்தி வந்த நடராஜா அற்புதராஜா என்ற அற்புதன் தனது அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை என்கிற வரலாற்றுத் திரிபுத் தொடரில் வாக்குமூலம் செப்பியிருந்தார். (தினமுரசு இதழ் 291). மக்கள் குரல் தோற்றத்திற்கான காரணம் அதன் புலி எதிர்ப்பு வாதமாம்.

நல்லது. இவ்வாறு கூறுவதன் மூலம் அந் நிகழ்ச்சியின் மக்கள் விரோத செயல்பாட்டை மூடிமறைத்து அது புலி எதிர்ப்பாக மட்டுமே இருந்ததாக உலகிற்கு ஒப்புவிக்கிறார். அது உண்மையில் புலி எதிர்ப்பாக மட்டும் நின்று விடவில்லை. முற்றிலும் மக்கள் விரோதமாகவும், பிரேமதாசவின் இன அழிப்பை மூடி மறைத்தும், நியாயப்படுத்தியும் வந்த ஒரு நிகழ்ச்சி.

கூடவே அன்று பங்கர் திருமகன் என்ற வானொலி நாடகத்தைத் தயாரித்து வழங்கியவரும் இவரே என்கின்றனர் இவரது முன்னாள் சகாக்களான ஈ.பி.ஆர்.எல்.எப்பினர் தமது புதிய கண்ணோட்டம் என்ற இதழில். தவிரவும் தினமுரசு வார இதழின் ஆசிரியர், அன்றும் இன்றும் ஈ.பி.டி.பியின் அரசியல் செயலாளர். 968 வாக்குகளால் யாழ்.மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவானவர். அதிலும் 966 வாக்குகள் ஊர்காவற்றுறையிலிருந்து பெறப்பட்டது. அவர் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராவதற்கான வாக்குகளை எல்லாம்( அதாவது மீதி இரண்டு வாக்குகள் ) யாழ். மாவட்டம் முழுவதிலிருந்தும் பெற்றவர். இப்போது தமிழ் மக்கள் மீதான 'கரிசனை'யால் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாகப் பாராளுமன்றத்தில் கையுயர்த்தி வருபவர். தினமுரசில் அவர் அரசையும் யுத்தத்தையும் காரசாரமாகக் கண்டிப்பதாகப் பாவ்லா பண்ணி வருபவர் என்ற தகவல்களையும் அது சொல்லி இருக்கிறது.

அது ஒருபுறமிருக்க, அவர் அன்று செய்து வந்தது வெறும் புலி எதிர்ப்பல்ல.மக்கள் விரோத அரசியலே என்பதற்கு ஒரு உதாரணமாகக் கிளாலி ஏரியில் 93 ஜனவரி 02ம் திகதி நடைபெற்ற படுகொலைச் சம்பவத்தைக் குறிப்பிடலாம். இச்சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களில் ஒருவர் கிளிநொச்சிக் கல்வித் திணைக்களத்தில் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய ஆறுமுகம் தர்மராசா. இன்னொருவர் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி என். சத்தியசீலன். இவ்விருவரையும் புலிகள் என்று கூறியது அது. அது மட்டுமன்றி பிரேமதாசவிற்கு எதிராக 'இம்பீச்மென்ற்' கொண்டுவந்த போது அதற்கு எதிராக மட்டமான முறையில் விமர்சனமும் செய்தது. மக்கள் கொலை செய்யப்படுதலைப் புலிகள் கொலை என்பதா புலி எதிர்ப்பு? அற்புதன் யாரை ஏமாற்ற முனைகிறார்? இதன் மூலம் யாரைப் பாதுகாக்க முனைகிறார்?

இன்னும் ஒன்று அவர் மக்களின் குரல் செய்ய முன்பு தினகரனில் "புல்லட் பொக்ஸ்' எனும் பத்தியையும் கீழ்த்தரமான முறையில் எழுதி வந்தார். மக்களின் குரல் தொடங்கிய பின் அது நிறுத்தப்பட்டது. அதில் சரிநிகரையும் ஒரு முறை "சரி தகரும் இனிப் புரியும் !" என மிரட்டியும் இருந்தார். அவரின் அன்றைய பத்திரிகா தருமத்திற்கும், இன்று "ஏனைய பத்திரிகைகளைத் தாக்கி எழுதுவதில்லை" எனும் தினமுரசு மார்க் பத்திரிகா தர்மத்திற்கும் என்னே வித்தியாசம்? புல்லரிக்கிறது.

தினமுரசின் அண்மைய இதழ் ஒன்றின் பின் பகுதியில் தீக்கோழி ஒன்று மண்ணுள் தலையைப் புதைத்துக் கொண்டு உலகம் தன்னைப் பார்க்கவில்லை எனக் கருதும் புகைப்படத்தை பிரசுரித்திருந்தது. அற்புதன் அல்லது ரமேஷ் என்கிற அற்புதராஜா நடராஜா அப்படத்தை மீண்டும் ஒரு முறை பார்ப்பது நல்லது!

## ஒரு இருண்ட எதிர்காலம்!

வடக்கிலும், கிழக்கிலும் இந்த அரசு தன் யுத்தத்தைக் கொடூரமாக நிகழ்த்தி அங்குள்ள மக்களுக்கு தன் உண்மை முகத்தைக் காட்டியது. அம்முகம் ஜனநாயக உரிமைகளை மதிக்காத முகமாக இருந்தது. அம் முகம் வன்முறையை அப்பாவி மக்களின் மீது வேண்டும் என்றே திணிக்கும் முகமாகத் தெரிந்தது. அதன் முகத்தில் செம்மணியின் இரத்தம் தோய்ந்து இருந்தது. அம் முகம் கோணேஸ்வரிகளது கதறல்களை அப்பி இருந்தது.

சிலர் பார்க்க மறந்தனர். உண்மை தெரிந்தும், கண்களை இறுக மூடி கனவினுள் மூழ்கி இருந்தனர். அவர்கள் இவ்வரசு ஜனநாயக பாதுகாவல் அரசு என சத்தியம் செய்தனர். ஐ.தே.கவின் வன்முறை அரசியலுக்கு எதிரான போக்குக்கொண்ட அரசு என முரசறைந்தனர். வடக்கிலும், கிழக்கிலும் அது நிகழ்த்தும் ருத்திரதாண்டவத்தை நியாயப்படுத்தினர்.

இன்று வடமேல் மாகாண சபையில் இவ்வரசு நடந்து கொள்ளும் முறையினைப் பார்த்தபின் இனி யாது கூறப்போகின்றனர்? வடக்கு, கிழக்கில் படிந்த இரத்தக்கறை தெற்கிலும் படிகையில், இனியும் இது ஜனநாயகத்தை, மனித உரிமைகளை மதிக்கும் எனச் சொல்லப் போகின்றனரா? அல்லது இன்னமும் வன்முறையில் ஈடுபட முனையாத அரசு என நற்சான்றிதழ் வழங்கப்போகின்றனரா?

எவ்வாறு தன் அதிகார உரிமைக்குச் சேதம் விளையப் போகின்றது எனத் தெரிந்ததும் அது வடக்கு கிழக்கில் தன் சுயரூபத்தை வெளிக்காட்டியதோ அதேபோலவே தெற்கிலும் செய்ய முனைகின்றது. ஆக, நாளைக்கு ஐ.தே.க. போல் அது மிக-மோசமான படுகொலைகளிலும் இறங்காது என்பதற்கு எவ்வித உறுதியும் இலலை. அதற்குக் கட்டியம் கூறுவது போல் தான் ஐ.தே.க ஆதரவாளர் சிவக்குமார் கொல்லப்பட்ட நிகழ்வு போலும். ஆக, நீல வர்ணம் பூசிய ஐ.தே.க இது! இவை இரண்டுமே தம் அதிகார மேலாதிக்கத்திற்கு சவால் வரும் போது எத்தகைய செயல்களிலும் ஈடுபடத் தயங்காத அரசியல் வழிமுறை கொண்ட கட்சிகள். எவ்வெக் காரணங்களுக்காகப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்கின்றனரோ அக் காரணங்களையே கொண்ட ஆட்சியியாளர் இவர்கள்.

இன்று எம்முன் உள்ள கேள்வி - மிகப் பிரமாண்டமான கேள்வி இது தான். எத்தனை காலத்திற்கு இத்தகைய ஜனநாயக விரோதிகளை மீண்டும் மீண்டும் பதவியில் ஏற்றுவது? எம் அடுத்த தலைமுறையாவது உண்மையான ஜனநாயக அமைப்பில் தம் வாழ்க்கையை நடாத்தும் சூழ்நிலையைத் தோற்றுவிக்காது நாம் விட்டு விடுவதா? நாம் வலிமையுடன் சிந்திக்க வேண்டிய வேளை இது! இல்லாவிடில் நிச்சயம் மிக இருண்ட எதிர்காலத்தையே நாம் அடுத்த தலைமுறைக்குப் பரிசளிக்கப் போகின்றோம்.

## கலவரம் உண்டாக்காச் சொற்கள்!

ஏற்றில் குமார் பொன்னம்பலம் மீது சி.ஐ.டி. விசாரணை ஒன்றிற்கும் மேற்பட்ட தடவை நடந்துள்ளது. இனங்களிடையே கலவரம் உண்டு பண்ணப் பார்த்தார் எனும் குற்றச் சாட்டில் அவர்கள் விசாரிக்கின்றனராம்.

இக்குற்றச்சாட்டை இனவாதப்பத்திரிகைகளும், லேக்ஹவுஸ் வெளியீடான 'அமுது'வும்' முன்வைத்திருந்தன. ஒரு தமிழ்ப் பிரஜை தன் சொந்தக் கருத்துக்களைத் துணிவாகக் கூறியிருப்பதற்குக் கொடுக்கப்படும் பரிசு இது. குமாரின் கருத்துக்கள் புலிகளுக்குச் சார்ப்பானதாம். அது கலவரத்தை உண்டு பண்ணி விடக் கூடியதாம். நன்று.

அரசின் தலைவி தமிழ் மக்களை பாரம்பரியக் குடிகள் என்று மறுத்து வந்தேறுகுடிகள் எனக் கூறலாம். அது தவறில்லை. இதனை அறிந்து வந்தேறு குடிகளை விரட்ட எவரும் கலவரத்தில் ஈடுபட்டார் - ஏனெனில் கூறியவர் தமிழர் இல்லை.

முஸ்லிம் மக்கள் தலைமுறை, தலைமுறையாக வாழ்ந்து வந்த காணிகளில் பௌத்த புனித சின்னங்கள் உள்ளன எனக்' கூறி அவர்களை வெளியேற உத்தரவு ஒன்றை படைத்தரப்பு தன்னிச்சையாக வெளியிடலாம். அது கலவரமாக்காது. ஏனெனில் அப்படை சிறுபான்மை மக்களின் படை இல்லை.

மேடைதோறும் தமிழ் மக்களை, தமிழ் வியாபாரிகளை பலவீனமாக்குங்கள். தமிழர் கடைகளில் பொருட்களை வாங்காதீர்கள். சிங்கள இனம் அல்லாதோரிற்கு கடை கொடுக்காதீர், கோயிலோ, பள்ளிவாசலோ கட்டவிடாதீர் என வீரவிதான எனும் அமைப்பு முழக்கமிடலாம். அது தப்பே இல்லை. அவை நாட்டின் ஒற்றுமையைக் காக்க முழங்கும் தேவ முழக்கங்கள்- ஏனெனில், வீரவிதான தமிழ் அமைப்பு இல்லை.

ஆக, தமிழ்த் தரப்பில் இருந்து தான் ஒரு குரலும் ஒலிக்கக் கூடாது. அப்படி ஒலித்தால் தம்மைத் துதிக்கும் தமிழ்க் கட்சிகள் போன்று அடிமைத் தனமான ஒப்பாரியாகவே இருக்க வேண்டும்.

நன்று.

பொ.ஐ.மு அரசின் எண்ணமும் செயலும் நன்று. அடக்கப்படும் எந்த இனத்தினது குரலும் உலக செவிப்பறையில் அறையாமல் விட்டுவிடவில்லை என்பதை மட்டும் புரிந்து கொள்ள நீண்ட நாட்களா எடுக்கும்?

## வெல்லப்படமுடியாத நல்ல பிள்ளைகள்

சிங்கள இனம் வெல்லப்படமுடியாத இனம். அது நல்ல பழக்கவழக்கங்களைக் கொண்ட இனம். அப்படி அது தோற்கடிக்கப்படுகிறதென்றால், அது கெட்ட பழக்கங்களைப் பழகுகிறது என்றால், அதற்குக் காரணம் தமிழ்த் தரப்புத்தான். வேறொன்றுமில்லை.

இது தான் இனவாதிகளின் குரல். ஒரு வகையில் கையாலாகத்தனத்தின் கூப்பாடு.

அண்மையில் லக்பிம பத்திரிகையில் வந்த பிரதான செய்தி இலங்கை கிரிக்கெட் குழுவின் தொடர் தோல்விகளிற்கு புலிகள் தான். காரணமாம். விளையாடும் போது சுட்டுவிடுவார்கள் எனும் பயத்தினால் தானாம் அவர்கள் சரியாக விளையாடவில்லையாம். புலிகள் எச்சரிக்கை செய்துள்ளார்களாம். பாதுகாப்பு அமைச்சகத்திற்கே தெரியாத ஒரு செய்தியை லக்பிம போட்டு விட்டது. அதுவும் பிரதான செய்தியாக. வக்ஷ்மன் கதிர்காமர் இதை அறிந்து "ச்சே எனக்குத் தெரியாமல் விட்டு விட்டதே... வெளிநாடுகளில் இதைச் சொல்லியே கலக்கியிருப்பேன்." என கவலைப்பட்டிருப்பார்.

வாழ்க வெல்லப்பட முடியாதவர்களின் வீரம்!

இன்னுமொரு விடயமும் இப்படித் தான். படுபாவிப்புலிகள் போதைவஸ்து விற்க, முஸ்லிம் ஆட்கள் அதை விநியோகிக்க, சிங்கள அப்பாவிகள் - விரல் சூப்பக்கூடத் தெரியாத இளைஞர்கள் - அதனை வாங்கி உண்டு சீரழிகிறார்களாம். மாதுலுவேவ சோபித தேரோ இப்படிக் கூறியிருக்கிறார். அவரின் கூற்றுப்படி பார்த்தால்-

விற்ற புலிகள் அதனை உண்டு சீரழியவில்லை. விநியோகித்த முஸ்லிம்கள் கூட அதைக் கூடாது என உண்ணவில்லை. சிங்கள இளைஞர்கள் மட்டுமே அதை உண்ணுகின்றனர்.

வாழ்க மாதுலுவேவவின் கண்டுபிடிப்பு!

## பிச்சையும் பேரினவாதமும்

சுரண்டலும் அடக்கு முறையும் ஒரு பக்கம் தழைத்து வளர்ந்திட, மறு பக்கம் வறுமையும் அறியாமையும் வெகுஜனங்களை விழுங்கிக் கொண்டிருக்கும் "சிறிலங்கா சோசலிச ஜனநாயக மக்கள் குடியரசில்" பிச்சைக்காரர்கள் தொகையும் ("பிச்சைக்காரர்" எனும் சொல் சமூகவியல் ரீதியாக ஏற்புடையதல்ல எனினும் வேறு சொல் கிடைக்காததால் இச் சொல்லையே பாவிக்க நேர்ந்து விட்டது. வாசகர் பொருத்துக் கொள்ளவும்.) நாளாந்தம் பெருகிக் கொண்டேயிருக்கிறது.

சுரண்டல் சமூக அமைப்பு தான் பிச்சைக்காரர்களை உருவாக்குகிறது என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது. ஆனால் பேரினவாத சமூக அமைப்பு பிச்சைக்காரர்களுக்கும் பிழைப்புக்கான வழிகளை அமைத்தக் கொடுக்கிறது என்பதில் தான் "மகிமையே" அடங்கியுள்ளது.

பல் தேச சமூகத்தவரும் நிறைந்து காணப்படும் கொழும்பு நகரில் கந்தைத் துணியுடுத்திய, தூசியால் அழுக்குப் படிந்து தோலின் நிறமே மாறிப் போன, நோயினாலும், பட்டினியாலும் வாடும் வயோதிபப் பிச்சைக்காரர்கள், அங்கவீனர்களர்ன பிச்சைக்காரர்கள் கண்ணில் படாத இடமேயில்லை எனலாம். தற்போது இவர்களது பிழைப்பிலும் மண்ணை வாரிப் போடும் வகையில் புதுவகைப் பிச்சைக்காரர் பிரிவொன்று உருவாகி வருகிறது.

சற்று நன்றாக உடையுடுத்திய, பெரும்பாலும் இள வயது ஆண்களாலான இப்பிச்சைக்காரர்கள் பஸ். வண்டிகளில் பாட்டுப் பாடுவதன் மூலம் பயணிகளிடமிருந்து பணம் பெற்றுக் கொள்கின்றனர். தொழில் கிடைக்காத, போதை வஸ்துக்கு அடிமையாகிப் போனவர்களே இவர்களில் பெரும்பான்மையானவர்களாக இருக்கின்றனர். வயோதிப தாயையும் தங்கையையும் பராமரிப்பதற்காக தொழில் கிடைக்காத நிலையில் தாம் கையேந்தி இருப்பதாக தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் இவர்கள், தாயைப் பற்றியும் காதலைப் பற்றியும் உருக்கமான பாடல்களைப் பாடி கெஞ்சி இரந்து காசு சேகரிப்பர். கேட்பவர்களும், போனால் போகட்டும் ஒரு ரூபா தானே" புண்ணியத்தில் சேரட்டும் எனும் உணர்வோடு இவர்களுக்கு காசு கொடுக்கின்றனர்.

எவ்வளவு காலம் தான் தனி நபர்களின் இரக்க சிந்தனையில் நம்பிக்கை கொண்டிருப்பது. எனவே இப் புதிய பிச்சைக்கார பிரிவினர் தமது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு புது வழி முறையொன்றை கண்டு பிடித்துள்ளனர் . அது தான் பௌத்த -சிங்கள உணர்வை தட்டியெழுப்பிடும் பாடல்களை சொந்தமாக இயற்றிப் பாடி பிச்சை யெடுத்திடும் தந்திரம்.

-"...எமது வீர சிங்கள இனம்.....

-"...எமது வீர சிங்கள இனத்தினர் யாழ்பாணத்தில் சிங்கக் கொடியை ஏற்றினர்...."

-"கொடியை புலிகள் குண்டு வைப்பதால் பௌத்த -சிங்கள மக்கள் அழிகின்றனர்......."

[இங்கே சிலவற்றை தணிக்கை செய்து விடுகிறேன்]

இவர்கள் பாடிடும் இப்பாடல்கள் சிங்களம் விளங்கும் தமிழ் மக்களது முள்ளந் தண்டை அச்சத்தால் சிலிர்க்க வைக்கிறது. பஸ்சை விட்டு இறங்கிப் போய் விடுவோமா என எண்ணத் தோன்றுகிறது.

பிச்சைகார்ர்கள் இனவாதப் பாடல்களைப் பாடி முடித்ததும் பார்த்தேன். பெண்கள் , ஆண்கள் இளையவர்கள் , முதியவர்கள் அனைவரும் புண்ணியத்தைப் பற்றி சிந்திக்காது - தேசியவாதத்தைப் பற்றி சிந்தித்தது போல வழமையை விட அதிகமாகவே பிச்சையிட்டனர்.

இதைவிட புலியால் தங்களின் குடும்பத்தினர் கொல்லப்பட்டதாக, தான் காயப்பட்டதாக, தன்னால் தொழில்புரிய இயலாததாகக் கூறி அனுதாபம் தேடி, காசு கேட்கும் ரகத்தைக் கொண்ட பிச்சைக்காரர்களுக்கும் குறைவில்லை. அவர்கள் கூறும் கதைகளினால் தமிழ் பயணிகள் பீதியால் உறைந்து போகும் காட்சியையும் காண வேண்டுமே. தற்போது கொழும்பு நகர பஸ்களில் இப் புதிய ரக பிச்சை அதிகரித்து வருகிறது. □

-துஷ்யந்தி-

நன்றி - நூலகத்திட்டம்





# வரதர்: பொ.ஐ.மு.வின் புதிய தரகர்?

ஒன்பதாண்டு கால அஞ்ஞாத வாசத்தின் பின் வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும், ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் (முன்னாள்?) மத்திய குழு உறுப்பினருமான அண்ணாமலை வரதராஜப் பெருமாள் இலங்கைக்கு வந்து சேர்ந்துள்ளார் என்ற தகவல் பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது. சந்திரிகா அரசாங்கம் தமது கடைசி காலத்திலாவது ஒரு தமிழ் அரசியல் தலைவரை தமது கூட்டணிக்குள் இணைத்துவிட எடுத்த முயற்சியின் பயனாகவே அவர் வந்திறங்கியிருக்கிறார் என்றும், இந்திய அரசாங்கத்தின் விருந்தாளியாக இருந்த அவரை இந்தியா திரும்பவும் தன் சார்பான ஒரு உறுதியான நபராக இலங்கை அரசியலுக்குள் நுழைக்க விரும்பியே அனுப்பியுள்ளது என்றும், காலம் சென்ற வை.பி.டி.சில்வா எம்.பியின் இடத்திற்கு பெருமாள் நியமிக்கப்படுவார் என்றும் பத்திரிகைகள் ஊகங்கள் தெரிவித்து வருகின்றன.

ஆனால், இதுவரை எந்தத் தொடர்பு சாதனத் துறையைச் சேர்ந்தவர்களும் பெருமாளைச் சந்திக்க முடியவில்லை. முன்னாள் வடகிழக்கு மாகாண சபையின் சபாநாயகர் ராஜகாரியருடன் அவர் தங்கியிருப்பதாக பேசப்பட்ட போதும், அவருடன் தொடர்பு கொண்ட போது அவர் அதனைத் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எப் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரனின் அரசியல் எதிர்காலத்திற்கு சவாலாக அவர் வந்துள்ளாரா என்ற சந்தேகம் எழும் விதத்தில், அவ்வியக்கத்தின் பலமட்டத்து உறுப்பினர்களுடனும் பெருமாளது சந்திப்பு நடந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈ.பி.ஆர்.எல்.எப்.பிலிருந்து விலகிச் சென்று விட்டதாகக் கூறப்படும் கிழக்கு மாகாணத்தை கலங்க வைத்துக் கொண்டிருக்கும் "ராசிக்குறூப்" -இப்போது இலங்கை தேசிய பாதுகாப்பு அணியின் ஒரு பிரிவாகச் செயல்பட்டு வருகிறது -உட்பட பல ஈ.பி.ஆர்.எல்.எப். அணிகளும் பெருமாளுடன் மந்திராலோசனையில் ஈடுபட்டு வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

1990 இல் தனி நாட்டுப் பிரகடனம் ஒன்றை மாகாண சபையில் செய்ததன் மூலம் அரசியல் அவதானிகளை மூக்கில் விரலை வைக்கச் செய்த பெருமாள், இந்திய சமாதானப் படையின் ஆதரவுடன் அங்கிருந்து வெளியேறி ஒரிசா மாநிலத்தில் தங்கியிருந்தார் என்று கூறப்பட்டது. அதன் பின் அவர் எந்த விதமான தீவிர அரசியல் நடவடிக்கையிலும் வெளிப்படையாக ஈடுபடவில்லை. பொ.ஜ.முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த போது ஈ.பி.ஆர்.எல்.எப். பாராளுமன்ற ஆசனங்கள் எதையும் பெற முடியாமல் போன போதும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுடன் முதலமைச்சர் கால உறவைக் கொண்டிருந்த அவர், இலங்கை அரசியலை நோக்கி ஈர்க்கப்பட்டிருக்கவில்லை. மீன் பிடித்துறை அமைச்சில் ஆலோசகர் பதவியை சுரேஸ் பிரேமச்சந்திரன் பெற்றுக் கொண்ட போதும் "வரதர்" இலங்கை அரசாங்கத்துடன் உறவை உருவாக்கிக் கொள்ள முன் வரவில்லை. புலிகளுடனான பேச்சுவார்த்தை முறிவடைந்த பின்னரும் கூட அது நடக்கவில்லை.

ஆனால் இப்போது அவர் இலங்கை வந்திருக்கிறார். வந்ததும் வராததுமாக தமது கட்சியின் பழைய பெருச்சாளிகளை தேடிபிடித்துப் பேசி தன்னைப் பலப்படுத்தும் முயற்சியில் இரகசியமாக ஈடுபட்டு வருகிறார்.

அடுத்த ஆண்டு வரப் போகும் தேர்தலையும் அது எதிர்கொள்ளக் கூடிய அரசியல் நெருக்கடிகளையும் கணக்கிலெடுத்து நீண்ட காலத் திட்டத்துடன் அவர் இங்கு வந்து இறங்கியிருப்பதாகவும் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கமும், ஜனாதிபதி சந்திரிகாவும் தமது அரசாங்கத்தை தமிழ் மக்களதும் விருப்பிற்குரிய அரசாங்கம் என்று காட்டிக் கொள்ள ஒரு தமிழ் தலைவரை தேடி நாயாக அலைவது வெளிப்படை. கதிர்காமர் போன்ற தமிழ் தெரியாத, தமிழ் பிரதேசங்களின் நிறங்களையே புரியாத "டமிலர்"களை வைத்து தனது தமிழ் அரசியல் சார்பு நிலையை நிரூபிக்க முடியாது என்பது அதற்கு தெளிவாகத் தெரிந்து போயிருக்கிறது. அவருடன் திரை மறைவில் ஒட்டி உறவாடும் எந்தத் தமிழ்க் கட்சியும், வெளிப்படையாக அவருடன் ஒத்துழைத்து செயற்படத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. அது தமது அரசியல் எதிர்காலத்துக்கு பலத்த நெருக்கடியாக அது அமைந்து விடும் என்று அவை அஞ்சுகின்றன. இந்த நிலையில் முன்னை நாள் விடுதலை இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவரும், ஒப்பீட்டளவில் மற்றெல்லா முன்னாள் விடுதலை இயக்கத் தலைவர்களையும் விட கணிப்புக்குரியவராகக் கருதப்படுபவருமான "வரதரை" தமக்குச் சாதகமாக திருப்ப முடியுமானால் அது அரசாங்கத்துக்குப் பெரும் வெற்றி என்று அரசாங்க தரப்பு கருதுவதில் வியப்பில்லை. தமிழ் அரசியலில் ஒரு குறிப்பிட்ட தாக்கத்தைச் செலுத்த அது பயன் தரக் கூடும் என்று அவர்கள் -குறிப்பாக ஜனாதிபதி கருதுவதாகத் தெரிய வருகிறது. வரதரும் ஏற்கெனவே தரகராக செயற்படுவதில் அனுபவம் வாய்ந்தவர். அன்று இந்தியாவின் தரகராக செயற்பட்டவர். இப்போது பொ.ஐ.மு.வின் தரகராக செயற்படுவதில் அவருக்கு ஒன்றும் கஷ்டமிருக்காது.

ஆனால், வரதர் அப்படியொன்றும் லேசுப்பட்ட தரகராக இருக்கப் போவதில்லை. அரசுடன் சேர்வதாயினும் தான் வெறுமனே சேவகம் செய்யும் ஒரு கதிர்காமராகச் சேரப் போவதில்லை என்பதை தம் கட்சி உறுப்பினர்களை சேர்த்துப் பிடித்து பேசத் தொடங்கியிருப்பதன் மூலம் காட்டி விட்டார். ஒரு கட்சியின் தலைவராக, சக்தி மிக்க அரசியல் புள்ளியாகவே அவர் இணைக்கப்பட முடியும் என்று அவரது நடவடிக்கைகள் காட்டுகின்றன. இந்திய அரசாங்கம் கூட அத்தகைய ஒரு பலமுள்ள ஆளாக வரதர் அரசாங்கத்துள் நுழைவதையே விரும்பும் என்பது தெளிவு.

ஆனால், வரதராஜப் பெருமாள் என்ன, பாலசிங்கம் வந்து சேர்ந்து கொண்டால் கூட இலங்கை அரசாங்கம் அரசியல் ரீதியில் தான் மாற்றங்களை நடைமுறைப்படுத்தத் தயாராகாத வரை, எந்த நபர்களைப் பிடித்தும் எதையும் சாதிக்க முடியாது என்பது தான் உண்மை. நாட்டின் அரசியலில் ஏற்பட்டுள்ள தீவிர பிளவு நிலை, அரசாங்கத்துடன் சேர்பவர்களைத் தான் பலவீனர்களாக்கி அரசியல் அநாதைகள் ஆக்குமே ஒழிய, அரசியலில் மாற்றங்களைக் கொண்டுவர அனுமதிக்கப் போவதில்லை. கடந்த கால அரசாங்கங்கள் இப்படி ஒரு சில அரசியல் தலைவர்களை தம்மை நியாயப்படுத்தப் பயன்படுத்தி வந்திருக்கின்றன. ஆனால் அந்த முயற்சிகளில் எல்லாம் அவை தொடர்ச்சியாகப் படுதோல்வியையே சந்தித்து வந்துள்ளன. தீர்வுப் பொதியும், பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அறிவிப்பதும், புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதும் இந்த நிலைமையில் மாற்றத்தைக் கொண்டு வந்து விடப் போவதில்லை.

இந்த விடயம் வரதருக்குத் தெரியாததல்ல.- சந்திரிக்காவுக்கு தெரியாவிட்டாலும்!

ஆக, அவர் அரசாங்கதத்துடன் இணைவதாக இருந்தால், அது அவரது எதிர்கால நடவடிக்கைக்கு முதலீடாக அமையக் கூடிய ஒரு வாய்ப்பை நல்கக் கூடிய ஒரு இணைவாக அமைவதையே விரும்புவார்.பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு மேலான, ஒரு மந்திரிப்ப பதவியுடன் சம்பந்தப்பட்ட இணைவாகவோ அல்லது வரப் போகும் தேர்தலில் வெற்றியை உறுதி செய்யக் கூடிய விதத்தில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு வாய்பைத் தரக் கூடிய இணைவாகவோ அது அமையலாம்.

ஈ.பி.டி.பி.க்கு ஒன்பது ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளித்தது அவர்களது கையிலிருக்கும் துப்பாக்கிகளும் அதிகாரமும் என்பது வரதருக்குத் தெரியாததல்ல.

வரதர் ராசிக் குறூப்புடன் ஏற்படுத்தியுள்ள தொடர்பு இந்த எதிர்காலத் திட்டதிற்கு நிச்சயம் பயன்படக்கூடியது என்பதில் சந்தேகமில்லை.

ஏற்கெனவே ராசிக் குழு உட்பட்ட சிலருடன் சேர்ந்து பொ.ஜ.மு வுக்கு தேர்தல் கால அரசியல் "உதவி"களைச் செய்வதானால், எத்தனை பா.உ பதவிகள் தரமுடியும் என்ற அளவில் ஒரு முற்றுப் பெறாத பேரம் நடந்ததாக நம்பகமான வட்டார தகவல்கள் கசிந்திருந்தன.-வரதர் வருவதற்கு முன்பாக .

இப்போ வரதரின் வருகை இந்தப் பேரத்தை முடிவுக்கு கொண்டுவரக் கூடும்.!

ஆக, இந்த ஊகங்கள் தெரிவிப்பதெல்லாம், இவற்றால் பயனடையப் போவது ஒன்றில் வரதர் அல்லது இலங்கை அரசாங்கம் மட்டுமே:- மக்கள்அல்ல என்பதை மட்டும் தான்!

-அரவு-

# டெல்வராமனின்

## கதிர்காமரின் கண்டுபிடிப்பு!

"இலங்கையில் யுத்தம் தொடர்வதற்கு முக்கியமான காரணம் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் புலிகளுக்குப் பணம் சேர்த்து அனுப்புவதே!" என்று அறிவித்திருக்கிறார் நமது மதிப்பிற்குரிய வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் அவர்கள்.

பெயருக்கேற்றாற் போல் "வெளிநாட்டு" அமைச்சராகவே இருந்து வரும் அமைச்சர் உலகைச் சுற்றி ஓடித்திரிவதெல்லாம் புலிகளுக்கு சர்வதேச ரீதியாக உள்ள ஆதரவு எல்லாவற்றையும் தகர்த்து விடுவதற்காகத்தான் என்பது தெரிந்த சங்கதி .

ஆலாய்ப் பறந்து அமைச்சர் ஆற்றி வரும் உரைகளும், கேட்டு வரும் உதவிகளும், குழந்தைகளைப் படையிலே சேர்க்கிறார்கள் என்று அவர் செய்து வரும் முறைப்பாடுகளும் ஒன்றும் பெரிதாக எடுபட்டதாகத் தெரியவில்லை. நாளுக்கு நாள் அவரது பிரச்சார வேகம் கூடி, இப்போது சனிச்சுரக்காரனின் பிதற்றல் போல வாய்க்கு வந்தபடியெல்லாம் பிதற்றத் தொடங்கியுள்ளார் அமைச்சர்.

இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் யுத்தத்திற்கு அவர் கண்டு பிடித்து அறிவித்துள்ள மேற்சொன்ன காரணமும் இத்தகைய ஒரு பிதற்றல் தானோ என்று எண்ண வைத்தால், அதில் ஆச்சரியமில்லை.

யுத்தத்திற்குக் காரணம் வெளிநாட்டார் வழங்கும் பணம் என்றால், அந்தப் பணமில்லாவிட்டால் யுத்தம் நின்று விடும் என்றல்லவா அர்த்தமாகிறது?

அம்மையார் தான் முட்டாள் தனமாக ஜி.எல் பீரிசை இருத்தி ஆண்டுக் கணக்காக "மினைக்கடுத்தி" ஒரு தீர்வுத் திட்டத்தை தயாரித்து காலத்தை வீணாக்கி விட்டார்.

அமைச்சரின் ஆலோசனையைக் கேட்டு, காசு வரும் வழிகளை அடைப்பதில் முயன்றிருந்தால் இவ்வளவுக்கு யுத்தம் முடிந்திருக்கும். ஆயுதத்திற்காகவும் யுத்த தளபாடங்களுக்காகவும் கோடிக் கணக்கில் பணத்தை வாரி இறைக்கவோ, உயிர்க்கொலைகளை ஏற்படுத்தவோ வேண்டியிருந்திருக்காது.

பாவம் ஜனாதிபதி அவரும் என்ன செய்வார்? நாட்டிலேயே நிற்காத ஒரு வெளிநாட்டமைச்சர், ஓயாமல் ஓடித்திரியும் நீதியமைச்சர் போன்றோரை வைத்துக் கொண்டு அவர் என்ன தான் செய்ய முடியும்?

கதிர்காமர் கதையைக் கேட்க அவர்களுக்குத்தான் நேரமேது? ஆக, யுத்தம் தொடர்கிறது.

ஏதோ கதிர்காமர் புண்ணியத்திலாவது யுத்தம் நின்று போனால் சரிதான்.

## தமிழ் பத்திரிகையாளர் வாழ்க!

"வயம்ப" என்ற சொல்லைக் கேள்விப்பட்டிருப்பீர்கள், ஆங்கிலப் பத்திரிகைகளிலும் சிங்களப் பத்திரிகைகளிலும் பலமாக கடந்த ஒரு மாத காலமாக அடிபட்டு வரும் சொல் இது. வட மேல் மாகாணத்திற்கான சுருக்கமான சிங்களப் பேர் இது.

சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் இந்தச் சொல்லைப் பாவிப்பது பற்றி யாரும் எதையும் சொல்ல வேண்டியதில்லை. ஏனென்றால் அவை தமிழ் வாசகர்களை மனதில் வைத்துக் கொண்டு தயாரிக்கப்படுவதில்லை. ஆனால் தமிழ்ப் பத்திரிகைகள்?

அவையும் கூட இந்தச் சொல்லைத் தான் பாவித்து எழுதித் தள்ளுகின்றன.

மணலாறு வெலிஓயா ஆனது போல வடமேல் மாகாணம் இப்போது "வயம்பா" ஆகியிருக்கிறது-தமிழிலும்! போகிற போக்கில், வடக்கு கிழக்கையும் "உத்துர நகினகிர" என்று எழுதினாலும் எழுதுவார்கள் போலிருக்கிறது இவர்கள்!

இந்தப் பத்திரிகையாளர்களை வாய்குளிர வாழ்த்தாமல் இருக்க முடியவில்லை. அவர்களுக்கு வாழ்த்துக்கள் !

## பெருமைப்படுகிற விசயம்!

சுன்னாகம் கிறிஸ்தவ தேவாலயமொன்றின் முன்னாலிருந்த முப்பதடி உயரமான சிலுவைமரத்தை யாரோ வெட்டிச் சென்று விட்டார்கள் என்ற செய்தி வந்திருந்தது பத்திரிகைகளில்.

யாழ் குடாநாட்டு வீடுகளில் ஓடு, கூரை மரங்கள் ஜன்னல்கள் கதவுகள் நிலைகள் எல்லாம் பிடுங்கப்பட்டு, ஆட்களில்லாத வீடுகள் வெறும் மொட்டை வீடுகளாக மாறியுள்ளது தெரிந்த கதை.

வெளிப்படையாகவே களவு செய்வதும், கேட்டால், கேட்க நீ யார் என்பதும் அங்கு சாதாரணமாகி விட்டது தான். ஆனால் சிலுவையையே வெட்டும் அளவுக்கு அங்கு நிலைமை "சீரடைந்து" இருப்பதை நம்ப முடியாமல் இருக்கிறது.

"ஆனால் அது உண்மை" என்று அடித்துச் சொல்கின்றார் அங்கிருந்து வந்த நண்பர் ஒருவர்.

"எங்கடை விடுதலைப் போராட்டம், சாதித்த சாதனைகளில் இதுவும் ஒன்று. மனித நாகரிகத்தை குழிதோண்டிப் புதைக்கிற மகத்தான சாதனை"

"செம்மணிக்குள் அவர்கள் மனித உடல்களைப் புதைத்தார்கள். நாம் எமது சமூகத்தின் இவ்வளவு கால நாகரிகத்தையும் புதைத்து விட்டோம்" என்கிறார் அவர். மனம் நொந்துபோய்.

முடிவேயில்லாத யுத்தம், தொடர்ச்சியான அதிகாரத்துவ ஆட்சி, ஜனநாயகத்தை மறுக்கும் அரசியல் போராட்டங்கள் எல்லாம், வறுமை , சமூகவிரோத செயல்கள், பாலியல் சீரழிவுகள் என்பவற்றுக்குத் தான் இட்டுச் செல்லும் என்கிற சமீபத்திய உலக நாட்டு உதாரணங்களுள் ஒன்றாக குடாநாடும் உருவாகியிருக்கிறது.

பெருமை தருகிற விடயம் இல்லையா இது?

நன்றி - நூலகத்திட்டம்



# புதிய கல்வித் திட்டம் :

# தமிழ் மாணவர்களுக்குப் படுகுழி?

- பரந்தாமன்

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கல்வித் திட்டம் 'மாணவர்களுடைய கல்வி' என விதந்துரைக்கப்பட்ட போதும் அது தமிழ் மாணவர்களை எவ்வாறு பாதிக்கின்றது என்று தனது அபிப்பிராயங்களை முன் வைக்கிறார் பரந்தாமன்.

புதிய கல்வித் திட்டம் தொடர்பான இந்தக் கருத்தாடலில் கல்வியியலாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களையும் பங்கு கொள்ளுமாறு அழைக்கிறோம்.

ஆ-ர்.

அரசின் புதிய கல்வித்திட்ட செயற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன. இத்திட்டத்தின் மூலம் 1ம் ஆண்டு, 6ம் ஆண்டு, க.பொ.த. (உ/த), பல்கலைக்கழகத் தெரிவு முறை, பாடசாலை முறைமை என்பவற்றில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இவற்றில் 6ம் ஆண்டுக்கான மாற்றங்கள் கடந்த ஆண்டிலேயே நாடுமுழுவதிலும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டன. முதலாம் ஆண்டுக்கான மாற்றங்கள் கம்பஹா மாவட்டத்தில் மட்டும் சென்ற ஆண்டு பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு தொடக்கம் சகல பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. க.பொ.த. உ/தரம், பாடசாலை முறைமை என்பவற்றிலுள்ள மாற்றங்கள் இந்த ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப் படுகிறது. பல்கலைக்கழக அனுமதி தொடர்பான மாற்றங்கள் 2000ம் ஆண்டு உ/தரப் பரீட்சை எடுப்பவர்களிடம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

1991ம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 17ம் இலக்கச் சட்டத்தின் அடிப்படையில் 1991 ஜூலை 15 ம் திகதி உருவாக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவே இம்மாற்றங்களுக்கான சிபாரிசுகளைச் செய்துள்ளது. இச்சிபாரிசுகள் முழுக்க முழுக்க உலக வங்கியின் ஆலோசனையின் பேரிலேயே முன்வைக்கப் பட்டுள்ளன.

வளர்ந்து வரும் உலக சூழலுக்கு ஏற்ப மாணவர்களை உருவாக்குவதே இம்மாற்றங்களின் நோக்கமெனக் கூறப்படுகின்றது. குறிப்பாகக் கூறுவதானால், நடைமுறைப்படுத்தப்படும் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கேற்பவும், அதன் அடிப்படையில் ஏற்படும் புதிய சமூக ஒழுங்கமைவுகளுக்கேற்பவும் மாணவர்களை உருவாக்குவதே இம்மாற்றங்களின் பிரதான இலக்குகளாகும்.

இந்நிலையில் தமிழ் மாணவர்கள் குறிப்பாக, முதலாம் ஆண்டுக்கான இம்மாற்றங்களினால், எவ்வாறு பாதிப்படையப் போகின்றார்கள்? இதனால் அவர்கள் சந்திக்கும் விளைவுகள் யாவை? இவற்றின் தலைமைச் சக்திகள் இது தொடர்பாக என்ன செய்யலாம்? என்பது பற்றிய ஒரு ஆரம்பப் பரிசீலனையில் கவனத்தைக் குவிக்க வேண்டியது இன்று அவசியமாகவுள்ளது. பேரின ஆதிக்கமுள்ள அரசமைப்பிலும், சமூக அமைப்பிலும் மாற்றங்கள் பேரினத்திற்கு சார்பாகி ஏனையவற்றை ஒடுக்குவதற்கு நிறையவே வாய்ப்புகள் உள்ளதானாலேயே இப்பரிசீலனைகள் அவ்சியமாகவுள்ளது.

### முதலாம் ஆண்டில் மாற்றங்கள்

கல்வி அபிவிருத்தியின் மேல் அமைப்பு வினைத் திறனுடன் தொடர்வதற்கு அடிப்படையான அடித்தளங்கள் இருத்தல் வேண்டும் என்றே முதலாம் ஆண்டில் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கேற்றவகையிலான தகைமைகளின் தொகுதி ஒன்றை முதலாம் ஆண்டில் பெற்றுக் கொள்ளுதலே மாற்றங்களின் நோக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தவகையில், தொடர்பாடல் பற்றிய தகைமைகளான எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திரவரைவு என்பனவற்றினை பெற்றுக் கொள்ளல், சூழல் தொடர்பான தகைமைகள் என்ற வகையில், சமூகச் சூழல், உயிரியற் சூழல், பௌதீகச் சூழல் பற்றிய அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல், ஒழுக்கம், சமயம் தொடர்பான தகைமைகள் பெற்றுக்கொள்ளுதல் ஓய்வு நேரத்தை பயன்படுத்தும் தகைமையையும், விளையாட்டுத் தகைமையையும் பெற்றுக் கொள்ளுதல், கற்கக் கற்றல் தொடர்பான தகைமைகளைப் பெற்றுக்கொள்ளுதல் என்பன இவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இத்தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் பௌதீக வளங்களும், உயிரியல் வளங்களும் உருவாக்கப்படல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. பௌதீக வளங்கள் என்ற வகையில் மாணவர்களுக்கான வகுப்பறை, தனியான காற்றோட்ட வசதி கொண்ட அறையாக இருத்தல் வேண்டும் எனவும், ஒரு மாணவனுக்கு 14 சதுர அடி விஸ்தீரணம் கிடைக்கக்கூடிய வகையில், 35 மாணவர்களைக் கொள்ளக் கூடியதாக வகுப்பறை இருத்தல் வேண்டும் எனவும், வகுப்பறைக்கு வெளியே பூந்தோட்டமும் விளையாட்டு மைதானமும் இருத்தல் வேண்டும் எனவும், விளையாட்டு மைதானத்தில், நுழைந்து போகும் உபகரணம், சீசோ, சறுக்கீஸ், ஊஞ்சல் என்பன இருத்தல் வேண்டும் எனவும் கற்றல் சாதனங்கள் போதியளவு இருத்தல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

உயிரியல் வளங்கள் என்ற வகையில், ஆசிரியர் போதிய பயிற்சி பெற்ற ஆசிரியராகவும், ஆங்கிலம் கற்பிக்கும் தகைமை பெற்ற ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இனி, இது விடயத்தில் தமிழ் மாணவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு வருவோம். தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கள், வடக்கு- கிழக்கு, கொழும்பு, மலையகம், ஏனைய பகுதிகள் என்ற வகையில் கல்வியினை மேற்கொள்கிறார்கள்.

வடக்கு, கிழக்கில் இராணுவ கட்டுப்பாடுள்ள பகுதிகளிலும், இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் என இரு பகுதிகளில் அவர்கள் வாழ்கின்றனர். பௌதீக வளங்களைப் பொறுத்தவரை. இலங்கை அரசு சம வாய்ப்புக்களை ஒரு போதும் கொடுப்பதில்லை. இந்நிலையில், அவை ஏனைய சிங்கள மாணவர்களுக்கு சமமான வகையில் பௌதீக வளங்களை பெற்றுக் கொள்வது என்பது பிரச்சினையாகவுள்ளது. இது விடயத்தில் இராணுவ கட்டுப்பாடுள்ள பகுதிகளில் ஒருவாறு சமாளித்துக் கொள்ள முயலலாம். எனினும், அங்கும் பல இடங்களில் பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் பல பிரபல கல்லூரிகள் கூட ஓலைக்கொட்டில்களிலேயே இயங்குகின்றன. ஒரு பெரிய கொட்டிலை அமைத்து தனித்தனி வகுப்புகளாக பிரித்து அங்கு கல்வி மேற்கொள்ளப்படுகின்றது. இந்நிலையில் புதிய திட்டம் எதிர்பார்க்கின்ற வகுப்பறைகளை எப்படி உருவாக்கிக் கொள்வது?

புதிய மாற்றங்களை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு பாடசாலைக்கும் ரூ.75,000 வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால், சிங்களப் பாடசாலைகளுக்கு அவை வழங்கப்பட்டுள்ளது என தகவல் கிடைத்துள்ளதே தவிர இதுவரை தமிழ்ப் பாடசாலைகளுக்கு கிடைத்துள்ளதாக தகவல்கள் இல்லை. இங்கே அரசாங்கம் நிதி வழங்கல் பற்றி முடிவெடுத்தாலும், சிங்கள அதிகாரிகளைக் கொண்டு தமிழ் பாடசாலைகளுக்கு அதனை ஒதுக்குவதென்பது கல்லில் நார் உரிப்பது போன்றது: இது வரலாறு. இவ்வளவுக்கும் தமிழ் பாடசாலைகளில் அதற்காக தயாரிப்பு வேலைகளை செய்வதற்கும் முன்னரே திட்டம் அமுலுக்கு வந்துவிட்டது. அரசாங்க நிதி ரூ.75,000ஐக் கொண்டு கட்டிடங்களை உருவாக்கவும் முடியாது.

உண்மையில், இப்பாடசாலைகளில், பழைய முறைகளைப் பேணுவதற்குக்கூட பௌதீக வளங்கள் போதாமலே உள்ளன. பல பாடசாலைகளில் மாணவர்கள் தரையில் அமர்ந்தே கற்கின்றார்கள். வகுப்பறைகள் போதாமல் மர நிழலில் கற்கின்றார்கள்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி பற்றிக்கூறவே தேவையில்லை. அங்கு உணவே இல்லாமல் மாணவர்கள் பிச்சை எடுத்து திரிகின்றனர். பாடசாலைகள் அகதி முகாம்களாகியுள்ளன. கரும்பலகையையே காணாத மாணவர்கள் கூட உள்ளனர். ஒவ்வொரு நாளும் போர் பயத்தினால், மாணவர்களும், பெற்றோரும் நாடோடிகளாக அலைகின்றனர். இந்நிலையில் அங்கு புதிய திட்டத்தை அமுல்படுத்துவது நினைத்துப் பார்க்கவே முடியாதது. இதனாலேயே தமிழர் ஆசிரியர் சங்கம் புதிய கல்வித் திட்டத்தினை அமுல்படுத்துவதினை போர் முடியும் வரை பிற்போடும்படி கேட்டுள்ளது. கூடியவரை ஒரு வருடத்திற்காவது பிற்போடும்படி கேட்டுள்ளது.

ஆசிரியர் வளங்களைப் பொறுத்த வரையிலும், மோசமான நிலையே உள்ளது. ஏற்கெனவே வடக்கிலும், கிழக்கிலும் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. அதுவும் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மிகக்குறைவு. பெரும்பாலான பாடசாலைகளில் அண்மையில், நியமிக்கப்பட்ட பயிற்சி பெறாத ஆசிரியர்கள் முதலாம் ஆண்டிற்கு கற்பிக்கின்றனர். அவசரம் அவசரமாக ஆறுநாள் பயிற்சி ஒன்றைக் கொடுத்துவிட்டு கற்பிக்க விடப்படுகின்றனர். இவர்களிடமிருந்து எவ்வாறு கூடிய விளைவுகளை எதிர்பார்க்க முடியும். கூடிய ஆசிரியர்களுக்கு பயிற்சிக்கொடுப்பதற்கு வடக்கு - கிழக்கிலுள்ள ஆசிரிய கலாசாலைகளும், கல்விக் கல்லூரிகளும் முன்வந்த போதும், அரசு அதற்கான வசதிகளை போதியளவு செய்து கொடுக்கவில்லை.

இதில் மிகத் துரதிருஷ்டமானது, இச்சாதாரண ஆசிரியர்களே ஆங்கிலத்தையும் கற்பிக்குமாறு வற்புறுத்தப்பட்டமையேயாகும். இவ் ஆசிரியர்களில் ஆங்கில மொழியில், க.பொ.த. சா/தரம் சித்தியடையாதவர்களும் கூட உள்ளனர். அவர்களைக் கொண்டு ஆங்கிலம் கற்பிப்பது எந்தவகையில் நியாயமாகும். மொழி கற்பித்தலில் உச்சரிப்பு என்பது மிக முக்கியமானது. ஆங்கில ஆசிரியர்கள் அல்லாதவர்களிடம் இதனை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அதேவேளை சிங்களப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களைக் கொண்டு ஆங்கில பாடத்தினை கற்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் மிகப் பற்றாக்குறையாக உள்ளனர். புதியவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சிகள் எதிலும் அரசு ஈடுபடவுமில்லை.

கொழும்பிலும், தமிழ் பாடசாலைகளைப் பொறுத்தவரை இந்நிலை மிகவும் மோசமானது. இங்குள்ள பல பாடசாலைகளில் இடவசதி என்பது மிகக் குறைவு, காற்றோட்ட வெளிச்ச வசதிகளும் குறைவு. தளபாட வசதி மிகவும் மோசம். பல பாடசாலைகளில் சில வகுப்புக்கள் காலையும், சில வகுப்புகள் மாலையும் என் மாற்றி நடாத்தியே பிரச்சினைகளை சமாளிக்கின்றனர். கணபதி வித்தியாலயம், விவேகானந்தா வித்தியாலயம், நல்லாயன் அரசினர் தமிழ் மகளிர் வித்தியாலயம் என்பனவற்றில் இவ்வாறே வகுப்புகள் நடைபெறுகின்றன.

சென்ற ஆண்டு கணபதி வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவில், ஐந்து கதிரைகளில் பத்து மாணவர்கள் அமர வேண்டிய அளவுக்கு தளபாட பற்றாக்குறை இருந்தது. 26 வகுப்புக்கள் உள்ள பாடசாலையில் 17 வகுப்புகள் நடாத்தப்படக்கூடிய அளவுக்கே இடம் போதுமாக உள்ளது.

கொட்டாஞ்சேனை உப்புக்குளம் தமிழ் வித்தியாலயத்தில் வகுப்பறைகளுக்கு காற்றே புகாத அளவுக்கு அருகில் உள்ள தொடர்மாடி வீடுகள் மறைக்கின்றன. விளையாட்டு மைதானம், பூந்தோட்டம் என்பன அமைப்பதற்கு இப்பாடசாலையில் அறவே நில வசதி கிடையாது.

ஆசிரிய வளம் இப் பாடசாலைகளில் மிகக் குறைவு. கணபதி வித்தியாலயம் தொண்டர் ஆசிரியர்களைக் கொண்டே ஆரம்பப் பிரிவை சமாளிக்கின்றது. தொண்டர் ஆசிரியர்கள் இல்லாவிட்டால் ஆரம்பப் பிரிவையே மூடிவிடக்கூடிய நிலை அங்கே ஏற்படலாம். அதிபரின் கெட்டித்தனத்தினால் பாடசாலைச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. ஒரு வகுப்பில் 60 மாணவர்கள் வரை அங்கு கற்கின்றனர். இப்பெருந் தொகையை வைத்துக்கொண்டு மாணவர்களை அமைதிப் படுத்துவதே பெரும்பாடாக இருக்கும்போது கற்பித்தலை எவ்வாறு தான் மேற்கொள்ள முடியும்.

மலையகத்திலும் ஏனைய பகுதிகளிலும் தமிழ் பாடசாலைகளைப் பொறுத்தவரை இவ்வாறான நிலையே உள்ளது. அங்கு நிலப்பிரச்சினை சற்றுக் குறைவாகவே இருந்தாலும், கட்டிட தளபாட, ஆசிரியர் பிரச்சினைகள் பாரியவையாக உள்ளன. நகர்புற பாடசாலைகள் சிலவற்றைத் தவிர ஏனையவற்றில் தனி வகுப்பறைகள் கிடையாது.

ஆசிரியர் பற்றாக்குறை மிக மோசம். க.பொ.த. (உ/த) சித்தியடையாதவர் கூட ஆசிரியர்களாக உள்ளனர். மத்திய மாகாணத்தில் 126 மாணவருக்கு ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரே காணப்படுகின்றார். அதேவேளை, 44 சிங்கள மாணவருக்கு ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் காணப்படுகின்றார். அதுவும் நுவரெலியா மாவட்டத்தில் 155 தமிழ் மாணவருக்கு ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் காணப்பட 57 சிங்கள மாணவருக்கு ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் காணப்படுகின்றார்.

பாடப்புத்தக விநியோகத்திலும், தமிழ் பாடசாலைகளுக்கே பாரபட்சம் காட்டப்படுகின்றன. மார்கழி விடுமுறை வழங்கப்படுவதற்கு முன்னரே சிங்களப் பாடசாலைகளுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு விட்டன. ஆனால், தமிழ் பாடசாலைகளுக்கு ஜனவரி முடிகின்ற இத்தறுவாயிலும் கூட 8 புத்தகங்கள் வழங்கப்பட வேண்டியதற்கு பதில் ஒரு புத்தகம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

எனவே முடிவாக, சமவாய்ப்புகள் அற்ற சூழ்நிலையிலேயே இப்புதிய திட்டம் அறிமுகப்படுத்தப் படுகின்றது. இதனால், சமத்துவமற்ற மாணவர்கள் உருவாகுவதற்கான வாய்ப்புகளே உள்ளன. குறிப்பாகத் தமிழ் மாணவர்கள் மிகவும் பின் தள்ளப்படக்கூடிய அபாயம் இதில் உள்ளது. எதிர்காலத்தில் தமிழ் மாணவர்களின் வாய்ப்புகளைப் பறிக்கும் திட்டமிட்ட பேரினச் சதி இதன் பின்னணியில் உள்ளதோ என ஐயுறவேண்டியுள்ளது. சம வாய்ப்புகள் உருவாகும்வரை குறைந்த பட்சம் போர் நீங்கும் வரை திட்டங்களை பிற்போடுவதே இந்த விடயத்தில் சமூக நீதியாக இருக்கும்.



நன்றி - நூலகத்திட்டம்





**டிசம்பர்** 25ம்திகதி உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ மக்கள் நத்தார் பண்டிகைக் கொண்டாடங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை, இந்தியாவின் குஜராத்திய மாநிலத்தின் டங்கஸ் மாவட்டத்திலுள்ள அஹ்வா பிரதேச கிறிஸ்தவ மக்களும் தமது கொண்டாடங்களுக்குத் தயாராகிக் கொண்டிருந்தர்கள். ஆனால், தேவபாலகன் பிறப்புத் திருநாள், அவர்களது உயிருடமைகட்டும், மத உரிமைக்கும் அச்சுறுத்தலான ஒரு நாளாக மறப்போகின்றதென்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை

நள்ளிரவுப் பூசைக்காக அவர்கள் தயாரிகிக் கொண்டிருந்தவேள்ள, திடீரென வீதிகளில் கிறிஸ்தவ மதத்திற்கும், மத நிறுவனங்களுக்கும் எதிரான கோஷங்களை எழுப்பியவண்ணம் ஆயிரக்கணக்கில் இந்துவெறியர்கள் வீதிகளில் இறங்கி காடைத்தனம் புரியத் தொடங்கினார்கள். கடைகளை உடைத்தும், தேவாலயங்களை தகர்த்தும், வாகனங்களுக்குத் தீயூட்டிம் அவர்கள் அட்டகாசம் செய்தனர். விழாக்கொண்டாட்டத்திற்கு விழித்திருந்த மக்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடி ஒழிந்தனர். இந்தக் கலவரம் பிறகு குஜராத் மாநிலத்தின் கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழும் பகுதிகளெங்கும் தொடர்ந்தது. ஒரு நாளல்ல, இரு நாளல்ல நான்கு நாட்கள். அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காதிருக்க வளர்ந்த காடைத்தனம், மிஷன்கள் பற்றி அவதூறான விதத்தில் பேச்சுக்கள் நிகழ்த்தப்பட்டன.

கூட்டம் முடிந்ததை அடுத்து அங்கிருந்து கிளம்பிய கும்பல் கிறிஸ்தவ தேவாலயங்கள், அவர்களால் நடத்தப்படும் பாடசாலைகள் கிறிஸ்தவகளுக்குச் சொந்தமான கடைகள் என்று தேடித்தேடி அடித்து நொருக்கியது. தேவாலயங்கள் தீயிட்டும் கொழுத்தப்படடன. இத்தாக்குதலின் பின்னர் டங்கஸ மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களுக்கு பரவியது. வாகனங்கள் எரிக்கப்பட்டன. பலர் தொடர்பாக முறைப்பாடு செய்த பலர் மிரட்டப்பட்டுள்ளார்கள். 29ம்திகதியன்று மத்தாபாரியிலுள்ள தேவாலயம் ஒன்று அடித்து உடைக்கப்பட்டது. நாலு நாட்களாக எந்தத் தடையும் இன்றி நடந்த இந்தத் தாக்குதல்களை, கட்டாய பல மதமாற்றத் திற்கு

பத்திரிகைகள் பெரிதுபடுத்திவிட்டன என்றும், கிறிஸ்தவர்களது நடவடிக்கைகள் இந்துக்களை ஆத்தரமூட்டுவதாக அமைந்துள்ளன என்றும் தெரிவித்தார். ஆனால், அவர் என்னதான் பெரியவிடயமாக மறுத்தாலும் நடந்த சம்பவங்கள் ஒன்றும் சாதாரணமான சம்பவங்களல் அல்ல. பல இடங்களில் நத்தார் தினத்தன்றே பல தேவாலயங்கள், கல்வி நிறுவனங்கள், வீடுகள் என்பன தாக்கப்பட்டுள்ளன. பல இடங்களில தீவைப்பும் நடந்திருக்கிறது. குறிப்பாக அஹ்வா, சுமிர், ஜமால்பாடா, காட்வி, டிவான், டெம்றுன், மடசாதி, படல்சாதி ஆகிய இடங்களில் இவை மிகவும் உக்கிரமாக

# இந்துத்துவவாதிகளின் புதிய இலக்கு :

# கிறிஸ்தவ சிறுபான்மையினர்



29ம்திகதி ஓய்வுக்கு வந்தபோது கிறிஸ்தவ கிராமங்கள் மயான பூமியாக வெறிச்சோடிக்கிடந்தன. தாக்கியவர்கள் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் கூட்டுக்கட்சியான விஷ்வஹிந்து பரிசத்தின் ஆதரவிலான ஒரு குழு என்பது இந்தியா முழுவதும் தெரிந்த இரகசியம். இந்து அடிப்படைவாதிகளின் புதிய இலக்குலான கிறிஸ்தவ சிறுபான்மையினர் பாதிக்கபட்டவர்களாக இருக்க, இந்திய ஆளும் கட்சியினரோ, ஜே.ஆர். பாணியில் 'மக்களின் உணர்ச்சி' வெளிப்பாடு என்று அறிவித்தனர்.

விஷ்வ இந்து பரிசத் அமைப்பின் கூட்டமைப்பான ஹிந்து தர்ம மஞ் (HJM) என்ற அமைப்பைச்சேர்ந்த 4000க்கும் குண்டர்களின் இந்து இனவெறி ஊர்வலம் ஒன்று அன்றைய தினம் நடந்தது. பொலிசார் பார்த்து நிற்க, கிறிஸ்தவகளுக்கெதிரான சுலோகங்களுடன் நடைபெற்ற இந்த ஊர்வலத்தின் பின் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு குடியிருப்பில் உள்ள பாடசாலை மைதானமொன்றில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. இந்துவத்தை இந்திய மயமாக்கி இந்தியாவை முழுக்க முழுக்க இந்துக்களின் தேசமாக்கிவிடும் வெறியுடன் இயங்கிவரும் இம்மதவெறிக் கும்பலின் இந்தக் கூட்டத்தில் கிறிஸ்தவ

காயமடைந்தனர். நத்தார் பண்டிகை நாளான 25க்கும் பின்னும் தாக்குதல்கள் தொடர்ந்தன. 27ம், 28ம், 29ம் திகதிகளில் முதல்கொண்ட லஹான் கட்மில், பார்டா, பரிப்படா, றாவோச்சோன்ட், கெரின்ஜ்யாடா, பிப்பல்டாக், கோஜென் போன்ற கிராமங்களிலும் பலத்த தாக்கல்கள் நிகழ்ந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன. பிப்பாலாய் மல்லிலும் டொங்கியம்பாவிலும் சில கிறிஸ்தவர்கள் கட்டிவைத்து அடிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள்

எதிரான இந்துக்களின் நியாயமான கோபத்தின் வெளிப்பாடு என்று கூறியதன் மூலம், தாக்குதல்களுக்கு மேலும் தூபமிட்டுக்கொண்டிருந்தனர்.

டாங்கஸ் மாவட்ட கலக்டரான பாரத் ஜோசி அவர்களிடம் கிறிஸ்மஸ் நாளில் நடக்கவிருந்த அமைப்புகளின் ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கவேண்டாம் என்று பலதடவை கிறிஸ்தவ அமைப்புகள் கோரியும் கேட்காது அவர் ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கியதுமட்டுல்லாமல், அவர்களது கூட்டத்திற்குச் சென்று மலர் மாலையும் அணிவிக்கப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிகளுக்கு எதிராக இதுகாறும் இருந்துவந்த அடிப்படைவாத ஹிந்துத்துவ வெறியர்கள் இப்போது ஏனைய சிறுபான்மை மதங்களுக்கு எதிராகவும் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளார்கள். குஜராத் மாநில முதலமைச்சர் கேசுபாய் பட்டேல் இந்த மாநிலத்தையே குலுக்கியத் தாக்குதல்களைப் பற்றிக் கருத்து தெரிவிக்கையில் அது ஒன்றும் பெரிய விடயம் அல்ல என்றும், அதைப்

நடந்துள்ளன.

உண்மையில் பாரதீய ஜனதாக் கட்சியும், இதன் சார்பு அமைப்புக்காளான விஷ்வ ஹிந்து பரிசத், சிவசேனை என்று நாடளாவியதாகப் பரவியுள்ள இனவெறி அமைப்புக்கள் அனைத்தும் தொடர்ச்சியாக இந்துக்கள் அல்லாதோர் மீது பாரிய எதிர்ப்பை வளர்த்து வருகிறன. இந்தியாவின் பூமிபுத்திரர்கள் தாங்களே என்று கூறும் இவர்கள் ஏனைய மதத்தவர்களை அடக்கி ஒடுக்குவதன் மூலம் தமது ராமனுக்கான கடமையைச் செய்துவருகிறார்கள். வால்களில் தீப்பந்தங்களுடன் இந்திய தனத்துக்காக புறப்படுகிறார்கள் என்று சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தது போலவே இவர்கள் வெறியுடன் செயற்பட்டுவருகிறார்கள். குஜராத்தின் அயல் மாநிலமான மகாராஷ்டிரா மாநிலத்திலும் கூட கிறிஸ்தவர்கட்கெதிரான மிரட்டல்கள் விடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இந்தப் பிரதேசத்தில் மதக்கடமைகளிலும் பிற சமூக சேவை வேலைகளிலும் ஈடுபட்டுவரும் பல்வேறு கிறிஸ்தவ ஸ்தாபனங்களை எதிர்வரும் பங்குனி 31ம் திகதி முன்பதாக மாநிலத்தை விட்டுவெளியேறுமாறு புலிகள் பாணியில் உத்தரவிட்டுள்ளனர் இந்தக்காடையர்கள்.

கர்நாடக மாநிலத்தில் ஏற்கெனவே பல தடவைகள் கிறிஸ்தவர்களுக்கெதிராக தாக்குதல்களையும் கொலைகளையும் மிரட்டல்களையும் இக்கும்பல்களல் விட்டுள்ளன. கடந்த இரண்டொரு வருடங்களாக அதிகாரித்துவரும் கிறிஸ்தவர்களுக்கெதிரான இந்த எதிர்ப்புணர்வு பரவலாக, அரசாங்கத்தினதும், அரச உயர் அதிகாரிகளதும், ஆசீர்வாதத்துடனும் பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போக்கின் ஒரு தொடர்ச்சியாகவும், அதன் வளர்ச்சியடைந்த ஒரு வடிவமாகவுமே இப்போது இந்தக் தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன.

காந்தி பிறந்த குஜராத்தில் மாநிலத்தில் மத வெறித் தாக்குதல்கள் இத்தனை உச்சநிலை அடைந்திருப்பதற்கு இந்து வெறி அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தும் அரசியல்வாதிகளே குறிப்பாக இன்றைய பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியாளர்களே காரணம் என்ற குற்றச்சாட்டு பலவலாக எழுப்பப்படுகிறது.

இதற்கு குஜராத் மாநில ஆளுங்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியைச் சார்ந்த கேசுபாய் பட்டேல், இத் தாக்குதல் தொடர்பாக தெரிவித்த கருத்துக்களே போதிய சான்றுகளாகும். அவர் சொன்னார்: "இங்கு நடந்தது ஒன்றும் பெரிய கலவரமல்ல. கர்நாடக மாநிலத்தில் நடந்ததுபோல கொலைகள் நடந்திருந்திருந்தாலோ, அல்லது துப்பாக்கிகள் பிரயோகிக்கப் பட்டிருந்தாலோ இதை ஒரு பெரிய கலவரம் என்று சொல்லலாம். ஆங்கிலப் பத்திரிகைகள்தான் இதைப் பெரிதுபடுத்திக் காட்டியிருக்கினறன..."

அவர் மேலும் சொன்னார். ஹிந்து ஜாகன் மஞ்ச் (HJM) நத்தார் அன்று நடத்திய அமைதியாக ஊர்வலத்திற்கு 40-50 ஆதிவாசிக் கிறிஸ்தவர்கள் கல்லெறிந்ததைத் தொடர்ந்தே நிலைமை சீர்குலைந்தது. இரு குழுக்களும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. பொலிஸ் கண்ணீர்ப்புகை, குண்டாந்தடி அடி என்பவற்றைப் பாவித்து கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது. ஆனால், தப்பியோடிய ஒரு கிறிஸ்தவ அணி அருகிலுள்ள ஒரு அனுமார் கோவிலை உடைத்துவிட்டு ஓடியது. இதனால் ஆத்தரமடைந்த இந்து ஆதிவாசிகள் கிறிஸ்தவ தேவாலயங்களைத் தாக்கியுள்ளனர். இவை உண்மையில் தேவாலயங்கள் அல்ல வெறும் குடிசைகளே!

"கிறிஸ்தவர்களாக இந்துக்களை மதம் மாற்றுவது காரணமாக அங்கு ஒரு வகையான பகைமைச் சூழல் உருவாகியுள்ளது. டாங்ஸில் 500 - 700 கிறிஸ்தவர்களே 40 வருடங்களுக்கு முன் இருந்தார்கள். இப்போதோ அவர்களது தொகை 60,000 ஆக அதிகரித்துள்ளது. இதற்காகத்தான் கிறிஸ்தவ மிசனாரிகள் அங்குவேலை செய்கின்றன. பொய்யான அற்புதங்களை கூறி மக்களை ஏமாற்றுகிறார்கள். அவர்களது படிப்பறிவின்மையையும், வறுமையையும் பயன்படுத்தி மதம் மாற்றுகிறார்கள். இது அங்கு நிலைமையை மோசமாக்கியுள்ளது. கிறிஸ்தவர்கள் தமது மதத்தைப்பரப்புவதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. அதற்காக இப்படிச்செய்வதை அனுமதிக்க முடியாது...

- இவை முதலமைச்சரின் வார்த்தைகள்! மத்திய அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத - பரவலான எதிர்ப்பின் காரணமாக - தலையீட்டால் நிலைமை கட்டுப்படுத்திவிட்டதாகத் தெரிகிறது.

ஆயினும், சிறுபான்மை மதங்களுக்கெதிரான இந்து அடிப்படைவாத வெறி குறைந்ததாகத் தெரியவில்லை!

இந்திய வரலாறு இந்துமத வெறியின் வரலாராக எழுதப்படுவதற்கான சம்பவங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் இன்றைய ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும்!

> இங்கு நடந்தது ஒன்றும் பெரிய கலவரமல்ல.
> கர்நாடக மாநிலத்தில் நடந்ததுபோல கொலைகள் நடந்திருந்திருந்தாலோ,
> அல்லது துப்பாக்கிகள் பிரயோகிக்கப் பட்டிருந்தாலோ
> இதை ஒரு பெரிய கலவரம் என்று சொல்லலாம்.
> ஆங்கிலப் பத்திரிகைகள்தான் இதைப் பெரிதுபடுத்திக் காட்டியிருக்கினறன...

தகவல் புரொன்லைன்

நன்றி - நூலகத்திட்டம்



# பயங்கரவாத ஒழிப்பியக்கம்: பேரினவாதத்தின் நவ வியூகம்?



"...சிங்கள மக்கள் இனவாதிகள் என்று கூறுகிறார்கள். இன்று சிங்கள மக்களுக்கென்று ஒரு சிங்களக் கட்சியாவது உண்டா, இருக்கின்ற கட்சிகளெல்லாம் தமிழர்களுக்குச் சார்பான கட்சிகள். ஆனால் சிங்கள மக்களை இனவாதக் கட்சிகள் எனக் கூறுகின்ற தமிழ்க் கட்சிகள் தமிழர்களுக்காகவே அமைத்துக் கொள்ளப்பட்ட கட்சிகள். தமிழீழம் கோரும் கட்சிகள். தமிழீழம் என்கின்ற சொல்லைத் தமது கட்சிப் பெயரில் கொண்டுள்ள கட்சிகள். இப்படிப்பட்ட நிலையில் தான் நாங்கள் சிங்கள பௌத்தர்களின் எதிர் காலத்தைப் பற்றி தீவிரமாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது..."

இவ்வாறு கடந்த ஜனவரி 14ஆம் திகதியன்று கொழும்பு பொது நூலக மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் பயங்கரவாத ஒழிப்பியக்கத்தின் தலைவர் சம்பிக்க ரணவக்க உரையாற்றியிருந்தார்.

பயங்கரவாத எதிர்ப்பியக்கத்தினால் (National Movemennt Agaist Terrorism) அமைக்கப்பட்டுள்ள "பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான தேசிய செயற்திட்டம்" (National Plan Of Action Against Terrorism) எனும் பிரகடனத்தை பகிரங்கமாக சிங்கள மக்களின் முன்வைப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்திலேயே அவர் அவ்வாறு உரையாற்றியிருந்தார்.

## வெற்றிகரமான கூட்டம்!

இக்கூட்டத்திற்கான பிரச்சாரங்கள் பாரிய அளவில் செய்யப்பட்டிருந்தன. திவய்ன, The Island போன்ற பத்திரிகைளிலும் விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன. அது தவிர சட்டன, சிங்கள பௌத்தயா, ஹெல ருவண, சிங்க ஹண்ட போன்ற பேரினவாதப் பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டிருந்தன. ஒரு வாரத்துக்கு முன்னிருந்தே கொழும்பிலும் அதற்கு வெளியிலும் பெருமளவு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அச்சு செய்யப்பட்ட 1.5 x 2 அடி அளவிலான போஸ்டர்களும் கையால் வரையப்பட்ட 4 x 2 அடி அளவிலான போஸ்டர்களும் அருகருகே பெருமளவில் ஒட்டப்பட்டிருந்தன. இரண்டு நாட்களுக்கு ஒரு முறை இப் போஸ்டர்கள் திருப்பித் திருப்பி ஒட்டப்பட்டன. கூட்டம் நடந்த அன்று மண்டபத்துக்கு அருகிலும், வெளிப் பாதைகளிலும் "தாய் நாடு உன்னை அழைக்கிறது" என்று அறைகூவும் பெரிய கட்டவுட்களும் காணப்பட்டன. மண்டபத்துக்கு வெளியில் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் வெளியிடப்பட்டுள்ள "பயங்கரவாத ஒழிப்பு தேசியத் திட்டம்" என்ற பிரசுரமும் சிங்கள இனவாதப் பத்திரிகைகள் சிலவும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. கண்டிய சிங்கள சாரி அணிந்த கையில் மொபைல் தொலைபேசிகளுடன் நின்று கொண்டிருந்த உயர் மத்திய தர வர்க்கப் பெண்கள் கூட துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பு, நூல், பத்திரிகைகள் விற்பனை என வீதிக்கு இறங்கி செயற்பட்டனர். வர்க்கம், பால், சாதி போன்ற நிலைகளைக் கடந்து -பேரினவாத- இனத்துவ நடவடிக்கைகளின் செயற்பாட்டாளர்களாக இவர்கள் இருப்பதை இவை காட்டின.

பொலிஸ் பந்தோபஸ்தும் கொடுக்கப்பட்டிருந்தது. கூட்டத்துக்கு பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். மண்டபத்தில் கூட்டம் நிரம்பி வழிந்ததால் ஏனையோர் மண்டபத்துக்கு வெளியில் உரையை மாத்திரம் கேட்டுக் கொண்டிருந்தனர். கலந்து கொண்டிருந்த சிலரது வாகனங்கள் மண்டபத்துக்கு வெளியில் இருந்தன. அவற்றில் இராணுவ அதிகாரி ஒருவரது காரும் ஒன்று. சீருடை தரித்த அவரது சாரதி அக்காருடன் காத்திருந்தார். இவ் அமைப்புடன் முக்கிய படையதிகாரிகள் சிலர் செயற்பாட்டாளர்களாக இருப்பதாக எமக்கு ஏற்கெனவே தகவல் தெரிந்திருந்ததால் அது எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தாவிட்டாலும் வந்திருப்பவர் யார் என்பதை அறிய கிடைக்கவில்லை. சென்ற வருடம் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யக் கோரி விகாரமகாதேவி பூங்காவிலிருந்து பிரித்தானிய தூதுவராலயத்துக்கு ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம் செய்து தூதரகத்துக்கு மகஜர் சமர்ப்பித்த போது அதில் பிரிகேடியர் ஜானக்க பெரேராவும் சிவில் உடையில் கலந்து கொண்டிருந்தார். இவர்களின் இன்னுமொரு செயற்பாட்டாளராக பிரிகேடியர் லக்கி அல்கமவும் இருக்கிறார் என்பதை இவர்களின் செயற்பாடுகளை அவதானித்து வருபவர்கள் அறிவர்.

## பயங்கரவாத ஒழிப்பியக்கம் பின்னணி

இவ்வியக்கம் கடந்த 1998 மார்ச் 05ஆம் திகதியன்று மருதானையில் வெடித்த குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். சென்ற வருடம் இலங்கையின் 50வது ஆண்டு சுதந்திரப் பொன்விழா கண்டியில் நடத்த திட்டமிருந்த போது கண்டி தலதா மாளிகையருகில் குண்டு வெடித்ததைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், வன்முறைச் சம்வங்களுக்குப் பின்னால் இருந்த அமைப்புகள் முறைப்படியான வேலைத்திட்டத்துடன் நிறுவனமயப்பட்டு இருக்கவில்லை. ஆனால் கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு விட்ட சிங்கள வீர விதான அமைப்பின் பல்வேறு துணை நிறுவனங்கள் அமைக்கப்பட்டு வந்தன. ஆனால் அத்துணை நிறுவனங்களில் சிலவற்றைத் தான் சிங்கள வீர விதான இயக்கம் தனது துணை நிறுவனமென்று உரிமை பாராட்டியிருந்தது. சிலவற்றை உரிமை பாராட்டவில்லை. அப்படி உரிமை பாராட்டமல் அமைக்கப்பட்டது தான் ப.ஒ.இ. என்கிற அமைப்பு.

மருதானைக் குண்டு வெடிப்போடு பெரிய ஆர்ப்பாட்டம், ஊர்வலம், துண்டுப்பிரசுர விநியோகம், மகஜர், கையெழுத்து வேட்டை, பொதுக் கூட்டங்கள் என ஆரவாரமாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்புக்கு சிங்கள வீரவிதான அமைப்பின் இரகசியத் தலைவர் எனக் கருதப்படும் சம்பிக்க ரணவக்கவே பகிரங்கத் தலைவராகச் செயற்படுகிறார்.

## நவ பேரினவாதத்துக்கு தலைமை கொடுக்கும் சம்பிக்க

சம்பிக்க ரணவக்க முன்னர் ஜாதிக்க சிந்தனய அமைப்பினை வழி நடத்தியவர். அப்போது நளின் டி சில்வா, குணதாச அமரசேக்கர, எஸ்.எல்.குணசேகர, மாதுலுவாவே சோபித்த தேரோ போன்றவர்கள் தனித்தனியான அணிகளாக இருந்தனர். இவர்களில் சம்பிக்க ரணவக்க அதற்கு முன்னர் ஜே.வி.பி. பின்னணியைக் கொண்டிருந்தார். சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு அரசியல் பொருளாதார வடிவம் கொடுத்து "ஜாதிக்க சிந்தனய" எனும் பேரில் கோட்பாடாக உருவாக்கிக் கொடுத்தார் அவர். அப்போதெல்லாம் தனித்தனி அணிகளாக இருந்தாலும் பேரினவாதப் நோக்கில் ஒருமித்த கருத்திருந்ததால் பல்வேறு செயற்பாடுகளை இவர்கள் சேர்ந்து செய்தனர். ஆனாலும் சம்பிக்கவின் சளைக்காத உழைப்புக்கு முன்னால் ஏனையோர் தாக்குப் பிடிக்கவில்லை. எனவே தான் சிங்கள பௌத்த பேரினவாதத்தை நிறுவனப்படுத்தும் வேலையில் சம்பிக்கவால் வெற்றி காண முடிந்தது. ஏனையோர் தனிமைப்பட வேண்டியேற்பட்டது.

சிங்கள வீரவிதான அமைப்பு இன்று பல்வேறு சிங்கள பௌத்த அமைப்புகளை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்துள்ள நிறுவனம். அதன் ஒரு பணியாகவே 1996 டிசம்பர் 18 அன்று சிங்கள ஆணைக்குழுவும் அமைக்கப்பட்டு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான வேலைத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. இச் சிங்கள ஆணைக்குழுவை வீரவிதான அமைப்பு நேரடியாக நடத்தவில்லை. மாறாக 42 சிங்கள பௌத்த அமைப்புகளை அணி திரட்டி தேசிய ஒருங்கிணைப்புக் கமிட்டி எனும் அமைப்பைத் தொடங்கி அதன் தலைமையிலேயே சிங்கள ஆணைக்குழு செயற்பட்டது.

## நிறுவனமயப்படும் பேரினவாதம்

சிங்கள வீரவிதான அமைப்பு இன்று நாடளாவிய ரீதியில் மூலை முடுக்குகளாக கிளைகளை அமைத்து தீவிரமாகச் செயற்பட்டு வரும் அமைப்பு. இன்று ஜே.வி.பி.க்கு அடுத்ததாக மிகவும் திட்டமிட்ட முறையில் அமைப்பை நாடு முழுவதும் மூலை முடுக்குகளெங்கும் தொடக்கி, பரப்பி, பலப்படுத்தி வரும் அமைப்பு வீர விதான அமைப்பு தான். அதன் ஒரு கிளையாக அமைக்கப்பட்டுள்ள இந்த ப.ஒ.இ.வ கடந்த ஒன்பது மாதங்களுக்குள் 12 முக்கிய பெரிய செயற்பாடுகளைச் செய்துவிட்டிருப்பதாக அறிவித்துள்ளது.

ஏற்கெனவே சரிநிகரில் சிங்கள பௌத்த பேரினவாதம் நிறுவனமயப்பட்டு பலப்படுத்தப்பட்டு வருவதை அவ்வப்போது வெளிப்படுத்தி வந்தோம். அந்த நிலைமை இன்று மேலும் உறுதியாகியுள்ளது. பேரினவாதம் நிறுவனமயப்பட்டு வருகிற ஆபத்தை உணராத வரை தமிழ், முஸ்லிம் மக்கள் தங்களுக்கு நேரவிருக்கின்ற எதிர்கால ஆபத்தை தடுத்து நிறுத்த முடியாது.

இன்று பேரினவாதம் நிறுவனமயப்பட்டுள்ள அளவு அதில் சிக்கியுள்ள ஒடுக்கப்படும் மக்கள் ஜனநாயக ரீதியில் நிறுவனமயப்படாதிருப்பது எதிர்காலம் குறித்த பீதியை மேலும் அதிகப்படுத்துகிறது என்றே கூறலாம்.

இன்று வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத தேசியத் திட்டம் வெறுமனே புலிகளுக்கு எதிரானது என்று கருதினால் அது தவறு. அது ஒட்டு மொத்தத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் சனநாயக கோரிக்கைகளுக்கும் அவர்களின் நிம்மதியான வாழ்வுக்கும் எதிரானது. இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றை சாராம்சமாக அன்றைய பிரதம பேச்சாளர் சம்பிக்க உரையாற்றும் போது கூடியிருந்தவர்கள் மிகவும் ஆழமாக அவதானித்தனர். அவ்வுரையைக் கேட்டுக் கொண்டிருந்த சில சிங்கள நண்பர்கள் அவ்வுரையைக் கேட்கும் எந்தச் சாதாரண சிங்களவரும் மூளைச்சலவைக்குள்ளாகிவிடுவர் என்றார். அவரின் உரைக்கு இடையில் அவ்வப்போது கூடியிருந்தவர்கள் மத்தியில் இருந்து வந்த கரகோசம் எத்தனையோ விடயங்களை வெளிப்படுத்தியது.

இக் கூட்டத்தில் உரையாற்றிய சம்பிக்க...

"...புலிகள் அமைப்பு பீரங்கிகள், மிசையில், விமானம் போன்றவற்றை வாங்குவது எம்மோடு விளையாடுவதற்கல்ல. அவர்கள் இன்று ஏவுகணைகளைத் தயாரிக்கவும் முயற்சி செய்கின்றனர். இந்நிலைமையில் புலிகளை மேலும் விளையாடுவதற்கு இடமளிக்க முடியாது. நாங்கள் அடிபணியவும் மாட்டோம். எனவே அரசியல்வாதிகள் ஆடிய ஆட்டம் போதும். அந்த ஆட்டங்களுக்குப் பதில் கொடுக்க வேண்டிய காலம் வந்து விட்டது. மக்களை அதற்காக நிறுவனமாக அணிதிரளும்படி கூறுகின்ற திட்டமே இதில் உள்ளது..."

## திட்டம் என்ன? ஆடுத்தது இராணுவ வடிவம்

அத்திட்டம் பிரதானமாக ஐந்து விடயங்களை உள்ளடக்கியது. (அருகிலுள்ள 9ஆம் பக்கத்தைப் பார்க்க)

அதன் சாராம்சம் என்னவென்றால் "சிங்கள மக்களை தமிழீழ போராட்டத்துக்கு எதிராக கோட்பாட்டு ரீதியில், அரசியல் ரீதியில் ஆயுத ரீதியில் தயார்படுத்துவது. போரின் மூலம் முற்றாக துடைத்தெறிவது. இதற்கு சிங்கள மக்களை பலப்படுத்துவது. சிங்களப் படையைப் பலப்படுத்துவது. தமிழ் மக்களை தமது கோரிக்கைகளிலிருந்து வாபஸ் பெறவைப்பது. தமிழ் ஈழப்போராட்டத்தில் பங்குகொள்ளும் எவரும் பிடிபட்டால் அத்தண்டனையை அவரது குடும்பத்தவர்களுக்கும் கிடைக்கச் செய்வது..." போன்றவற்றை உள்ளடக்கியதே இத்திட்டம்.

பேரினவாதம் இது வரைகாலமில்லாத அளவு நவ வடிவம் பெற்று வளர்வதற்கு இது ஆலோசனைகளைக் கூறுவதை இதைப்பார்ப்பவர்கள் அவதானிக்க முடியும்.

இதற்கு முன்னர் அதற்கு ஒரு உறுதியான கோட்பாட்டு வடிவம் இருக்கவில்லை. இதற்கு முன்னர் சரியான நிறுவன வடிவம் இருக்கவில்லை. உறுதியான அரசியல் வடிவம் இருக்கவில்லை. இன்று அத்தனையையும் அது பெற்று வருவதையும் அவை பலப்படுத்தப்படுவதையும் காண முடிகிறது. இனி பேரினவாதம் பெறவேண்டிய வடிவம் இராணுவ வடிவம் தான். அதற்குரிய காலம் தொலைவிலில்லை என்றே தெரிகிறது.

இது வரை காலம் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு தலைமை கொடுத்த அரச கட்டமைப்பு இன்று சிங்கள சிவில் மக்கள் மத்தியிலும் ஊடுருவி பலமடைந்து வருகிறது. இதன் விளைவு எதிர்காலத்தில் மோசமாக இருக்கப்போகிறது என்பதைத் தான் அண்மைய போக்குகள் காட்டுகின்றன.

## நவீன வியூகம்

இன்று சிங்கள சிவில் மக்கள் மத்தியில் தோன்றி, பலம் பெற்று வருகின்ற பேரினவாத அமைப்புகளை நோக்குகின்ற போது அரசுக்கு வேலை மிச்சம். தமிழ் மக்களுக்கு எதிரான ஐதீகத்தை சிங்கள மக்கள் மத்தியில் வளர்த்தல், தமிழ் மக்களை ஒடுக்குதல், அதனை மூடிமறைத்தல், அதனை எதிர்த்து ஒலிக்கும் குரல்களை அடக்குதல். அக்குரல்கள் நீதியற்றவை என்று சர்வதேச பிரச்சாரம் செய்தல் என அரசு செய்து வந்த அனைத்து செயற்பாடுகளையும் இன்று சிவில் அமைப்புகள் செய்கின்றன.

அரசுக்கு வேலை மிச்சம் அரசு பேரினவாத குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பலாம். படையினரின் உள நிலையை வளர்த்தெடுக்க இனி அரசு அதிகம் சிரமம் படத்தேவையில்லை. அதனை சிங்கள சிவில் சமூகம் தானே பொறுப்பேற்று நடத்தும். தமிழ் மக்களை கண்காணிக்க, சந்தேகிக்க உளவுத்துறை தேவையில்லை. அதனையும் சிவில் சமூகம் செய்யும். சர்வதேச பிரச்சாரத்தைக் கூட அரசு செய்யத் தேவையில்லை இவ்வமைப்புகளின் கிளைகள் அவற்றை செய்யும் அத்துடன் இன்று கணணியில் இன்டர்நெட் வெப் தளங்களை பல சிங்கள பேரினவாத அமைப்புகள் வைத்துள்ளன அவற்றுக்கூடாக தமிழ் மக்களுக்கெதிரான பிரசாரங்களைச் செய்கின்றன. அரசு அதனை சர்வதேசத்துக்கு சொன்னால் அது ஒருதலைபட்சமாக இருக்கும். ஆனால் ஒரு சிவில் அமைப்பு ஒன்று அவ்வாறு கூறும் போது அதற்கு பலம் அதிகம்.

## சர்வதேசப் பிரச்சாரம்

சிங்களப் பேரினவாத வெப் தளங்களாக Sinhaya.com மற்றும் voiceoflanka.com போன்ற பல வெப் தளங்கள் இருக்கின்றன இதில் voiceoflanka.net.homepage.htm எனும் வெப் தளத்துக்குப் போனால் அது பல சிங்கள பௌத்த வெப் தளங்களுடன் இணைப்பை ஏற்படுத்தியுள்ளதைக் காணலாம். எனவே இந்தத் தளத்துக்குப் போனால் மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் சிங்கள அமைப்பான சமாதானம், ஐக்கியம், மனித உரிமைகள் என்பவற்றுக்கான இலங்கை அமைப்பு எனும் (SPUR-Society for Peace, Unity and Human Rights for Sri Lanka) அமைப்பு மற்றும் இலங்கை அரசின் பிரச்சாரத் தளங்களுக்கும் போகலாம். இதில் புலிகள் இதுவரை நடத்தியதாக பல குண்டு வெடிப்புகள், மக்கள் மீதான தாக்குதல்கள், யுத்த நிலவரங்கள், அரசியல் நிலவரங்கள், செய்திகள் என பல்வேறு விபரங்களின் பட்டியல்களைக் காணக் கூடியதாக இருக்கிறது. முன்னரெல்லாம் ஈழப் போராட்டத்தை ஏகாதிபத்திய சதியென்றும், போராளிக்குழுக்களை அமெரிக்க சீ.ஐ.ஏ. கருவிகள் என்றும் அர்த்தம் கற்பித்த பேரினவாத சக்திகள் இன்று அப்படிக் கூறுவதில்லை. தந்திரோபாய ரீதியில் அவற்றை பகைத்துக் கொள்ளக்கூடாது என்பதும் இன்று புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் சிலவற்றை செய்திருப்பதாகவும் அவை கருதுகின்றன. தங்களது வெப் தளங்களில் அமெரிக்கா பிரித்தானியா, கனடா போன்ற நாடுகள் புலிகளுக்கு எதிராக விடுத்துள்ள அறிக்கைகளை ஆதாரம் காட்டுகின்றன. இந் நிலைமை அரசுக்கு பெரிதும் சாதகமானது. எனவே அரசே இரகசியமாக இவ்வமைப்புகளுக்கு பல்வேறு வழிகளில் ஆதரவு வழங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஒரு புறம் தமிழ் மக்களின் மீதான ஒடுக்குமுறையும் அதற்கெதிரான போராட்டத்தின் அவசியமும் அதிகரித்து வருகின்ற அதேவேளை மறுபுறம் அதற்கு நேரெதிரான போக்கை சிங்கள சமூகத்தின் மத்தியில் காண முடிகிறது. நம்பிக்கை இழக்க வைக்கின்ற நிலைமைகள் மேலும் அதிகரித்த வண்ணமுள்ளன. இவை துருவமயமான போக்குக்கு அடிகோலுபவையாக ஆகிவிடுகின்றன.

அந்த வகையில் இன்றைய பேரினவாதத்தின் நவீன வடிவத்திலான வியூகங்களை விளங்கிக் கொள்ளல் அவசியம்.

**-கோமதி**

—9

நன்றி - நூலகத்திட்டம்



இத்திட்டம் பிரதானமாக ஐந்து தலைப்புக்களை உள்ளடக்கியது.

அதன் முன்னுரையில் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது.

"...தமிழ் இனவாதத்தினால் வழிநடத்தப்படும் பயங்கரவாதம் இன்று முழு ஸ்ரீலங்காவையும் விழுங்கிவிட்டுள்ளது. அதன் முதல் இலக்கு ஸ்ரீலங்காவின் வட கிழக்குப் பகுதிகளில் தமிழ் ஈழத்தை அமைத்துக் கொள்வது. இரண்டாவது முழு ஸ்ரீ லங்காவையும் கைப்பற்றுவது. அதன்பின் தென்னாசியாவை உலகின் தமிழ் அரசாக உருவாக்கி விடுவது. எனவே தான் இதற்காக இலங்கைக்குள்ளும், இந்தியாவிலும் கிழக்காசியாவிலும் மேற்குலக நாடுகளிலும் கோட்பாட்டு ரீதியில் பிரச்சாரம், ஆர்ப்பாட்டம் என்பவற்றுடன் சேர்த்து இராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்....

...புராதனம் தொட்டு பல்வேறு ஆக்கிரமிப்புகளுக்கு முகம்கொடுத்து வந்தாலும் எமது தனித்துவத்தைப் பாதுகாத்து வருகிறோம் நாம். தமிழ் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக தலைமை கொடுப்போம். அதற்கு முன்நிபந்தனையாக தமிழ் இனவாதத்தையும் புலிப் பங்கரவாதத்தையும் முற்றாக ஒழித்துக்கட்டுவதற்காகவே இன்று தேசிய திட்டமொன்றை முன்வைத்துள்ளோம்.

இது எமது கொள்கையை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டுள்ள திட்டம். ஆனால் இது எமது மூலோபாயம் தந்திரோபாயத் திட்டம் அல்ல. ஏனெனில் அவ்வாறான மூலோபாயம் தந்திரோபாயம் பற்றிய திட்டத்தை பகிரங்கப்படுத்தி விவாதிக்க முடியாது என்பதாலேயே...."

இந்தப் பந்தி அவர்களுக்கென்று இரகசியத் திட்டமும் திட்டமிட்ட வேலைமுறையும் உள்ளன என்பதை உறுதிப்படுத்துகிறது என்பதை வாசகர்கள் கவனிக்க.

இதில் உள்ள ஐந்து தலைப்புகளில் முதலாவது "பயங்கரவாத ஒழிப்புத் தேசியத் திட்டம்." அதில்...

"...புலிப் பயங்கரவாதத்துக்கு காரணம் தமிழ் மக்களுக்குள்ள விசேடப் பிரச்சினை என்பதை நாங்கள் உறுதியாக நிராகரிக்கிறோம்.... தமிழ் மக்களை வென்றெடுப்பதற்கான ஒரேயொரு வழி சமஷ்டி அரசியலமைப்பு என்பதையும் நாங்கள் உறுதியாக நிராகரிக்கிறோம். புலிகளை போரின் மூலம் தோற்கடித்து குறைந்தபட்ச தீர்வுக்கு பணிய வைக்க முடியும் என்கின்ற போலித்தனமான கற்பனையிலும் நாங்கள் இல்லை. 1983இன் பின்னர் சிங்கள மக்களுக்கெதிரான 127 தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர்.

**...இது எமது கொள்கையை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டுள்ள திட்டம். ஆனால் இது எமது மூலோபாயம் தந்திரோபாயத் திட்டம் அல்ல. ஏனெனில் அவ்வாறான மூலோபாயம் தந்திரோபாயம் பற்றிய திட்டத்தை பகிரங்கப்படுத்தி விவாதிக்க முடியாது என்பதாலேயே...."**

சொத்தக்களை நாசமாக்கியிருக்கின்றனர்...

போருக்குக் காரணம் புலிப் பயங்கரவாதமே. புலிப் பயங்கரவாதத்துக்கு அடிப்படை மிலேச்சத்தனமே. அதற்கு வலுவூட்டியிருப்பது பாதாள உலகமே. புலிகளின் தலைவர் பாதாள உலகத்தின் வீரன். அவர்கள் நிதி பெறுவது ஆயுத மற்றும் போதைப் பொருள் கடத்தல் வியாபாரத்தின் மூலமே. அரசின் கவனமின்மை காரணமாகவும் படையின் ஆயுதங்கள் பிலகளை அடைகின்றன. அது சிங்கள மக்களின் பணம். அதை விட அரசின் வெளியுறவுக் கொள்கையில் உள்ள பலவீனம் காரணமாகவும் புலிகள் அவ்வப்போது பலம் பெற்ற விடுகின்றனர். எனவே புலிப்பங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில் வெற்றிபெறுவது கட்டாயமாக உள்ளது. அதற்காக

சிங்கள மக்களை யுத்தத்துக்கு பிரக்ஞையுடன் பங்குகொள்ளச் செய்வது.

-போர் வீரர்கள் சோர்வடையாமல் போரிடுவதற்காக உறுதிமிக்க கருத்தாக்கத்தை கட்டியெழுப்புவது.

-ஊழல்களில்லாத வகையில் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்தம்வகையில்

# "பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான தேசிய செயற்திட்டம்"

ஆயுதங்களை உற்பத்தி செய்வது.

-தமிழ் மக்களின் பிர்சினை என்கின்ற ஐதீகத்துக்கு எதிரான கருத்தாக்கத்தை கட்டியெழுப்புவதனூடாக சர்வதேச சமூகத்தை வென்றெடுப்பது.

-ஈழம்வாத ஐதீகத்திலிருந்து தமிழ் மக்களை மீட்பது."

என்கிறது. இரண்டாவது தலைப்பான "தேசத்திற்கான போர் இலக்கு" என்கின்ற பகுதியில் சாராம்சமாக

"...1. யுத்தத்துக்கு போதுமான பொருளாதார மற்றும் கருத்து நிலையை வளர்ப்பது. இதில் மக்களை பிரக்ஞைபூர்வமாக ஈடுபடுத்துவதற்கு மனித மற்றும் பொருள் வளங்களை பெறுவதற்காக அரச, தனியார், தொழில் நிலையங்கள் கல்வி நிலையங்கள் என்பவற்றில் பயங்கரவாத எதிர்ப்புக் குழுக்களை உருவாக்குதல். அதனை பாதுகாப்பு துறையுடன் இணைத்து உளவுப் பணிகளிலும் பாதுகாப்புப் பணிகளையும் மேற்கொள்ளல். இதில் அரசியல் தலையீடுகளை சேராது தடுத்தல்...."

இத் தலைப்பின்கீழ், கீழ் வரும் உப தலைப்புகளில் விரிவாக பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அத்தலைப்புகள்...

"..2. புலிப்பயங்கரவாதத்தை ஒழிக்கின்ற நோக்குடன் சகல அரசியற் கட்சிகள் மற்றும் நிறுவனங்களை தேசிய ரீதியில் ஒருங்கிணைத்தல்.

3. பாடசாலை கல்வித் திட்டத்தை தேசாபிமானத்தை வலியுறுத்தும் வகையில் சீர்திருத்தம் செய்தல்.

4. தேசாபிமானம் மற்றும் உண்மையான பிரச்ஞையுணர்வை உயர்த்தும் நோக்குடன் கலை நிகழ்ச்சிகளை விரிவாக்குதல்.

5. சகல தொடர்புசாதன நிறுவனங்களுக்கூடாக புலியெதிர்ப்பு போராட்டத்துக்கான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

6. புலிகள் அமைப்புக்கு எதிரான சட்டத்தை மேலும் திருத்தி அதற்கு துணைபுரியும் சகலரையும் கைது செய்து அடக்குதல்.

7. தெற்குக்கு இடம்பெயரும் தமிழர்களின் பயங்கரவாத எதிர்ப்புணர்வை உறுதிப்படுத்துவது.

8. தமிழ் மக்களை இல்க்காகக் கொண்ட திட்டமிட்ட கல்வி மற்றம் பிரச்சார நிகழ்ச்சிகளை உருவாக்கல்.

9. தமிழ் சமூகத்துக்கு இடையூறாக செயற்படும் சகல தமிழ் அமைப்புகளையும் சட்டவிரோத அமைப்புகளாக்கி அவற்றினை நிராயுதபாணிகளாக்கி கைது செய்து தடுத்துவைத்தல்.

10. புலிப் பயங்காரவாதத்துக்கும் பிரிவினைவார்தத்துக்கும் எதிராக தமிழ் சமூகத்தை மையப்படுத்த உச்ச அளவு துணை செய்தல்.

11. முஸ்லிம் மக்களை பிரிவினைவாதத்திலிருந்து மீட்கின்ற வேலைத்திட்டத்தை பரவலாக்கல்...."

இதை விட "போர்க்களத்துக்கு தேவையான அளவு போர்வீரர்கள்." எனும் மூன்றாவது தலைப்பின் கீழ் உள்ள உப தலைப்புகளை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறோம்.




"1. யுத்தத்துக்கான யுத்த நிகழச்சி நிரலொன்றினை தயாரித்தல்.

2. படைவீரர்களின் தேசாபிமான உள நிலையை பலப்படுத்தல்.

3. போர்வீரர்களின் உளநிலையை வீழ்த்துகின்ற நிகழச்சிகளை தடுத்து நிறுத்துவது.

4. சேருகின்ற சகல படையினருக்கும் போர்ப் பயிற்சிக்கு அப்பால் கல்வித் தரத்தையும் உயர்த்தல்.

5. பாதுகாப்புத் துறையினருக்கு விசேட பயிற்சிகளை வழங்குவது.

6. படைக்கு ஆட்சேர்ப்புக்காக பல்கலைக்கழகம், பாடசாலை, இளைஞர் அமைப்புகள் என்பவற்றை இலக்காக வைத்த திட்டமிட்ட நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல்.

7. சிவில் பாதுகாப்பு நடவடிக்கைக்காக புதிய பாதுகாப்பு பிரிவை ஆரம்பித்தல்.

8. வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்துதல் இதற்கு தமிழர் தாயக கோட்பாட்டை வலியுறுத்தும் எவரையும் அரசவிரோதியாகியாக்கி தண்டனையளித்தல்...." என்கின்றது.

நான்காவது தலைப்பான "படையினருக்கு போதிய நவீன போர்த் தளபாடங்கள்" எனும் பகுதியின் உப தலைப்புகள் இவை...

1. ஆயுதம் தயாரித்தல்.

2. போர்த்தளபாடங்கள் பற்றிய ஆராய்ச்சி நிலையங்களை கட்டியெழுப்புதல்.

3. போர்த்தளபாடங்களை கொள்வனவு செய்வதை ஒழுங்காக திட்டமிடல்.

ஆகிய தலைப்புகளில் உள்ளவற்றின் சாராம்சத்தில்..

"...இயலுமானவரை போர்த்தளபாடங்களை உள்ளூரிலேயே தயாரிப்பது. அதற்கு தேவையான பயிற்சிகளை உள்ளூர் மாணவர்களுக்கு அளிக்க வேண்டிய தயாரிப்புகளை செய்தல். புதிய போர்க் கருவிகளை கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்கி ஊக்குவித்தல். போர்த் தளபாட கொள்வனவை தனியாருக்கு வழங்காமல் அரசே மேற்கொள்வது" போன்றவற்றை வலியுறுத்தியுள்ளது.

ஐந்தாவது தலைப்பான புலிப் பயங்கரவாதத்துக்கு எதிரான உலக அபிப்பிராயம் எனும் தலைப்பில் எட்டு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன அதில் சுருக்கமாக..

"...கடல், தரைமார்க்க பயங்கரவாத போக்குவரத்தைத் தடுக்க இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்தல். "திராவிடஸ்தான்" ("Dravidasthan") அமைப்பதை எதிர்த்து பழைய ஆரிய தொடர்பை வலியுறுத்தி இந்தியாவுடன் உறவை பலப்படுத்தல். தென்னாசிய, கிழக்கு-தென்கிழக்கு ஆசிய பௌத்த நாடுகளில் பலிகளின் பொத்த எதிர்ப்பை அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்தல். புலிகளுக்கு ஆணுசரணையாக இருக்கும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற இஸ்லாமிய நாடுகளில் இஸ்லாமியர்களுக்கு எதிரான புலிகளின் நடவடிக்கைகளை அம்பலப்படுத்தல், மேற்குநாடுகள், அமெரிக்க அவுஸ்திரேலிய நாடுகளில் வாழும் சிங்கள மக்களை நிறுவனப்படுத்தி புலியெதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு திரட்டல். தமிழ் மக்களுக்கு பிரச்சினை உண்டு என நம்பிக்கொண்டிருக்கும் உலக நாடுகளை இலக்காகக் கொண்டு புலிப்பயங்கரவாதத்துக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொள்ளல். தேவையேற்படின் புலிகள் அமைப்புக்கு எதிராக வெளிநாடுகளில் ஆயுத நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்..."

என குறிப்பிட்டுள்ள இந்த தேசியத் திட்டத்தின் இறுதியில்

"...அதிகாரத்துக்கு வரும் எந்தவொரு சக்தியென்றாலும் புலிகளை உண்மையிலேயே தோற்கடிப்பதாயின் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும். இதை விட வேறு வழியில்லை என நம்புகிறோம். இதனை தீர்ப்பதற்கு போலிப் பேச்சுவார்த்தைகள் மேலும் அழிவைத் தான் தரும். எனவே இதனை நடைமுறைப்படுத்தும்படி அனைவரும் ஆணையிடுவோம். தமிழ் இனவாதத்தை வேறோடு களைய எந்த துயர் வந்தபோதும், எந்த விலை கொடுத்தும், கருத்தியல் ரீதியாக, அரசியல் ரீதியாக, ஆயுத ரீதியாக முடிவுகட்டு கொண்டு வருவோம்..." என்கிறது.



நன்றி - நூலகத்திட்டம்





# ஆலிம்சேனை : முஸ்லிம்கள் மீதான இன்னுமொரு ஆக்கிரமிப்பு!

-அஃமத்

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒலுவில் , சம்மாந்துறை, அட்டாளைச்சேனைப் பகுதி முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான ஆயிரக் கணக்கான விவசாயக் காணிகள் 'புனித பூமி" எனும் பெயரில் சூறையாடப்பட்டு,பொன்னன்வெளிப் பிரதேசம் தீகவாபியாக மாற்றப்பட்டது. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையின்போது பறிக்கப்பட்ட காணிகளுக்கான நட்டஈடுகள் இன்னும் வழங்கப்படாத இந்நிலையில், அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒலுவில் பிரதேசத்தில் 'ஆலிமுடகாடு (ஆலிம்சேனை) பகுதியையும் இப்போது சிங்கள இனவாதிகள் விழுங்கி ஏப்பமிடத் திட்டம் தீட்டியுள்ளனர்.இத் திட்டத்தின் ஒரு கட்டமாக ஆலிம்சேனைப் பிரதேசத்தில் பௌத்த புதைபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், பௌத்தர்களுக்குச் சொந்தமான புனித பூமியான ஆலிம் சேனையை முஸ்லிம்கள் ஆக்கிரமித்து புனித சின்னங்களை சிதைக்கின்றனர் என்று பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.தீகவாபி புனித நகரின் பன்னிரெண்டாயிரம் விஸ்தீரணமான பிரதேசத்தைப் பாதுகாக்கக் கோரியும், ஆலிம்சேனைப் பகுதியிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றக் கோரியும் கடந்த ஜனவரி இரண்டாந் திகதி திகாமடுல்ல இளைஞர் அமைப்பும், அம்மாறை மாவட்ட பௌத்த காங்கிரசும் இணைந்து அம்பாறை நகர சபையில் ஒரு பொதுக் கூட்டத்தையும், ஆர்ப்பாட்டமொன்றையும் நடத்தியிருந்தனர். இந்தப் பிரச்சார நடவடிக்கைக்கும்,ஆர்ப்பாட்டத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்த சிங்களப் பத்திரிகைகள்,இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையை எதிர்த்து முஸ்லிம்களால் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் பற்றியும்ஆலிம் சேனைப் பிரதேசத்தின் உண்மை நிலையை வெளிக்கொணர்வதிலும் அதிக அக்கறை காட்டாத நிலையில், அப்பிரதேசத்தின் உண்மை நிலவரங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு சரிநிகர் ஆலிம் சேனைப் பகுதிக்குப் பயணம் ஒன்றை மேற் கொண்டது.

### ஆலிம்சேனை

அக்கரைப்பற்று - கல்முனைப் பிரதான பாதையில் அமைந்துள்ள ஒலுவில் கிராமத்தையும் பொன்னன்வெளி (தற்போதைய தீகவாபி)யையும் இணைக்கும் கிரவல் பாதையில் ஆலிம்சேனைப் பிரதேசம் அமைந்துள்ளது.ஆலிமுடகாடு என்று அழைக்கப்பட்ட இப் பிரதேசத்தில் அதிகமாக சேனைப்பயிர்ச்செய்கை செய்யப்படுவதால் இப்பகுதி ஆலிம்சேனை என்றும் அழைக்கப்படுகிறது. அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஒலுவில் கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவில் அடங்கும் பிரதேசம் இதுவாகும்.

காடாக இருந்த இப்பிரதேசம் 1929 காலப்பகுதியில் நிந்தவூர், ஒலுவில், அட்டாளைச்சேனைப் பிரதேச முஸ்லிம் விவசாயிகளால் வெட்டித் திருத்தப்பட்டது. அன்று முதல் இன்றுவரை அவர்களால் தொடர்ச்சியாக பயிர்ச்செய்கை செய்யப்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த முஸ்லிம் விவசாயிகளுக்கு, 1932 காலப்பகுதியில் அரச அதிகாரியாயிருந்த ஹரிசன் ஜோன் என்பவரால் இக் காணிகளுக்கான காணி உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.இன்னும் 1960 காலப் பகுதியில் கல்லோயா அபிவிருத்திச் சபை மட்டக்களப்பு மாவட்டத்தை (அந்தக் காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து, அம்பாறை மாவட்டம் தனியான பகுதியாக பிரித்தெடுக்கப்படவில்லை) அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் சுமார் 600 ஏக்கருக்கும் அதிகமான இக் காணிகளுக்கான காணி உத்தரவுப் பத்திரம் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மட்டுமின்றி 1978ல் காமினி திசாநாயக்கா காணி அமைச்சராக இருந்த காலத்தில் - அந்நேரம் உதவி அரசாங்க அதிபர்களாக இருந்தவர்கள் காணி அதிகாரிகளாகத் தரமுயர்த்தப்பட்டிருந்தனர்- மேற்படி ஆலிம்சேனைப் பிரதேசத்து முஸ்லிம்களுக்கு அவர்களின் நிலங்களுக்கான காணி உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. இவ் உத்தரவுப் பத்திரங்களில் சரத் சில்வா எனும் காணி அதிகாரி கையொப்பமிட்டுள்ளார். 1985ல் அடாத்தாகப் பிடிக்கப்பட்ட காணிகளுக்கு உரிமை வழங்கும் திட்டத்தின் கீழும் இக்காணிகளுக்கான உத்தரவுப்பத்திரங்கள் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்டுமுள்ளன. 1972ல் சிறீமாவின் ஆட்சிக் காலத்தில் முந்திரிகை, மரவள்ளி என்பன இப்பிரதேசத்து முஸ்லிம் விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கைக்கென வழங்கப்பட்டுமிருக்கின்றன.இந்த 1972 காலப்பகுதியில் இலங்கை மக்களின் மரவள்ளி நுகர்வுக்கான கணிசமான அளவு மரவள்ளி இப்பகுதி முஸ்லிம் சேனைக்காரர்களாலேயே வழங்கப்பட்டுமுள்ளது.

### 1990 படுகொலைகளுக்குப் பின் இன்றைய ஆலிம்சேனையின் நிலை

நெல் மற்றும் சோளம், மரவள்ளி போன்றவற்றைப் பயிரிட்டு யானைக்கும், பன்றிக்கும், பாட்டம் பாட்டமாக வந்து பயிர்களைத் தின்றழிக்கும் கிளிகளுக்கும் இரவிரவாய்க் காவல் பார்த்து 'வெந்ததைத் தின்று விதிவந்தால் சாவோமெ'ன்று தங்கள் பாட்டில் வாழ்க்கை நடாத்தி வந்த சுமார் 107 முஸ்லிம் குடும்பங்களும், ஆலிம் சேனையில் 1990ல் புலிகள் நடாத்திய படுகொலையில் 17 முஸ்லிம்கள் கொல்லப்பட்ட சம்பவத்தோடு தங்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டி அயல் கிராமங்களான நிந்தவூர், ஒலுவில் மற்றும் பாலமுனை ஆகிய கிராமங்களில் சென்று தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளனர்.

" மா, பலா, வாழை, முந்திரிகை என்று எல்லாப் பயிர்களையும் நட்டு ஒரு சோலை போல் இந்த இடத்தை வைத்திருந்தோம், 1990ல் புலிகள் 17பேரைக் கொலைசெய்த பிறகு பயத்தில் எல்லாவற்றையும் அப்படியே விட்டு விட்டு நாங்களெல்லாம் இங்கிருந்து சென்றுவிட்டோம்.நாங்கள் நட்டு வளர்த்த மரம், செடி கொடி எல்லாவற்றையும் யான்னயும், பன்றியும் அழித்துத் துவம்சம் செய்துவிட்டன" என்று ஆதங்கப்படுகிறார் தற்போது ஒலுவில் கிராமத்தில் வசிக்கும் வெள்ளைத்தம்பி(40) எனும் விவசாயி. இவர்கள் ஆலிம்சேனையில் வாழ்ந்த வாழிடங்கள் இன்று, முட்புதர்கள் மண்டிய நிலையில் இடிந்தும், அழிந்தும், பாழடைந்து போயுள்ளதை அங்கு காணக்கூடியதாயிருந்தது. இப்போது ஆலிம் சேனையில் போகத்திற்குப் போகம் வந்து பயிர் செய்யும் விவசாயிகளையே காணக்கூடியதாயிருக்கிறது.

ஆலிம்சேனையில் பற்றைகளால் மூடப்பட்ட கிரவல் திடலாக இருக்கும் பகுதிகளை, அக் காணிச் சொந்தக்காரர்கள் அரச, மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும், கொந்தராத்துக்காரர்களுக்கும் அபிவிருத்தி வேலைகளுக்காக கிரவல் வெட்டியெடுக்கக் கொடுத்துள்ளனர். குறிப்பாக மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதி அபிவிருத்திக்கும், அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதி அபிவிருத்திக்கும், தென் கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்திக்கும் கூட இப் பகுதியிலிருந்தே கிறவல் வெட்டி எடுக்கப்பட்டு வருகின்றது.




ஏ.பி.தாவூத்

காணி உத்தியோகத்தர்,

அட்டாளைச்சேனை பிரதேச செயலகம்.

இந்த ஆலிம்சேனைப் பிரதேசத்தில் சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாக முஸ்லிம்கள் பயிர் செய்து வருகின்றனர்.இந்தக் காணிகளுக்கான உத்தரவுப் பத்திரங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக, கிறவல் வெட்டப்பட்டுவந்த இப்பிரதேசத்தில், குறிப்பிட்ட காணியில் தொல்பொருட்கள் காணப்பட்டதாக அறிந்தவுடன் அத் தொல் பொருட்களைப் பாதுகாக்கும் பொருட்டு,உடனடியாக அப்பகுதி கிராம சேவகருடன் தொடர்பு கொண்டு அப்பகுதியிலிருந்து கிறவல் வெட்டுவதை தடைசெய்துள்ளோம். அரசியல் இலாபம் கருதி சிலர் வெளியில் பிரச்சாரம் செய்வது போல இது தீகவாபி புனித பிரதேசத்திற்குச் சொந்தமான காணியல்ல. ஆலிம்சேனையிலிருந்து சுமார் 4 கிலோமீற்றர் தூரத்திலேயே கல்வேலிகள் கொண்டு எல்லையிடப்பட்டுள்ள 'தீகவாபி புனித பிரதேசம் ' உள்ளது.



தொல்பொருள் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் காணியின் சொந்தக்காரருக்கு வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரம்

### பௌத்த புனித சின்னங்கள்

ஒலுவில் பிரதான வீதியிலிருந்து சுமார் 3கி.மீ. தொலைவிலிருக்கும் ஒலுவில் முதலாம் குறிச்சியிலுள்ள சாய்புத்தம்பி ஆதம்பாவா என்பவரின் AD\35\E57\85 என்ற இலக்க காணி உத்தரவுப்பத்திரமுடைய இரண்டு ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில், பௌத்த புதை பொருட்கள் காணப்பட்டதாகவும், முஸ்லிம்கள் சிலர் புல்டோசர் கொண்டு அவற்றை சிதைக்க முற்பட்டதாகவும் வதந்தி ஒன்று பரவியது. இதையடுத்து கடந்த 28.12.1998ல் இப்பகுதியில் கிறவல் அகழ்ந்தது தொடர்பாக பாலமுனையைச் சேர்ந்த இருவரும், அக்கரைப்பற்றைச் சேர்ந்த சஹீட் என்பவரும், ஒலுவிலைச் சேர்ந்த ஆறுபேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.அவர்கள் மீது அக்கரைப்பற்று நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் சிலர் அடிக்கடி ஆலிம்சேனைப் பகுதிக் குவந்து அங்கு சேனை செய்யும் விவசாயிகளை மிரட்டுவதாகவும் , "சிலையை எங்கே ஒளித்து வைத்துள்ளீர்கள்" என்று கேட்டு சேனைப் பயிர்களுக்கிடையில் கிண்டிப் பார்ப்பதாகவும் இதனால் தமக்கு மிகுந்த நஷ்டங்களும் சிரமங்களும் ஏற்பட்டுள்ளதாகவும் ஆலிம் சேனை விவசாயிகள் கருத்துத் தெரிவித்தனர்.மட்டுமின்றி இப்பகுதிக்கு வந்த தீகவாபி பொலிஸ் போஸ்ட்டைச் சேர்ந்த பொலிசாரும், ஊர்காவல் படையினரும் தாங்கள் ஆலிம்சேனையில் சிலை வைக்கப் போவதாயும், முஸ்லிம்கள் இங்கிருந்து வெளியேறிவிடவேண்டும் என்றும் எச்சரித்துப் போயுள்ளனர்.

குறிப்பிட்ட பௌத்த தொல் பொருட்கள் காணப்பட்டதாகக் கூறப்படும் இடத்திற்குச் சென்று பார்வையிட்டபோது சுமார் பத்து அடி உயரத்திற்கு கிரவல் குவியலாயிருந்த இடத்தின் உச்சியில் சிதைந்த செங்கற் குவியல்கள் காணப்பட்டன. இது தொடர்பாக கருத்துச் சொன்ன ஒரு விவசாயி கிறவல் குவியலில் இறந்து கிடந்த பனை மரம் ஒன்றைக் காட்டி " பொலிசார் கூறுவது போல அண்மையில் இந்த இடம் புல்டோசரால் சிதைக்கப்பட்டிருக்குமாயின், இதோ இந்தப் பனை மரத்தில் இன்னும் பச்சையிருக்குமே. இதோ பாருங்கள் இந்த மரம் செத்து நான்கைந்து வருடங்களாவது இருக்குமல்லவா" என்றார்.

"இந்தப் பகுதியில் உள்ள புல்டோசர்களுக்குச் சொந்தக்காரர்கள் எல்லோரும் சிங்களவர்களே, மட்டுமின்றி புல்டோசாகளுடைய சாரதிகளும் சிங்களவர்களாயிருக்கும் போது நாங்கள் எப்படி இந்த இடத்திலுள்ள புத்தர் சிலையை இடித்து நொறுக்கி, இந்த இடத்தை சிதைத்திருக்க முடியும்" என்று சரிநிகருக்குச் சொன்னார் இன்னொரு விவசாயி.

இது தொடர்பாக அட்டாளைச்சேனை பிரதேச செயலகக் காணி உத்தியோகத்தர் ஏ.பீ. தாவூத் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் " இப்பகுதியில் தொல் பொருட்கள் ஏதும் இருப்பதாக அரசோ, தொல்பொருட் திணைக்களமோ எமக்கு எந்த அறிவுறுத்தலையும் வழங்கியிருக்கவில்லை. கடந்த 1998 நவம்பர் மாதம் ஆலிம்சேனைப் பகுதியில் தொல்பொருட்கள் காணப்படுவதாக அறிந்ததை அடுத்து இப்பகுதியில் கிறவல் எடுப்பதை எமது பிரதேச செயலகம் தடை செய்திருந்தது. சில தீய சக்திகள் பிரச்சாரம் செய்வது போல ஆலிம் சேனையிலிருந்து 4 கி.மீ. தூரத்திற்கும் அப்பால், கற்கள் கொண்டு எல்லை வேலியிடப்பட்டிருக்கும் 585 ஏக்கருக்கும் அதிகமான பரப்பினையுடைய தீகவாபி புனித பிரதேசத்திற்குள் முஸ்லிம்களின் புல்டோசர்கள் நுளைந்து புனித பிரதேசத்தை அழிப்பதாக் வரும் கதையெல்லாம் வெறும் அரசியல் லாபம் கருதிய கட்டுக் கதைகள்தான்" என்றார்.



வெள்ளைத்தம்பி (40)

ஒலுவில்

"எங்கள் தகப்பன் காலத்தில் காடு வெட்டி பயிர் செய்யப்பட்ட நிலம் இது.இந்தக் காணிகளுக்கான பேமிற் எங்களிடமுள்ளது. பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக இப்போது நாங்கள் இங்கு தொடர்ந்து தங்குவதில்லை. போகத்திற்கு போகம் வந்து பயிர் செய்கின்றோம். இங்கு புதை பொருட்கள் இருந்தது பற்றி எங்களுக்கேதும் தெரியாது. 28.12.1998 அன்று நான் உணவு சமைத்துக் கொண்டிருக்கும் போது அக்கரைப்பற்றுப் பொலிசார் வந்து என்னைக் கைது செய்து சென்றனர். எனக்கு எதுவும் தெரியாது என்று அவர்களிடம் சொன்னேன். பெரிய இடத்திலிருந்து பொலிஸ் வந்திருப்பதாக அங்கு பேசிக் கொண்டார்கள்."

### பொலிசாரும் கூட்டு

ஆலிம்சேனையில் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வரும் ஒலுவிலைச் சேர்ந்த வெள்ளைத்தம்பி, புகாரி ஆகிய இரு முஸ்லிம் விவசாயிகளும்

→

28.12.1998 அன்று கைதானது தொடர்பாக விசாரிக்கப்பட்டபோது, கைதுகளுக்கான காரணம் அரசாங்கக் காணியில் அத்துமீறிக் குடியேறியிருப்பதே என்று அக்கரைப்பற்று பொலிசாரினால் சொல்லப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் கருத்துச் சொல்கையில் " 1970களிலேயே பொன்னன்வெளிப் பிரதேசத்தில் சிங்களவர்கள் குடியேறினர்.1965ல் 'கிராம சபையில்' போட்டியிட்ட ஒலுவிலைச் சேர்ந்த அஹமட்லெப்பை அவர்கள் தலைவராயிருந்த காலத்தில், "தயாரத்ன பற்றிச் சொல்லத் தேவையில்லை. அவருக்கு முஸ்லிம், தமிழ் மக்கள் என்றாலே கண்ணிலேயும் காட்டயியலாது. இன்று நேற்றல்ல, பல வருடங்களாக அவர் இனவாதத்தைத் தூண்டிக் குளிர்காய்ந்து வருகின்றார். அம்பாறை சந்தைப் பகுதியில் சிங்களவரல்லாத வேறு எந்த ஒரு தமிழரோ, முஸ்லிமோ வியாபாரம் செய்ய முடியாத அளவுக்கு எழுதப்படாத சட்டத்தை இயற்றி வைத்திருக்கும் தயாரத்னவின் இனவாத முகம், அண்மையில் அம்பாறைப் பள்ளிவாசல் பிரச்சினையிலும் நன்றாக வெளிப்பட்டதே" என்று இப்பகுதி அரச உத்தியோகத்தர் ஒருவர் கருத்துக் கூறினார்.

புகாரி(40)

ஒலுவில்



என்னைக் கைது செய்து சென்ற அக்கரைப்பற்றுப் பொலிசார் சிலையை உடைத்தது யார் என்று என்னிடம் கேட்டார்கள். நான் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். பயிர்களை யானை, பன்றிகள் அழித்தாலும் பரவாயில்லை, இரவில் அங்கு (ஆலிம்சேனையில்) நீங்கள் தங்கக்கூடாது என்று அவர்கள் கூறினார்கள். அன்று இரவு 9 மணிக்குப் பின்னரே அக்கரைப்பற்றுப் பொலிசார் எங்களை வெளியே விட்டனர். நாங்கள் அக்கரைப்பற்றிலிருந்து ஒலுவிலுக்கு நடந்தே வந்து சேர்ந்தோம். வந்து பார்த்தபோது தோட்டத்தை யானைகளும்,குரங்குகளும், பன்றிகளும் அழித்து விட்டிருந்தன. இங்கு சிலையிருப்பதாகச் சொல்லி தீகவாபி பொலிசாரும் எங்களை வந்து அடிக்கடி விசாரிக்கின்றனர். எங்கள் சேனைகளுக்கிடையில் கிண்டுகின்றனர்.நாங்கள் சிலை எதையும் காணவில்லை. செங்கல் குவியல் ஒன்றையே கண்டோம். தாங்கள்

### இரண்டாவது மாங்காய்

புனித பூமி என்ற போர்வையில் இப்பிரதேசத்திலிருந்து முஸ்லிம்களை விரட்டியடிப்பதன் மூலம் காணிகளைச் சுவீகரிப்பது மட்டுமின்றி, பெறுமதி வாய்ந்த இந்தக் காணிகளைப் பறித்து முஸ்லிம்களின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தவும் இனவாதிகள் முயற்சிப்பதாகவும் தெரியவருகிறது.

"இந்தப் பகுதியில் ஒரு ஏக்கர் நெற்காணி ஒரு இலட்சத்திற்கும் மேல் விலை போகின்றது.

பெரிய தொகைக்கு வந்தாலும் விற்க யாரும் தயாராகவும் இல்லை. குத்தகையே ஏக்கருக்கு எட்டாயிரத்திற்கு மேல். பொன் விளையும் பூமி இது. அவர்கள் கேட்பது போல் 12ஆயிரம் ஏக்கரையும் புனித பூமி என்று அவர்களுக்குக் கொடுத்தால் ஒலுவில் கிராமத்தின் அனேக பகுதிகளை - குறிப்பாக நமது விவசாயத்தை நம்பிய எமது வாழ்வையும் நாம் இழக்க வேண்டி வரும் " என்றார் ஒலுவில்வாசி ஒருவர்.

### அஷ்ரப் என்ன செய்யப் போகிறார் ?

பொன்னன்வெளியை தீகவாபி புனித பிரதேசமாக மாற்றுவதற்கு முஸ்லிம்களின் நிலங்களைச் சிங்கள பௌத்த இனவாதத்திற்குத் தாரை வார்த்துக் கொடுத்த அமைச்சர் அஷ்ரப் "முஸ்லிம்கள் ஆலிம் சேனையை விட்டு வெளியேறத் தேவையில்லை, காணிகளின் உரிமை காணிகளின் சொந்தக்காரர்களுக்கே" என்று அறிவித்திருந்தார். தீகவாபி புனித நகர்த் திட்டம் என்ற போர்வையில் அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களின் நிலங்களையும், பொருளாதாரத்தையும் அபகரிப்பதன் மூலம், இலங்கையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரே ஒரு மாவட்டமாகிய அம்பாறையிலிருந்தும், முஸ்லிம் மக்களை விரட்டியடித்து அம்பாறையைப் பௌத்த, சிங்கள மயப்படுத்தக் கங்கணங் கட்டியுள்ள இனவாதிகளுக்குத் துணையாக அரசின் சிங்களப் பாதுகாப்புப் படையும் அடாவடித் தனங்களில் இறங்கியுள்ளது. இந்த இக்கட்டான தருணத்தில், ஆலிம்சேனை அப்பாவி விவசாய முஸ்லிம் மக்கள் மலைபோல நம்பியிருக்கும் அமைச்சர் அஷ்ரப், இந்த இனவாதச் சக்திகளிடமிருந்து முஸ்லிம் மக்களின் பாரம்பரிய மண்ணாகிய ஆலிம்சேனையையாவது காப்பாற்றிக் கொடுப்பாரா? அல்லது தீகவாபியில் நடந்தது போல, ஆலிம்சேனையிலும் அமைக்கப்படப் போகிற விகாரைக்கும் மலர்த்தட்டுச் சுமந்து செல்லப் போகின்றாரா? காலம் விடையாக எதைத் தான் சொல்லப் போகின்றது...

■

பொன்னன்வெளியிலே 07 சிங்களக் குடும்பங்கள் மட்டுமே இருந்தன. ஆனால் இன்று பொன்னன்வெளிப் பிரதேசத்தில் குடியேறியுள்ள 450க்கும் மேற்பட்ட சிங்களக்குடும்பங்களில் சுமார் 100, 150 குடும்பங்களுக்கு மட்டுமே காணி உத்தரவுப் பத்திரம் உள்ளது. ஏனையோருக்கு இல்லை. நிலைமை அவ்வாறிருக்க பொன்னன்வெளியில் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ள சிங்களவர்களை விட்டுவிட்டு, காணி உத்தரவுப்பத்திரமுள்ள ஆலிம்சேனையைச் சேர்ந்த அப்பாவி முஸ்லிம் விவசாயிகளைக் கைது செய்தது திட்டமிட்ட இனவாதச் செயலேயன்றி வேறென்ன" என்றார்.

இன்னும், "தங்களின் நோக்கம் தற்போது எல்லையிடப்பட்டுள்ள தீகவாபி புனித பிரதேசத்தின் வேலியை மேலும் விஸ்தரிப்பதே" என்றும், "அதற்கான உதவிகளைச் செய்யும் படி"யும் சிலருக்கு வேண்டுகோள் விடுத்துமுள்ளனர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த முக்கிய பதவிகளிலுள்ள சிலர் என்று கூறப்படுகிறது.



1990 படுகொலைக்குப்பின் ஆலிம்சேனை முஸ்லிம்களால் கைவிடப்பட்டு, தற்போது சிதைந்த நிலையிலுள்ள அவர்களின் வாழிடங்கள்

### அரசியற் பின்னணி

தீகவாபி புனித பிரதேசத்திலிருந்து சுமார் 4 கி.மீ. தூரத்திற்கு அப்பாலிருக்கும் ஆலிம் சேனையில் தொல்பொருட்கள் காணப்பட்ட தாகக் கூறப்படும் சம்பவத்தை ' தீகவாபி புனித பிரதேசத்துள் அத்துமீறி நுழைந்த முஸ்லிம்களின் புல்டோசர்கள் -புனித பிரதேசத்தைச் சிதைத்து வருவதாக 'க் கூறி, நடத்தப்பட்டுவரும் பிரசாரத்தின் பின்னணியிலும், முஸ்லிம் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டிவிட்டு குறுகிய அரசியல் இலாபம் காணும் முயற்சியிலும் திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் தயாரத்னவே இருந்து செயற்பட்டு வருவதாக இப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர். தயாரத்ன இப்பகுதிக்கு அடிக்கடி வந்து போவதாகவும், கடைசியாக அம்பாறை 'கொண்டுவட்டுவான்' இராணுவ முகாமைச் சேர்ந்த அதிகாரிகளோடு ஆலிம்சேனைக்கு வந்து, ஆலிம்சேனைப் பகுதியில் இராணுவ முகாம் ஒன்றை அமைத்து புனித பிரதேசத்தைப் பாதுகாக்க ஆலோசனை செய்து சென்றுள்ளதாகவும் அம்மக்கள் சரிநிகருக்குக் கூறினர்.

# முஸ்லிம் காங்கிரசின் வரலாற்றுக் கடமை !

சிங்களப் பேரினவாதச் சக்திகளின் விசக்கரங்கள் மீண்டும் முஸ்லிம்களை நோக்கி நீளத் தொடங்கியுள்ளது என்பதற்கு அம்பாறை மாவட்ட ஆலிம்சேனை முஸ்லிம் கிராம மக்கள் மீதான வெளியேற்ற அச்சுறுத்தல் சிறந்த எடுத்துக்காட்டு.

தமக்கே உரித்தான மத, கலாசார தனித்துவத்துடன் விளங்கும் தேசிய இனமொன்றினை அடையாளப்படுத்தும் காரணிகளுள் ஒன்றான குறித்த நிலப்பரப்பு, இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் வடகிழக்கு வாழ் முஸ்லிம்களிடையே அதிலும் குறிப்பாக அம்பாறை முஸ்லிம்களிடையே தக்கவைக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தை அடித்தளமாகக் கொண்டே இலங்கை முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்படுகின்றது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசானது தேசிய அரசியலில் பாரிய திருப்பத்தை ஏற்படுத்தி இன்று ஆட்சியின் பங்காளியாக அமர்ந்திருக்க அம்பாறை மாவட்ட முஸ்லிம்களே மூலகாரணமானவர்கள்.

இதனை நன்கு உணர்ந்து கொண்ட சிங்களப் பேரினவாதச் சக்திகள் இம்மாவட்ட முஸ்லிம்களின் அரசியல், கலாசார ஒருமைப் பாட்டை சிதைத்து விட காலத்துக்குக் காலம் ஆட்சிபீடமேறிய சிங்கள ஆட்சியாளர்களின் துணையுடன் திரைமறைவில் சிங்கள மயமாக்கலை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றன.

1949ம் ஆண்டு கல்லோயா பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் இம்மாவட்ட முஸ்லிம்களின் பூர்வீக பிரதேசங்களான மகா கண்டிய, கொண்டை வெட்டுவான், பொன்னன்வெளி, சேனைக்காண்டம், திராய்ஓடை, அம்பலத்தாறு, குடுவில்வட்டை, வெள்ளக்கால் தோட்டம் போன்ற பிரதேசங்களிலிருந்து முஸ்லிம்களை இரவோடு இரவாக விரட்டியடித்து தென்னிலங்கையிலிருந்து சிங்களவர்களைக் கொண்டு வந்து இப்பிரதேசங்களில் குடியேற்றியது.

சிங்களப் புதைபொருள் ஆராய்ச்சி யாளர்களின் துணையுடன் சோடிக்கப்பட்ட சமயக் கதையொன்றை மையமாக வைத்து அட்டாளைச்சேனை, ஒலுவில் பிரதேச முஸ்லிம் களின் வயற்காணிகளுள்ள பொன்னன்வெளி 1982ம் ஆண்டு ஜே.ஆர். தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கத்தினால் பறிக்கப்பட்டு தீகவாபி புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் மூலம் இம்மாவட்ட முஸ்லிம்களின் 585 - 997 ஏக்கர் வரையான காணிகள் திட்டமிட்டு சூறையாடப்பட்டன.

அதுமட்டுமல்ல சிங்களவர்களைப் பெருவாரியாகக் கொண்ட இதர மாவட்ட எல்லைப் பிரதேசங்களான பதியத்தலாவ, தெஹியத்த கண்டிய போன்ற பிரதேசங்கள் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு இம்மாவட்ட முஸ்லிம்களின் சனத்தொகை வீதத்தில் சடுதியான வீழ்ச்சியை ஏற்படுத்தினர். இன்று இம்மாவட்டம் சிங்களவரை பெருவாரியாகக் கொண்ட மாவட்டமாக மாறும் ஆபத்தை அண்மித்து விட்டது. 1981ம் ஆண்டு சனத்தொகை கணிப்பீட்டின் பிரகாரம் இம்மாவட்டத்தில் சிங்களவர்கள் 37.8வீதமும் முஸ்லிம்கள் 41.5வீதமும் தமிழர்கள் 19.9வீதமும் காணப்பட்டனர்.

இவ்வாறு மிக நீண்டகாலமாக ஒடுக்குமுறைக்கு உட்பட்ட இப்பிரதேச முஸ்லிம்கள், காலத்தின் கட்டாயத்தினால், தமது அரசியல் விடுதலைக்கான மார்க்கமாக முஸ்லிம் காங்கிரசை அங்கீகரித்து தமது அரசியல் ஆணையினை வழங்கி 1994ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பங்காளி ஆக்கினர்.

தேர்தல் கால மேடைகளில் வாக்களித்ததற்கிணங்க முஸ்லிம் காங்கிரசும், அதன் தலைமைத்துவமும் இழக்கப்பட்ட பொன்னன்வெளி நிலங்களுக்கு மாற்றீடாக பள்ளக்காட்டு பாற் கேணிதரிசு நிலங்களையாவது முஸ்லிம்களுக்கு பெற்றுக் கொடுக்க முனைந்த வேளை, சிங்களப் பேரினவாதச் சக்திகளின் போராட்டத்துக்கு முன்னால் ஈடுகொடுக்க முடியாமல் பெட்டிப்பாம்பாக அடங்கிப் போய் முஸ்லிம்களிடமிருந்து 20 லட்சம் ரூபாவைத் திரட்டி தீகவாபி பிரதேசத்தின் எல்லைகளை விஸ்தரித்து அபிவிருத்தி செய்தும் கொடுத்தது. காணி இழந்தவர்களின் நிலையோ அதோ கதி.

எமக்கு சலுகைகள் அவசியமில்லை. உரிமைகளே முக்கியம் என முழங்கிய முஸ்லிம் காங்கிரசும் அதன் தலைமைத்துவமும் வெற்றிகரமான சிங்கள மயமாக்கலுக்கு துணை நின்றதே ஒழிய இழந்த பிரதேசங்களைப் பெறுவதற்கான எத்தகைய உரிமைப் போராட்டத்தையும் முன்னெடுத்துச் செல்லவில்லை. அடிக்கடி அரசாங்கத்தையும், அதன் பிரதிநிதிகளையும் ராஜினாமா மிரட்டல் விடுத்து அச்சுறுத்தும் அமைச்சர் அப்பட்டமான முறையில் முஸ்லிம்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட போது பதவியைத் துச்சமாக மதிக்கவில்லை.

முஸ்லிம்களிடமிருந்து எப்படியாவது அம்பாறை மாவட்டத்தைப் பறித்து அவர்களை அரசியல் அனாதைகள் ஆக்கி விட வரிந்து கட்டிக் கொண்டு நிற்கும் பேரினவாதச் சக்திகள் இற்றைக்கு சில மாதங்களுக்கு முன்னர் அம்பாறை நகரில் அமைந்திருக்கும் பள்ளி வாசல் காணியின் சில பகுதிகள் அம்பாறை நகர சபைக்குரியதென்றும், அது பள்ளிவாசலுக்கென அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டினர். இவ் ஒடுக்குமுறையின் இன்னொரு தொடர்ச்சியே ஆலிம்சேனை முஸ்லிம்கள் மீதான வெளியேற்ற அச்சுறுத்தலும், முஸ்லிம்களுக்கெதிரான ஆர்ப்பாட்டமும்.

இக் கைங்கரியம் ஐ.தே.கட்சியின் ஆதரவுடன் முஸ்லிம்கள் அள்ளிக்கொடுத்த ஒரு லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளின் மூலம் ஆட்சியமைத்த அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினராலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெட்கப்பட வேண்டிய விடயமொன்றை நாக்கூசாமல் முஸ்லிம் காங்கிரசின் மூத்த துணைத் தலைவர் மருதூர்க்கனி வடமேல் மாகாண சபைத் தேர்தல் பிரச்சார மேடையில் அரசாங்கம் வேறு அரச படைகள் வேறு என்ற பாணியில் முஸ்லிம்கள் மத்தியில் எடுத்துரைத்துள்ளார்.

நாற்பது வருட அடிமைச் சங்கிலியை அறுத்தெறிந்து விட்டதாக அடிக்கடி மார்தட்டிக் கொள்ளும் தலைவருக்கு தான் அமர்ந்திருக்கும் அரசாங்கத்தின் இனவாத முகத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் போனது வேதனைக்குரியது. தன்னை தலைவராக்கி அமைச்சராக்கிவிட்ட அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் சமூக இருப்பு நாளுக்குநாள் கேள்விக்குள்ளாகின்றது என்பதை அவர் இன்னும் சரிவரப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

இலங்கை முஸ்லிம்களுக்கென ஆகக் குறைந்தது ஒரு அதிகார அலகையாவது கோரக்கூடிய இடமாக அம்பாறை மாவட்டமே எஞ்சியிருக்கிறது என்றிருக்கையில் சிங்களப்பேரினவாதிகள் இப் பிரதேசத்தையும் ஆக்கிரமித்துவிடத் துடிக்கின்றனர். இந்நிலையில் முன்னர் தீகவாபி விவகாரத்தில் அமைச்சுப் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு அடிபணிந்து முஸ்லிம்களை ஏமாற்றுவதற்காக மேற்கொண்ட சுத்துமாத்து பத்திரிகை அறிக்கை விடுதல்களைத் தவிர்த்து ஆக்கிரமிக்கப்பட்ட எமது பிரதேசங்களை மீட்க முன் வருவதுடன் ஆலிம்சேனை முஸ்லிம்களினதும், அம்பாறை மாவட்ட முஸ்லிம்களினதும் நிரந்தர பாதுகாப்பை முஸ்லிம் காங்கிரசும், அதன் தலைமைத்துவமும் உறுதிப்படுத்த வேண்டும். இல்லையானால், முஸ்லிம் காங்கிரசின் வரலாற்றுப் பாத்திரம் வெறும் கோஷமாகிவிடும்.

அலறி,
மருதமுனை

## 'ராவய'விலிருந்து...

"எனது பெயர், புகைப்படம் ஆகியவற்றைப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டாம்.
நான் விவசாயி, தினமும் காலையிலும், மாலையிலும் வயலுக்குச் செல்வேன்.எனது வயல் முள்ளிக்குளம் கல் மலைக்கு அண்மையில் உள்ளது. கடந்த ஒக்டோபர் மாதம் ஒருநாள் காலை நான் வயலுக்குச் சென்றபோது தீகவாபி காவலரணின் நான்கைந்து அதிகாரிகளைச் சந்தித்தேன். அவர்கள் முள்ளிக்குளம் கல்மலைக்கிடையில் நின்று கொண்டிருந்தார்கள்.முள்ளிக்குளம் பாதுகாப்புப் பிரதேசம் என்றாலும், பொலிஸ் அதிகாரிகள் அடிக்கடி வேட்டையாடச் செல்வதனால், இவர்களும் வேட்டையாட வந்தவர்கள் என்று எண்ணினேன்.அதற்குச் சில தினங்களுக்குப் பின்னர், தம்மிக, அனுர எனும் ஊர்காவற் படையினருடன் பொலிஸ் அதிகாரிகள் சிலர் நான் நன்கறிந்த பிரபல பூசாரிகள் இருவருடன் முள்ளிக்குளம் பிரதேசத்திலிருந்து வருவதைக் கண்டேன். நான் இது பற்றி என் நண்பனுக்குக் கூறி,பொலிசார் என்ன செய்கின்றனர் என்று ஒளிந்திருந்து பார்த்தோம். அவர்கள் முள்ளிக் குளம் மலையுச்சியில் உள்ள இடத்திலிருந்த புதை பொருட்களை தோண்ட முயற்சி செய்வதைக் கண்டோம். நாங்கள் பார்த்ததை அவர்கள் எப்படியோ கண்டுவிட்டனர். என்னைக் கொல்லவென்று வேறொரு நபருக்கு கொந்தராத்துக் கொடுத்துள்ளனர். இப்போது என் உயிருக்க உத்தரவாதமில்லை.நான் பலரிடம் இது பற்றி முறைப்பாடு செய்துள்ளேன்.இச்சம்பவத்தோடு சம்பந்தமுடையவர்கள் இப்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்."

-அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஒரு இளைஞன்

"...தீகவாபி பிரதேசத்தில் புதை பொருட்களின் அழிவு இன்று நேற்று இடம்பெற்றதல்ல.வெவ்வேறுபட்ட மக்கள் இதற்குக் காரணமாயுள்ளனர். இதே போல் தீகவாபியை அபிவிருத்தி செய்யவும் பல அமைப்புக்கள் உள்ளன. எனினும் இவை இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.கடந்த சில தினங்களுக்கு முன்னதாக இடம்பெற்ற சர்ச்சைக்குரியதான பிரதேசம் முஸ்லிம் மக்களுக்குரியது. இவை தீகவாபிக்குரியதல்ல."
டோசர் சம்பவத்தைச் சுட்டிக்காட்டி
"முள்ளிக்குளத்து மலையில் புதையல் தோண்டும் கதையை மூடிமறைக்கும் உத்தியே இது" என்றார்.
-தீகவாபி ரஜமகாவிகாரையின் பௌத்த அமைப்பின் செயலாளர் பந்துல சரத் குமார

நன்றி - நூலகத்திட்டம்

# மலையகம் :
# தேவை அரசியல் வியாபாரிகள் அல்ல, உறுதியான புதிய தலைமைத்துவம் !!

இடையன்



கடந்த 11.12.98 அன்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் நடந்த வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான வாக்கெடுப்பில் நிதி ஒதுக்கீடு தோற்கடிக்கப்பட்டது. நிதி ஒதுக்கீடு தோற்கடிக்கப்பட்டாலும் மீண்டும் குறை நிரப்பு பிரேரணைகள் மூலம் அதனை பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இருப்பினும் நிதி ஒதுக்கீடு தோற்கடிக்கப்பட்ட அந்த ஒரு நிகழ்வு இன்றும் மலையக அரசியலில் ஒரு சாராரின் பிரச்சாரத்திற்குரிய விடயமாக மாறிவிட்டது. எனவே, மலையக அரசியலின் எதிர்காலம் பற்றி நோக்க முற்படும் பொழுது குறிப்பிட்ட அமைச்சு விவகாரத்தையும் தொட்டு செல்லல் பொருத்தமுடையதாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இரண்டாவது அமைச்சரவை மாற்றத்தின் போது மலையக மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளை முன்னேற்றவென புதிதாக உருவாக்கப்பட்ட அமைச்சே தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு ஆகும். இதன் கீழ் பெருந்தோட்டப் பகுதிகளில் கல்வி, கலாசார, வீடமைப்பு, சுகாதார மின்சாரம், நீர் விநியோகம், விளையாட்டுத்துறை மற்றும் அடிப்படை தேவைகள் விருத்தி அடையும் என எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு பொறுப்பான அமைச்சராக மாறி மாறி வரும் அரசாங்கங்களில் அமைச்சராக, இருந்து வரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா.) தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமானை ஜனாதிபதி நியமித்தார். இவ்வாறு ஒரு அமைச்சு உருவாக்கப்பட்டது வரவேற்கத்தக்க விடயமே.

விடயமே.

இந்த அமைச்சு உருவாக்கப்பட்டதன் நோக்கத்தில் சிறிதளவேனும் இதுவரையில் நிறைவேறி உள்ளதா என பார்க்கும் போது அது கேள்விக்குறியாகவே உள்ளது! காரணம் ஒரு சில பெருந்தோட்டப் பகுதிகளில் சிறு சிறு திட்டங்கள் சில, பெயருக்கு செயற்படுத்தப்பட்டுள்ளதே தவிர பெரிதாக எதையும் சாதித்ததாக தெரியவில்லை. இந்நிலையிலேயே கடந்த ஆண்டுகளில் இவ்வமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன ஆனது என்ற வினாவும் எழுகிறது. அண்மைக் காலத்தில் இவ்வமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரங்களை அவதானிக்கும் பொழுது அவர்களுக்கு எவ்வெவ் விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது கூட புரியவில்லை என்றே எண்ணத் தோன்றும். ஏனெனில், பெருந்தோட்டப் பகுதியில் மக்களின் உடனடித் தீர்வு காணப்பட வேண்டிய எத்தனையோ அத்தியாவசிய தேவைகள் இருக்கும்போது இவ்வமைச்சு முன்னுரிமை கொடுத்து செயற்படுத்த எண்ணி உள்ள ஒரு விடயம் மலையக கோவில்களுக்கு தேவையான அர்ச்சகர்களை காஞ்சிபுரத்தில் பயிற்சி பெற வைப்பது.

இவற்றையெல்லாம் அவதானிக்கும் போது, ஒன்று இவ்வமைச்சின் இலக்குகள் அடையப்படவில்லை அல்லது இலக்குகள் சரியான முறையில் நிர்ணயிக்கப்படவில்லை என்றே தோன்றுகிறது. அடுத்து இவ்வமைச்சு மீதான நடைமுறை ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்ட நிகழ்வின் பின்னர் மலையகத்திலும், தலைநகரிலும் பல ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள், அறிக்கைகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. அமைச்சர் தொண்டமான், ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க) எதிர்த்து வாக்களித்து தனது இனவாதத்தை வெளிப்படையாக காட்டிவிட்டது என்கிறார். ஐ.தே.க.வினரோ தாங்கள் இனவாதிகளல்ல என்றும், தாங்களே பெரும்பான்மை மலையகத் தமிழரின் பிரதிநிதிகள் என காட்டவும் கடும் முயற்சி செய்கின்றனர்.

முயற்சி செய்கின்றனர்.

உண்மையில் நடந்தது என்ன? யார் யார் இனவாதிகள்? என சற்று ஆழமாக நோக்கின் பல உண்மைகள் புலப்படும். 225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நாடாளுமன்றத்தில் அன்றைய தினம் (11.12.98) சபாநாயகர் ஆசனத்தில் இருந்தவர் நீங்கலாக ஆளும் தரப்பில் மூன்று அமைச்சர்கள் உட்பட 17 மக்கள் பிரதிநிதிகளும், எதிர்த்தரப்பில் 34 பிரதிநிதிகளுமாக மொத்தம் 51 உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர். (மொத்த உறுப்பினர்களில் 23 வீதத்தினர்.)

அமைச்சரவை உறுப்பினர்களில் மூவர் மட்டுமே சமூகம் தர மொத்த உறுப்பினர்களில் 23 வீதத்தினரே சமூகமளித்துள்ளனர். மக்கள் பிரதிநிதிகளின் அலட்சியப் போக்கிற்கு இது ஒரு எடுத்து காட்டு. எனவே, குறிப்பிட்ட தின நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பில் எதிர்த் தரப்பினர் எதிர்த்து வாக்களிக்க நிதி ஒதுக்கீடு தோற்கடிக்கபட்டது.

நிதி ஒதுக்கீட்டில் ஐ.தே.க. எதிர்த்து வாக்களித்ததால் அது இனவாத கட்சி என அமைச்சர் தொண்டமான் அவர்களாலும் அரச சார்பு தொடர்பு சாதனங்களாலும் பிரச்சாரப்படுத்தப்படுகிறது.

இதன் உச்சக் கட்டமாக இன்று இ.தொ.கா. தலைவர், அமைச்சர் தொண்டமானுக்கு எதிரான கருத்துக்கள் எல்லாம் இனவாதமாகவே கொள்ளப்படுகிறது. இந்நிலையில் தான் இனவாதிகளாயினும் சரி, இல்லாவிட்டாலும் சரி மலையகத் தமிழ் மக்களுக்கு எதிரான உண்மையான எதிரிகள் யார் என்பதை குறிப்பிட்ட தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான வாக்கெடுப்புடன் தொடர்புபடுத்தி நோக்குதல் அவசியமாகிறது.

குறிப்பிட்ட நிகழ்வுடன் நோக்கும் பொழுது மூன்று பிரிவினரை எதிரிகளாகக் காணலாம்.

1. எதிர்ப்பைக் காட்ட பல வழிகள் இருந்தும் ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்தின் (மலையகத் தமிழர்) நலனுடன் தொடர்புடைய நிதி ஒதுக்கீடு மீதான வாக்கெடுப்பில் தனது எதிர்ப்பைக் காட்டிய ஐ.தே.க. இது அவர்களின் நீண்டகால இனவாதப் போக்கின் மற்றுமொரு வெளிப்பாடு. 1948இல் மலையக மக்களை நாடற்றவர்களாக்கியதும் இதே ஐ.தே.கதான். இன்று நிதி ஒதுக்கீட்டை எதிர்த்து இடைப்பட்ட காலத்தில் பல ஏமாற்று வித்தைகளை மலையக மக்களுக்கு செய்து காட்டியதும் இதே ஐ.தே.க. தான். இவற்றுக்கு துணை நின்ற, இன்றும் துணை நின்று வருபவர்கள் மலையக சமூகத்திலிருந்து உருவெடுத்த பிற்போக்கு சுய நல அரசியல்வாதிகளே.

2. முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைப்பதென்பது இயலாத காரியம் தான். அந்த வகையில் தங்கள் நீண்ட கால இனவாத போக்கை மறைக்க பல முயற்சிகள் எடுத்தும், இறுதியில் தோல்வி கண்ட நிலையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உட்பட பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் நிலைப்பாடு. குறிப்பிட்ட வாக்கெடுப்பிற்கு அமைச்சர் தொண்டமான் உட்பட மொத்தம் மூன்று அமைச்சர்களே (தொண்டமான், ஜீ.எல்.பீரிஸ், ரட்ணசிறி விக்கிரமநாயக்கா) சமூகமளித்திருந்தனர். மேலும் 14 ஆளும் தரப்பு உறுப்பினர்களே சமூகமளித்திருந்தனர். இது முன் கூட்டியே ஒரு செயல் திட்டமிட்ட போன்றே தோன்றுகின்றது. அதாவது மலையக மக்களுக்கு எதிராக கொள்கையை வெளிப்படையாகக் காண்பிக்க முடியாது.

மக்களுக்கு எதிராக கொள்கையை வெளிப்படையாகக் காண்பிக்க முடியாது.

நாடாளுமன்றத்திற்கு சென்றால் எதிர்த்து வாக்களித்தால் உண்மை வெளிப்பட்டு விடும். எனவே, நாடாளுமன்றத்திற்கு சமூகமளிக்காதிருப்பதனூடாக எதிர்த்து வாக்களிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. அதே வேளை எதிர்க் கட்சியினர் எதிர்த்து வாக்களிக்க நிதி ஒதுக்கீடு தோல்வி காணும். இதன் மூலம் தங்கள் நோக்கம் நிறைவேறும் அதே சமயம் பழியை எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் மீது சுமத்தி அரசியல் ஆதாயம் தேட முற்பட்டனர்.

3. மூன்றாவது எதிரியாக இங்கு புலப்படுவது இ.தொ.கா. ஏனெனில், குறிப்பிட்ட விவாதத்தின்போது சபையில் அமைச்சர் தொண்டமான் உட்பட மூன்று உறுப்பினர்களே சமூகமளித்திருந்தனர். மொத்தம் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இ.தொ.காவின் மிகுதி ஆறு உறுப்பினர்கள் எங்கு சென்றிருந்தனர். தங்களை தெரிவு செய்த மக்களுக்கு நன்மை செய்யும் ஒரு நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொள்ள முடியாவிடின் இவர்கள் ஏன் மக்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும்? இவர்களுக்கு தங்கள் சொந்த மக்கள் மீதே கரிசனை இல்லை என்பதே இதன் மூலம் புலப்படுகிறது. எனவே இவர்களும் மலையக மக்களுக்கு எதிராக செயற்பட்டவர்களாகவே தோன்றுகிறது.

இவற்றை மேலும் ஆழமாக நோக்குவோமாயின் குறிப்பிட்ட நிகழ்வானது மலையக மக்களுக்கு எதிராக இனவாதிகளின் செயற்பாடு என்பதிலும் பார்க்க ஒட்டு மொத்த பெருந்தோட்ட பாட்டாளி வர்க்கத்திற்கு எதிராக முதலாளித்துவவாதிகளின் கூட்டு சதி நாடகத்தின் ஒரு நிகழ்வே இது எனலாம். இருப்பினும் இதன் பின்னைய நிகழ்வுகள் மலையகத்தில் அரசியல் ரீதியாக ஒரு விழிப்புணர்வை கொடுத்துள்ளது.

எனவே, மலையகத்தின் அரசியல் எதிர்காலம் பற்றி சிந்திக்க முற்படும் போது அதன் கடந்த கால, நிகழ்கால அரசியல் செயற்பாடுகளை சுருக்கமாக தொட்டுச் செல்லல் பொருத்தமுடையதாகும். இன்று அரச சார்பு பிரச்சார சாதனங்கள் தொண்டமான் அவர்களை மக்கள் மத்தியில் ஒரு கதாநாயகனாக சித்திரிக்க முற்பட்டு அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது. இ.தொ.கா. மலையக மக்களுக்கு ஒரு தலைமையை கொடுத்தது என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. ஆனால், அது எத்தகைய தலைமை? சரியான வழியில் வழி நடத்தியதா என்பதுதான் கேள்விக்குரியது. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தனது தொழிற் சங்கத்திற்கு மாதா மாதம் சந்தாப் பணம் சேகரிப்பதை இடைவிடாது நிறைவேற்றி வரும் இ.தொ.கா. மலையக மக்களின் தேவைகளை பூர்த்தி செய்துள்ளதா? தொடர்ந்து வரும் அரசாங்கங்களில் அமைச்சர் நாற்காலிகளை மட்டும் அலங்கரிக்கத் தவறுவதில்லை. இதன் நிலைமை அண்மையில் இதன் தலைவர் அமைச்சர் தொண்டமான் அவர்கள் அரச தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தான் 17 வருடங்கள் ஐ.தே.க ஆட்சியில் அமைச்சராக இருந்த பொழுது ஐ.தே.கவின் இனவாத போக்கை மாற்ற முயற்சித்ததாகவும், அது முடியாமல் போய்விட்டதாகவும் கூறியிருந்தார். இவர் ஏன் இதை அன்றே கூறவில்லை. காரணம் அன்று அவர் கூறியிருந்தால், அமைச்சர் பதவி பறிபோயிருக்கும். சுகபோக வாழ்க்கையும் இழக்க நேரிட்டிருக்கும். இன்று அமைச்சர் பதவியை தக்கவைத்துக் கொள்ள அப்படி சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இல்லாவிட்டால் சுய கௌரவம் இருந்திருந்தால், நாடாளு-மன்றத்தில் தன் அமைச்சின் நிதி ஒதுக்கீடு

சுய கௌரவம் இருந்திருந்தால், நாடாளு-மன்றத்தில் தன் அமைச்சின் நிதி ஒதுக்கீடு

மீதான வாக்கெடுப்பில் தோல்வி கண்ட உடன் பதவியைத் துறந்திருக்க வேண்டும்.

தொண்டமான் அமைச்சராகவிருந்த / விருக்கும் காலத்தில் தான் 83 ஜூலை வன்செயல், 98ம் ஆண்டு இரத்தினபுரி வன்செயல் என்பன நிகழ்ந்தன. தொண்டமானால் என்ன செய்யமுடிந்தது? இரத்தினபுரி சம்பவத்துடன் அரசாங்கத்தின் முக்கிய புள்ளி ஒருவர் சம்பந்தப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால், தங்களுக்கு வாக்களித்த மக்களையும் மறந்து இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், "குறிப்பிட்ட அரசியல்வாதியுடன் தான் உணவு அருந்தியதாகவும், அவர் குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவரென தன்னால் நம்ப முடியாது" எனவும் கூறியுள்ளார். நாற்காலி தந்த சுகம் எப்படி எல்லாம் கதைக்க வைக்கிறது.

இ.தொ.கா. தான் நாடற்றவர்களுக்கு பிரஜா உரிமை பெற்றுக் கொடுத்ததாக கூறுகிறார் அதன் தலைவர். பிரஜா உரிமைபெற போராட்டங்களை இ.தொ.கா. மற்றும் ஏனைய மலையக அமைப்புகள் நடத்தியது உண்மை தான். ஆனால், திம்பு மாநாட்டில் வட - கிழக்கு அமைப்புகள் சமர்பித்த நான்கு அம்சக் கோரிக்கையில் நாடற்ற மலையகத் தமிழர்களுக்கு பிரஜா உரிமை வழங்கப்படவேண்டும் என்பதும் ஒன்று. இதுவே பிரஜா உரிமை வழங்கியது. மேலும் ஐ.தே.க தனது வாக்குப் பலத்தை அதிகரிப்பதனையும், இதன் ஒரு நோக்கமாக கொண்டிருந்தது. மேலும் இந்தியக் கடவுச்சீட்டு பெற்ற 80 ஆயிரம் பேர் (இவர்களின் சந்ததி இன்று 4 இலட்சத்-தைத் தாண்டிய நிலையில்) இலங்கை பிரஜா உரிமை அற்ற நிலையில், இந்தியா செல்லும் ஆவல் அற்ற நிலையில் 170 வருட வரலாற்றைக் கொண்டு உள்ளனர். இவர்கள் விடயத்தில் இன்று வரை உறுதியான தீர்வு காணப்படவில்லை.

வீட்டுரிமை விவகாரத்தை எடுத்து கொண்டாலும், தொழிலாளர்கள் குடியிருக்கும் வீடும் (லயன் அறை), அதனுடன் உள்ளத் தோட்டமும் தொழிலாளர்களுக்கு சொந்தமாக்கப்படும் என்று கூறப்பட்டாலும் இன்றுவரை நிறைவேறவில்லை. கடந்த 1994 ஒகஸ்ட் பொதுத் தேர்லின்போது ஐ.தே.கவும், அமைச்சர் தொண்டமானும் நுவரெலியா-வில் வைத்து பொது மேடையில் வீடுகளை சொந்தமாக்கும் பத்திரங்கள் என போலி பத்திரங்களை தொழிலாளர்களுக்கு கொடுத்து அதனை மீள பெற்றுக்கொண்டனர். இதன்மூலம் அவர்கள் தங்கள் சொந்த மக்களையே ஏமாற்றுவதில் கைதேர்ந்தவர்கள் என்பதை நிரூபித்தனர்.

அண்மைய சம்பளப் போராட்டத்தின் போதும் தொழிலாளர்கள் தொடர்ந்து போராட தயாராக இருந்த போதிலும் இ.தொ.காவும், கூட்டுக் கமிட்டியும் இடையிலேயே அவர்களை கைவிட்டு முதலாளிமார் சங்கத்துடன் ஒப்பந்தம் செய்தது. பிறகு நடந்த சம்பவம்தான் சுவாரசியமானது. இ.தொ.கா தமது அங்கத்தவர்களின் மாதாந்த சந்தாவை 33/- ரூபாவாக உயர்த்தியது.

ஏனைய அமைப்புக்களை பார்க்கும்போது பல அமைப்புக்கள் இ.தொ.காவிலிருந்து பிரிந்த அமைப்புக்களாகவே உள்ளன. ஒரு சில அமைப்புக்களே புதிதாக தோற்றுவிக்கப்பட்டனவாக உள்ளன. அண்மைய தகவலின்படி மலையக பெருந்தோட்ட பகுதிகளில் மட்டும் 52 தொழிற்சங்கங்கள் வரை செயற்படுகின்றன. இவ்வமைப்புகளும் தனித்தும், கூட்டாகவும் பல போராட்டங்களை நடத்தியுள்ளன. மக்களின் சமூக, பொருளாதார நிலையில்

பல போராட்டங்களை நடத்தியுள்ளன. மக்களின் சமூக, பொருளாதார நிலையில்

மாற்றம் ஏற்பட உழைக்கின்றன. இவற்றில் இ.தொ.காவுக்கு மாற்றீடாக ஓரளவுக்கேனும் கொள்ள தக்க மலையக மக்கள் முன்னணி (ம.ம.மு.) தொழிலாளர் தேசிய சங்கம் (தொ.தே.ச.) என்பவற்றை குறிப்பிடலாம்.

இவற்றில் தொ.தே.ச. மற்றும் 12 அமைப்புகள், இ.தொ.கா. தலைமையில் "இந்திய வம்சாவளி மக்கள் பேரணி" என்ற அமைப்பை தோற்றுவித்துள்ளன. இவை அனைத்தும் மீண்டும் ஒற்றுமை என்ற போர்வையில் ஒன்றிணைந்திருந்தாலும் இவற்றின் நோக்கம் தேர்தல்கள் மட்டுமே என்பது நடைமுறை அரசியல் போக்குகளை அவதானிக்கும் பொழுது புலப்படுகிறது.

மலையகத்தில் புதிய மாற்றத்தை உருவாக்கப் புறப்பட்ட முன்னாள் இ.தொ.கா. சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான பெரியசாமி சந்திரசேகரன் தலைமையிலான ம.ம.முவும், தலைவருக்கு பிரதி அமைச்சர் பதவிகிடைக்க முன் ஆறு அம்சக் கோரிக்கை என்றார்கள். இன்று அதை மறந்தே விட்டார்கள். இ.தொ.கா. விற்கு மாற்று என்பதை விட ஒரு குட்டி

— 20

நன்றி - நூலகத்திட்டம்



# பாட்டும் கூத்துமாய் மேடை ஏறிய பாடினி ஔவை




"மௌனக் குரல்" - இன் புதிய மேடை ஏற்றமாகிய "ஔவை"யின் மூலம், தமிழ் மனத்தில் படிந்துள்ள "ஔவையார்" படிமத்தை உடைத்து நொறுக்க முயற்சித்துள்ளதோடு சங்க கால வீரம், பழந்தமிழ்ப் பண்பாடு, தமிழ் மரபின் ஆணாதிக்க நிலை ஆகியவற்றைப் பிரச்சினைப்படுத்தியுள்ள வகையில் இன்குலாப்பும் மங்கையும் வெற்றியடைந்துள்ளனர். இன்குலாப்பை ஒரு புதுக் கவிஞராக மட்டுமே கண்டு வந்த நமக்கு பழந்தமிழ் இலக்கியங்களில் புலமை பெற்ற ஒரு தமிழ்ப் பேராசிரியர் என்கிற அவரது இன்னொரு பரிமாணத்தை நினைவூட்டுகிறது இந் நாடகப் பிரதி.

"பண்பாடு, சமயம், கவிதை யாவற்றிலும் சிறந்ததைக் குறிக்கும் மரபாகத் தமிழ்நாட்டில் ஔவை விளங்குகிறது" என்பார் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார். குறைந்த பட்சம் மூன்று ஔவைகள் - அதியனிடம் நட்புக் கொண்ட சங்கத்து ஔவை, திண்ணைப் பள்ளி மரபில் சமீப காலம் வரை முதன்மையான மனன நூற்களாக அமைந்திருந்த ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகியவற்றைப் பாடிய ஔவையார், விநாயகரகவல், ஞானக்கோவை முதலானவற்றை யாத்த சைவத் தமிழ் ஔவையார் - உண்டு எனத் தமிழறிஞர்கள் சொல்வார்கள். இருந்தபோதிலும் நமக்கு ஔவை என்றால் நெற்றியில் பட்டையும் கையில் தடியும் ஊன்றித் திரிந்தவள் தான்: மூதுரை சொன்னவள் தான்: முருகனிடம் சுட்ட பழம் கேட்டுத் தோற்றவள் தான். இந்தப் பிம்பத்தைப் பதித்ததில் எஸ்.எஸ்.வாசன், ஏ.பி.நாகராசன் போன்றோரின் பங்கு கணிசமானது.

இன்குலாப்பின் ஔவை இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டவள். ஒவ்வொரு அசைவிலும் சொல்லிலும் இளமை தெறிக்கும் சங்கத்து ஔவை இவள். இனிய நண்பன் அதியனுடன் குடித்துக் களித்துத் தன் இளமையைக் கொண்டாடியவள். ஆணாதிக்கம் உறுதிப்பட்ட நிலவுடைமைச் சமூகத்திற்குரிய அறநெறிகளைப் பாடிய பிந்திய ஔவையாரிடமிருந்து இவள் வேறுபட்டவள் என்பதை அழுத்தந் திருத்தமாகச் சொல்கிறார் இன்குலாப். பிரதியினுடாக மட்டுமல்ல, முன்னுரையிலும்.

உண்மை. சங்கத்து ஔவை தான் பெண்குரலை, பெண்ணுணர்வை ஒலித்த முதல் (அங்கீகரிக்கப்பட்ட) பெண்கவிஞர். தமிழ் மரபில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெண் குரல்கள் சொற்பம். அவர்களுள்ளும் பெண்ணுணர்வை - விதிக்கப்பட்ட இலக்கணங்களை மீறி - வெளிப்படுத்தியவர்கள் வெகு சொற்பம்: ஔவை, ஆண்டாள் போல.

இன்குலாப் சுட்டிக் காட்டியுள்ள இந்த வேறுபாடுகளுக்கு மத்தியில் சில ஒப்புமைகளும் நினைவுக்கு வருகின்றன. அதியன், பொருட்டெழினி, நாஞ்சில் வள்ளுவன் போன்ற பழங்குடித் தலைவர்களையே பெரிதும் சார்ந்திருந்தவள் சங்கத்து ஔவை. மூவேந்தரைப் பாடித் திரிவதில் முனைப்புக் காட்டாதவள். பிற்காலத்து ஔவைகள் பற்றிய கதைகளிலுங் கூட இவர்கள் பேரரசர்களைக் காட்டிலும் சாதாரண மக்களைச் சார்ந்தவர்களாகவே சித்திரிக்கப்படுகின்றனர். சோற்றுக்கும், கூழுக்கும், உப்புக்கும், புளிக்கும் கூடப் பாடியவர்களாகக் கதைகள். கணிகையைப் பாடியதாகவும், குறவர்களுக்கும் மாட்டுக்காரர்களுக்கும் பாடியதாகவும் இந்த ஔவைகளை நமது மரபு பதிவு செய்துள்ளது. நிலவுடைமைச் சமூகத்துக்குரிய பல்வேறு சிந்தனைகளை ஏற்றுக் கொண்டவளெனினும், "சாதி இரண்டொழிய வேறில்லை" எனச் சாற்றியதாலோ என்னவோ ஔவையாரை நாயன்மார்களில் ஒருவராகத் தமிழ் மரபு ஏற்றுக் கொண்டதில்லை. இவர்களின் நூற்களில் சிலவற்றைக் காப்பாற்றி வைக்கவும் சிரத்தை காட்டவில்லை. ஔவையாரைத் தாழ்ந்த சாதியினராகவும், வள்ளுவரின் சகோதரியாகவும் சொல்லப்படும் கதைகளும் சிந்திக்கத் தக்கன. கண்ணாலம், கைக்கூலி, காலறுவான் போன்ற வழக்குகளை ஔவையார் கையாண்டுள்ளதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இக்குலாப்பின் நாடகப்பிரதி ஏற்படுத்திய சிந்தனை உசுப்பல்களின் விளைவாக ஔவையாரின் "நீதிநெறி" நூற்கள் நான்கையும் புரட்டிய போது அவற்றின் இன்னொரு பரிமாணம் தட்டுப்பட்டது. அவற்றை அறநெறி நூற்கள் எனச் சொல்வதைக் காட்டிலும் சுய முன்னேற்ற (Self Improvement) நூற்கள் என வகைப்படுத்துவது பொருத்தமாக இருக்கும் எனப்பட்டது. வாழும் சமூக அமைப்புக்கு எந்தக் குந்தகமும் நேராமல் அதன் விதிமுறைகளை அறிந்து, ஆளுமையை வளர்த்துக் கொண்டு முன்னேறும் வழியைச் சொல்பனவே சுய முன்னேற்ற நூற்கள். போட்டி நிறைந்த முதலாளியச் சமூகத்துக்கு உரியனவாக இன்றைய சுய முன்னேற்ற நூற்கள் அமைகின்றனவெனில், ஒரு நிலவுடமை - வணிகச் சமூகத்துக்குரிய வாழும் வழிகளைச் சொன்னவை இவை. தோற்பன தொடரேல், ஊருடன் ஒத்துவாழ், நொய்ய உரையேல், போர்த் தொழில் புரியேல், வெட்டெனப் பேசேல், தக்கோன் எனத்திரி என்பனவற்றையெல்லாம் வெறும் அறநெறிகள் எனக் கருதிவிட முடியுமா? அன்றைய திண்ணைப் பள்ளிகளில் வாசிக்க வாய்ப்புப் பெற்றவர்களை நோக்கி வெற்றிக்குரிய வாழ்நெறிகளைச் சொன்னவை இவை. தையல் சொற்கேளேல் என்பன போன்ற ஆணாதிக்கச் சிந்தனைகளும் கூட அந்தச் சமூகத்தின் ஓரங்கமாக அமைந்தவை தான். பாரதியும், பாரதிதாசனும் ஆக்கிய (புதிய) ஆத்திசூடிகள் இதிலிருந்து வேறுபட்டவை. இருக்கிற அமைப்பில் மாற்றங்களைக் கோருபவை. ஒரு வகையில் சுய முன்னேற்றத்திற்கு எதிரானவை.

000

சங்கத்து ஔவையை வெறும் பெண்பாற்கவிஞர் என்று சொன்னால் போதாது. சங்கப் பாடலுக்குரியவர்களை நாம் இரண்டாகப் பிரித்தணுக வேண்டியிருக்கிறது. கபிலர், பரணர் போன்றோர் புலவர்கள். ஔவையோ பாணர் மரபில் வந்த பாடினி. இந்த வேறுபாட்டை மிக நுணுக்கமாகச் சித்திரிக்கிறார் இன்குலாப். பாட்டும் கூத்தும் இசையும் யாழுமாய் நாடோடிகளாய்த் திரிந்த இவர்கள் சமூகம் பின்னாளில் சாதிகளாய்த் திரண்டபோது ஆகக் கீழாகத் தள்ளப்பட்டவர்கள். பெரும்பாலும் பழங்குடி மக்களைப் பாடி, அண்டி வாழ்ந்தவர்கள். கூட்டமாய்த் திரிந்து கள்ளையும், புலாலையும் களித்துப் புசித்தவர்கள். பழங்குடிச் சமூகம் அழிக்கப்பட்டு மூவேந்தர்கள், ஆட்சி அறங்கள், பார்ப்பனச் சடங்குகள், எழுத்துருவாக்கம், இறுக்கமான ஆணாதிக்கம் ஆகியவை தோன்றியதோடு பாணர் மரபின் வீழ்ச்சியையும் புதிய சமூத்தின் 'அறிவுஜீவி'களாக புலவர் மரபு உருப் பெற்றதையும் பார்க்க வேண்டியுள்ளது.

இந்த மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்துக்குரியவள் ஔவை. பெரும்பாலும் பழங்குடித் தலைவர்களைப் பாடியவள். கபிலரும் பரணரும் குறிஞ்சியையும் மருதத்தையும் பாடினரெனில், அவள் பாலையைப் பாடியவள். "நம் மனத்து அன்ன மென்மை இன்மையின் நம்முடை உலகம் உள்ளார் கொல்லோ?" என ஆண் மனத்தையும், ஆணுலகையும் பெண்ணுலகிலிருந்து பிரித்துக் கருதியவள். பழங்குடிகளின் வீழ்ச்சியைக் கண்டு வருந்தியவள். வேந்துருவாக்கம், உற்பத்திப் பெருக்கம் ஆகியவற்றின் மறுபக்கமான காடுகளின் மறுபக்க அழிவு, பாலை உருவாக்கம் ஆகியவற்றைக் கண்டு கலங்கியவள். பொதி பொதியாய்ப் பொருள் கொண்டு வருகிற வணிகர்களை பாலை நில எயினர்கள் கொள்ளையடிப்பதைப் பரிவோடு நோக்கியவள். "முட்டுவேன் கொல், தாக்குவேன் கொல், ஆ ஒல் எனக் கூவுவேன் கொல்" எனப் பெண்ணுணர்வை வெளிப்படுத்தத் தயங்காதவள். புதிய மதுவா இன்று மூழ்கிவிட வேண்டியது தான் எனத் தேட் கடுப்பன்ன நாட்படு தேறல் மீதான தன் காதலை வெளிப்படுத்தியவள். இத்தனை பரிமாணங்களையும் ஔவை மீது ஏற்றி நிறுத்துகிறார் இன்குலாப். அதியனுக்கும் ஔவைக்குமான உறவு ஒரு புரவலனுக்கும் பாணருக்குமான உறவுக்கும் அப்பாற்பட்ட பரிணாமத்தைக் கொண்டிருக்கக் கூடிய சாத்தியத்தையும் இன்குலாப் இந்நாடகத்தில் ஒரு பேச்சு பொருளாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

> இன்குலாப்பின் ஔவை
> இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டவள்.
> ஒவ்வொரு அசைவிலும் சொல்லிலும்
> இளமை தெறிக்கும் சங்கத்து ஔவை இவள்.
> இனிய நண்பன் அதியனுடன் குடித்துக் களித்துத்
> தன் இளமையைக் கொண்டாடியவள்.

000

சுமார் மூன்று மணி நேரம் நிகழத்தக்க இந்நாடகத்தை அதன் முழுமை கெடாமல் சுருக்கி எழுபது நிமிட அரங்க நிகழ்வாக்கியிருக்கிறார் மங்கை. ம.கா. சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம், சங்கீத நாடக அகாதமி ஆகியவற்றின் உதவியோடு 'மௌனக்குரல்' அமைப்பின் தயாரிப்பாக அமைந்த இந் நாடகத்தின் முதல் நிகழ்ச்சியைக் கரந்தை தமிழ்ச் சங்கத்தில் (தஞ்சை) காணும் வாய்ப்புக் கிடைத்தது. பெரும்பாலும் இளைஞர்கள், மாணவர்கள் நிறைந்த இக்குழுவில் அர்ச்சனா என்னும் நாட்டியம் பயின்ற இளம்பெண் ஔவையின் பாத்திரமேற்றுள்ளார். அந்தப் பாண் குழுவிற்குள் நிலவும் தோழமை, சமத்துவம், இளமைத் துடிப்பு, கேலி, கிண்டல் எல்லாவற்றையும் அற்புதமாக வெளிக்கொணர்கின்றனர் இந்த இளைஞர்கள். மேடை அமைப்பு, ஒப்பனை, உடை முதலியவை சிரத்தை எடுத்து அமைக்கப்பட்டுள்ளன. தொன்மைத் தமிழ்ப் பண்கள் எனச்சொல்ல இயலாவிட்டலும் தெருக் கூத்துக்குரிய இசை, அடவு முதலியவை சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் நிகழ்வே பாராட்டத்தக்கதாக அமைந்த போதிலும் அடுத்தடுத்த நிகழ்வுகளில் இன்னும் மெருகேறும் என நம்ப இடமுண்டு. பிரதி உருவாக்கத்திலேயே மங்கையின் பங்கிருந்ததைக் குறிப்பிட்டுச் சொல்கிறார் இன்குலாப். பிரதியைக் காட்சிப் படுத்தியதிலும் மங்கை வெற்றி பெற்றுள்ளார்.



எனினும், காட்சிப்படுத்தியதில் இரு முக்கிய பிரச்சினைகள் உள்ளதைச் சுட்டிக் காட்டுதல் அவசியம். இளமையையும் பெண்ணியச் சிந்தனைகளையும் முதன்மைப் படுத்தும் இந்த அரங்க நிகழ்வை மேலும் கொஞ்சம் குதுாகலப்படுத்தி (Carnivalise) இருக்கலாம்.

ஔவை ஒரு சிறிய கள்ளுக் கலயத்தைச் சுமந்து சுவைத்துத் திரிவதே தமிழ்ச் சூழலில் பெரிய விசயம் தானெனினும் ஒரு கள்ளுப் பானையை நடுவில் வைத்து அதியனும் ஔவையும் இதர பாணரும் பாண் மகளிரும் கூடிக்குடித்துக் களிக்கும் காட்சி ஒன்று இல்லாதது பெருங்குறை. அப்படி ஒன்று அமைந்திருந்தால் அது சங்க கால வாழ்முறைக்கு மேலும் பொருத்தமுடையதாகவே இருந்திருக்கும். சங்கப்பாடல்கள் நெடுகவும் பல இடங்களில் இத்தகைய காட்சிகள் அமைந்துள்ளதை விளக்கத் தேவையில்லை. இன்றளவும் கூட அரசுத் தடைகளையும் காவல்துறை கெடுபிடிகளையும் மீறி சாவு வீடானாலும், திருமண நிகழ்ச்சியானாலும், விருந்தினர் வருகையானாலும் கள்ளருந்திக் களித்தல் என்பது பெரும்பான்மைத் தமிழ் மக்களின் பண்பாடாக இருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. தமிழ்ப் பண்பாடு என்றால் பெரிய கோவில், பக்தி இலக்கியம், கண்ணகி, கனகவிசயர் தலையில் கல் ஏற்றியது என்பது தான் எனக் கட்டமைக்கப்படும் சூழலில் நாம் இதனைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஔவையின் சிறிய கள், பெரிய கள் என்கிற சொல்லாக்கங்களுக்குக் கொஞ்சம் தேன், நிரம்பத் தேன் எனத் தமிழ்ப் புலவர்கள் பொருள் எழுதிக் கொண்டிருந்த சூழலில், கலயம் சுமந்த இளம் பெண்ணை அரங்கேற்றியதற்குரிய பின்புலமாகக் கடந்த பத்தாண்டுகளில் தமிழ்ச் சூழலில் நடைபெற்ற விவாதங்கள் அமைந்துள்ளதையும் இங்கே சுட்டிக்காட்டத் தோன்றுகிறது.

கலை இலக்கிய ஆக்கங்களில் களி, கொண்டாட்டு முதலியவற்றின் முக்கியத்துவத்தை பாக்தின் போன்றோர் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால், உடல் சார்ந்த மகிழ்ச்சிகள், கொண்டாட்டுகள் என்பன பாவம், குற்றம் என்கிற சனாதனக் கருத்துக்களை இங்கே முற்போக்காளர்களும் முன்னிலைப்படுத்தி வந்துள்ளனர். கூடிப் - போராடுவது மட்டுமல்ல கூடிக் குதுாகலிப்பதும் கூட மானுடப் பண்பு தான். கொண்டாட்டமும் குதுாகலிப்பும் இல்லாத போராளி ஒரு பாசிஸ்டாக உருப் பெறுவதற்கான சாத்தியங்களே அதிகம். (அப்படி ஒரு கொண்டாட்டக் காட்சி அமைக்கப்பட்டிருந்ததாகவும் ஒத்திகையின் போதே கடும் விமர்சனங்கள் எழுந்ததால் நீக்கப்பட்ட்தாகவும் மங்கை கூறினார்.)

காட்சிப்படுத்தலில் கண்ட இன்னொரு குறை ஔவைக்குரிய ஒப்பனை, உடை மற்றும் உடலியக்கங்கள் தொடர்பானது ஒரு நாடக நிகழ்வில் Gestures (பிரெக்ட் இதனை Gest என்பார்) ரொம்ப முக்கியம். பல காட்சிகள் பல நூறு வசனங்கள் மூலம் சொல்ல முடியாதவற்றை ஒரு 'Gest'ன் மூலம் வெளிப்படுத்திவிட முடியும். மங்கையின் நெறியாள்கையிலேயே கூட அதியனுக்கும், தொண்டைமானுக்குமுரிய பண்பு வேறுபாடுகளை அத்தகைய 'தோரணை'களின் மூலம் வெளிப்படுத்துவது குறிக்கத்தக்கது. ஆனால், ஔவைக்குச் செய்யப்பட்ட ஒப்பனையாகட்டும், உடையாகட்டும், உட்காரும் ஒயிலாகட்டும் ஒரு மரபு வழித் தமிழ் மேற்குடிப் பெண்ணின் சாயல்களோடு அமைந்துள்ளது இன்குலாப்பின் ஔவைக்குப் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. அவளின் திமிறிப் பிதுங்கும், அடங்க மறுக்கும் பண்புக்குரிய Gestகளும் உடையும் ஒப்பனையும் முக்கியம்.

முழுக்க முழுக்க சங்கப் பாடல்களைப் பின்புலமாக்க் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்நாடகப் பிரதியில் ரெ்ம்பவும் கடினமானவை எனக் கருதப்படுகிற சங்கப் பாடல்களை அவற்றின் கவித்திறன், இசைப்பண்பு, பொருளடக்கம் எவையும் கெடாமல் இன்றைய தமிழில் பெயர்த்துள்ளதைச் சுட்டிக் காட்டல் அவசியம். ஔவை பற்றின சிந்தனைகளினுாடாக சங்ககால வாழ்வு, தமிழ்ப் பண்பாடு ஆகியன பற்றிய பல கேள்விகளை எழுப்பியுள்ள வகையில் இன்குலாப்பும் மங்கையும் பாராட்டுக்குரியவர்கள்.

அ.மார்க்ஸ்

நன்றி - நூலகத்திட்டம்



# பாங்கி

மூலம்: ஹிமான்ஷி ஷெலற்
தமிழில் : எஸ்.கே. விக்னேஸ்வரன்



தொடர்ச்சியாக விழுந்த இடிகளையும், உதைகளையும் தாங்க முடியாமல் கதவு அதிர்ந்தது. பயத்தினால் நடுங்கி வியர்த்துப் போனவளாய் அங்கிருந்த எல்லாப் பாரமான பெட்டிகளையும், அலுமாரிகளையும் கதவுக்கு அருகாக நகர்த்தி வைத்துவிட்டு அறையின் நடுவே நின்று கொண்டிருந்தாள் பாங்கி. அதைவிட இப்போதைக்கு வேறெதையும் செய்யமுடியாது. வெளியே தப்பிப்போக இருக்கும் ஒரேயொரு வழி ஷம்குவின் வீட்டைப் பார்த்தபடி இருக்கும் ஒரு ஜன்னல் மட்டும் தான். ஆனால், அப்படிப் போனால், முடிவே இல்லாமல் இருமிக் கொட்டிக் கொண்டிருக்கும் பகலாவின் பலவீனமான தந்தை இவளைப் பார்த்துவிடக் கூடும். அந்த ஆபத்தைத் தவிர்ப்பது கடினம்தான். ஆனால், அந்தக் கிழவனுக்கு அவ்வளவாக பார்வை சரியில்லை. பெரிதாக கண்டு விட முடியாது. இருந்தாலும் இதைவிட்டால் வேறு வழியில்லை. ஒன்றில் தன்னைக் காத்துக் கொள்வதற்காக அவள் ஓட வேண்டும் அல்லது தற்கொலை செய்து கொள்ளவேண்டும்.

"உடனே கதவைத் திற... இல்லாவிட்டால் அதை உடைச்சு நொருக்குவோம்"

"ஆ... ஏன் பிறகு பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? உடைச்சுத் திறவுங்கோ அதுக்கு அவ்வளவு நேரம் எடுக்காது. அந்த சூனியக்காரி வெளியால் வரட்டும். உந்த நடத்தை கெட்டவள் இந்த முழுக் கிராமத்தையுமே அழிக்கவெண்டு வெளிக்கிட்டிருக்கிறாள்.... வாடி வெளியாலை..."

"ராஷலா... அந்த கோடாலியை எடுத்துவா..."

கதவு திணறியது. தள்ளல்கள், உதைகள், முஷ்டிகளின் பலமான குத்தல்கள்... இப்போது பலமான உரமான ஒரு ஆயுதத்தின் தாக்கல்...

பயம் தோய்ந்த கண்களுடன் ஒரு மூலையில் நின்று நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த ரட்கி முணு முணுத்தாள்.

"இரவிரவாக பாங்கி சூனியம் செய்து கொண்டிருக்கிறாள்... நான் முந்தியே உங்களுக்கு இதைப்பற்றியெல்லாம் சொன்னேன் தானே.... அவள் என்னத்துக்கோ ஒண்டுக்காகத் தான் இப்படிச் செய்கிறாள் எண்டு எனக்குத் தெரியும்... ஒவ்வொரு இரவும்.. நீங்கள் ஒருதரும் நம்பேல்லை. இப்ப நீங்களே பாருங்கோ என்ன நடந்திருக்கெண்டு..."

பாங்கிக்கு சொந்தமான எல்லாப் பொருட்களும் கதவுக்கு அருகே குவிந்து கிடந்தன. அறையின் மையத்தில் இருந்தது வெறுமனே அவளது நிழல் மட்டும் தான். கதவு உடைக்கப்பட்டுத் திறந்ததும் என்ன நடக்கும் என்று நினைத்துப் பார்த்ததில் அவள் திகிலால் உறைந்து போயிருந்தாள். ஒரு நொடிப் பொழுதில் அந்தக் கும்பல் குடிசைக்குள் குபுகுபுவென்று புகுந்து அவளது முதுகில் உதைத்துவிடும்... பிய்த்துப் பிடுங்கப்படும் அவளது உடையின் கிழிசல்களினூடாக அவளது கால்கள் வெளியே தெரியும்.... அவளை நோக்கி கிராமத்தவர்கள் கற்களை வீசியபடி துரத்துவதாகவும், தான் மூச்சுவிடாமல் ஓடுவதாகவும் அவளுக்குத் தோன்றியது. அவர்கள் சிவக்கக் காய்ச்சிய இரும்புக் கோல்களை வைத்திருந்தார்கள். அவளால், அவளது உடற்காயங்களிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்தோடுவதை உணர முடிந்தது. அவள் நாதியற்றவளாகத் தன்னை உணர்ந்தாள்.

அறைக்குள் இருந்த ஒரு பெட்டிக்குள் கயிறு இருப்பது அவளுக்குத் தெரியும். ஒரு சுருக்குச் செய்து கொள்ள அதிக நேரம் எடுக்காது. கழுத்தில் அதைப் போட்டுக் கொள்வது மிகவும் சுலபமானது. கஷ்டம் ஒரு சில வினாடிகளில் முடிந்துவிடும். ஆனாலும், அதைச் செய்ய பாங்கிக்கு தயக்கமாக இருந்தது. அவளது அடிமனதில் யாரோ இன்னமும் இருந்தார்கள். அது சிலவேளை அவள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அவளது கணவன் பெமோவாக இருக்கக் கூடும்.

இல்லாவிட்டால், முதல்முதலாக அப்படி ஒரு சம்பவம் இந்தக் கிராமத்தில் நடந்திருக்காது. இங்குள்ள குழந்தைகள் இறந்தார்கள். கில்லா அவர்களில் ஒருவன். அன்றைய தினம் கில்லா பாங்கியின் குடிசைக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்தான். அவனுடன் டாஜி, கத் என்று வேறு சிறுவர்களும் இருந்தார்கள். திடீரென்று அங்கே ஒரு களேபரம். பலவீனமானவர்களையும் படுக்கையில் இருந்த வயதானவர்களையும் கூட இந்தக் களேபரம் அவ்விடத்திற்கு வரச் செய்துவிட்டது. கில்லாவுக்கு திடீரென்று ஹிஸ்றீரியா வந்தது போலத் தோன்றியது. அவனது கண்கள் குளிராகவும், அகலத் திறந்தபடியும் இருந்தன. அவன் விழுந்து கிடந்தான்.

ஒரு வாகன வசதியும் இருக்கவில்லை. மிகுந்த சிரமத்தின் பின்னர் பிம்மா ஒரு ரிக்ஷா வண்டியைப் பிடித்து வந்தான். ஆனால், மருத்துவமனையில் அவனது உயிரற்ற உடலிலே தான் ஊசிகள் ஏற்றப்பட்டன. வைத்தியர்கள் அவர்கள் தாமதித்து விட்டதாகக் கூறினர். இவையெல்லாம் கில்லாவின் தாயாரின் கண்முன்னாலேயே நடந்து முடிந்தன.

கில்லாவின் மரணச் செய்தி கிராமத்திற்கு வந்தபோது பாங்கி அடுப்பின் முன்னால் உட்கார்ந்தபடி, அதன் சீரான வெப்பத்தால் வேகிய ரொட்டியில் கருப்பும் கபிலமுமாக ஏற்பட்டிருந்த புள்ளிகளையுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தெரியும் அது அவளது தவறு அல்ல என்று. ஆனாலும், இனந்தெரியாத பயம் அவளது கால்களை நடுங்கவைத்தது.

பெமோ கிராமத்தை விட்டு வெளியேறிய பின் அவனிடமிருந்து எந்தத் தகவலும் இல்லாமல் இருக்கும் நிலையில், அவளது குடிசைக்கு வரும் யாரைக் கண்டாலும் இப்படித்தான் இனந்தெரியாத ஒரு பரபரப்பும் நடுக்கமும் வரும்.

அவள் பெமோவுக்கு எத்தனையோ தடவை நகரத்துக்குப் போகவேண்டாம் என்று சொல்லியிருக்கிறாள். பிடிவாதக்காரனான அவன் ஒரு போதும் அவளது பேச்சைக் கேட்டதில்லை.

"சையாவின் கூரைகளையும், சுவர்களையும் பார். எல்லாமே கொங்கிறீற்றினால் ஆனவை. நகரத்தில் எப்போதும் தொழிலாளர்கட்கான தேவை இருக்கும். நாங்கள் நிறைய சம்பாதித்தால் தானே சேமிக்கலாம். இந்த பிரயோசனமில்லாத இடத்தில் இருக்கிறதிலை என்ன பெருமை இருக்கு?"

இந்தக் கதையையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்த பெமோ ஒரு நாள் கிராமத்தை விட்டுப் போய் விட்டான். பிறகு திரும்பவே இல்லை. ஆனாலும் அவனைப் பற்றி கிராமத்துக்கு பல கதைகள் வந்து கொண்டிருந்தன - கலவரத்தில் அகப்பட்டுச் செத்துப்போனதாக, பஸ் விபத்தில் மரணமானதாக, அவன் சிறையில் இருப்பதாக - எல்லாம் கதைகள் வந்தன. இன்றும் சிலர், நகரத்தில் வசதியாக வாழ எல்லாம் இருக்கிறது, பெமோ வெறுமனே அவனுடைய இந்த மனைவிக்காக இங்கே திரும்பி வரவேண்டும் என்று எந்தத் தேவையும் இல்லை என்றும் கூறினார்கள்.

கூரை, ஒரு பின்னறையைப் போல இரவு நேரங்களில் ஒழுகியது. ஓயாத மழை பாங்கியை கண்ணை மூடிக் கொள்ளவும் அனுமதிப்பதில்லை. தூங்குவதா விழித்திருப்பதா என்று தீர்மானிக்க முடியாமல் அவள் ஒரு எண்ணெய் விளக்கை ஏற்றுவதும் பின் ஊதி அணைப்பதுமாக இருப்பாள். இது மணிக்கும் ரத்தனுக்கும் பாங்கி ஏதேதோ தீய சடங்குகளைச் செய்வதாகக் கதை பரப்பக் காரணமாகி விட்டது. பாங்கியின் சூனியம் பற்றிய வதந்திகள் பரவியதால் கிராமத்தில் பேயோட்டும் மந்திரவாதி வேல்ஜி அடிக்கடி நடமாடக் காணப்பட்டான்.

இந்த நிலையில் தான் கில்லாவின் திடீர் மரணம் நடந்தது.

கதவு உடையும் தறுவாயிலிருந்தது. பாங்கி ஜன்னலை நோக்கி மெதுவாக நகர்ந்தாள். அது பெரும்பாலான நேரங்களில் பூட்டியே இருப்பதால் அதை மெதுவாகத் தள்ளுவதோ, திறக்க முயல்வதோ பயனற்றது. பாங்கி தனது சக்தி எல்லாவற்றையும் திரட்டிக் கொண்டு அந்த இறுகப் பூட்டியிருந்த கதவைத் தள்ளித் திறக்க முயன்றாள். அது பெரும் சத்தத்துடன் உடைந்து விழுந்தது. ஒரு கணம் பாங்கி அந்தச் சத்தம் யாருக்காவது கேட்டிருக்கும் என்றும், மறுகணம் தான் அந்தக் கும்பலின் கையில் சிக்கி விடுவேனென்றும் நினைத்தாள். ஆனால், யாரும் அவளைக் கவனிக்கவில்லை. அவளது பயம் தெளிந்ததும், பின்புற வீதி மிகவும் அமைதியாகவும் ஆளரவமற்றதாகவும் இருந்தது. சத்தமெல்லாம் முன் பக்க கதவருகிலிருந்துதான் வந்துகொண்டிருந்தது. ஜன்னல் அவ்வளவு உயரமாக இல்லை. அதிலிருந்து வெளியே குதித்து விடலாம். கண்களை இறுக மூடிக் கொண்டு தனது அதிர்ஷடத்துக்கு நன்றி கூறியபடி வெளியே குதித்தாள். ஒரு கணத்தைக் கூட வீணாக்க விரும்பாமல் ஓடத் தொடங்கினாள்.

அவளுக்கு தான் ஓடத்தான் வேண்டும் என்று மட்டும் தெரிந்திருந்தது. ஆனால், எங்கே என்று தெரியவில்லை. அவளது கால்கள் தடுமாறியபோது மூச்சு விடுவதற்காக ஒரு கணம் நின்ற போது அவளுக்கு ஒரு கணீரென்ற குரல் கேட்டது.

"பார் பாங்கி அன்ரி எவ்வளவு முட்டாள் தனமாக ஓடுகிறாள் என்று"

அந்த வார்த்தைகள் பாங்கிற்கு சூடான இரும்புக் குண்டுகளாகத் துளைத்தன. அவள் இன்னும் வேகமாக ஓடினாள். அந்த ஆத்திரம் கொண்ட கும்பலுக்கு ககியின் மெல்லிய குரல் கேட்கவில்லை. இந்த ஒரு விடயம் மட்டும் தான் அந்தக் கணத்தில் அவள் நினைவுக்குத் தெரிந்தது. அவளுக்கு தனது காலடிச் சத்தத்தையும் துடிக்கும் இதயத்தின் ஒலியையும் தவிர வேறெதுவும் கேட்கவில்லை என்று தெரிந்ததும் சற்று நின்று தன்னை ஒரு பெரிய மரத்தில் பாதி மறைத்துக்கொண்டபடி களைப்பாறினாள். அவளது பயந்த கண்கள் ஒரு திசையில் மட்டும் குத்திட்டு நின்றன. கிராமத்தின் இந்தப்பகுதி சன நெரிசல் குறைந்த குடிசைகள், அங்கும் இங்குமாக சிதறிக்கிடக்கின்ற ஒரு பகுதியாகும். இங்கெங்கோதான் பிம்மாநாத் கோவிலின் முகப்பில் தட்டுவும் பவ்ஜீயும் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும்.... அது தான் அவர்களது வாசஸ்தலமாச்சே... அவர்கள் நன்றாகக் குடித்திருப்பார்கள். அவளது மனதில் இந்த எண்ணம் வந்ததும், அவளது கைகள் அவளை அறியாமலே அவளது கால்களையும் வியர்வையால் குளித்திருந்த மார்பையும் மேல் துண்டால் மூடிக்கொண்டன.

தட்டுவிடம் ஒரு பழக்கம் இருந்தது. அவன் நெரிசலான சந்தையிலும் சரி, ஆளரவமற்ற ஒடுங்கிய பாதையிலும் சரி, பாங்கியின் மார்பகத்தை வெட்கம் கெட்டவிதமாகப் பார்ப்பான். ஒருமுறை பலசரக்குக் கடையொன்றில் தனது சட்டைக்குள்ளிலிருந்து பணத்தை எடுப்பதற்காக பாங்கி முயன்றபோது, தட்டு அவளின் பின்னாலிருந்து அவளை உறுத்துப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தாள். அன்றிலிருந்து அவள் தனது பணத்தை சேலைத் தலைப்பில் முடிந்து வைக்கத் தொடங்கினாள். ஆனாலும் இது எந்தப் பெரிய வித்தியாசத்தையும் ஏற்படுத்தவில்லை. தட்டுவின் கண்கள் அனேகமாக அவளது மார்பகத்தை முட்டிக் கொள்ளும். இது அவளை மிகவும் சங்கடத்துக்குள்ளாக்கிக் கொண்டிருந்தது. உண்மை, தட்டுவின் கண்களில் காமத்தின் சாயல் இருப்பதாகத் தெரியவில்லை என்பதை பாங்கி ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். கண்ணில் ஒரு சிவப்பு படலத்தைக் காணலாம். ஆனால், அது அவனது குடியால் வந்த நிறம். மற்றப்படி தட்டு ஒரு வார்த்தையும் பேசியதில்லை. வெறுமனே பார்ப்பது தான். இதை விட்டால் அவன் ஒரு நல்ல மனிதன். பாங்கிக்கு இது தெரியும். இன்னொருநாள் அவள்

நன்றி - நூலகத்திட்டம்



ஆஸ்பத்திரியில் மருந்தெடுத்துக் கொண்டு வந்தபோது தட்டுத்தான் கண்டக்டரிடம் கூறி பஸ்ஸை நிறுத்தச் செய்திருந்தான். பாங்கி தனது காலை நேர அவசரங்களுக்கிடையில் ரத்தனின் இரட்டைக் குழந்தைகளை ஒரு தடவை பார்க்கும் வாய்ப்பைத் தேடுவதுண்டு. ரத்தன் அந்தக் குழந்தைகட்கு பாலூட்டிக் கொண்டிருப்பாள். பிறகு அவை இரண்டும் சந்தோசமாக விளையாடும். பாங்கி தாகம் நிறைந்த கண்களுடன் அவற்றைப் பார்த்துக் கொண்டிருப்பாள். இந்த நேரங்களில் தட்டு பாங்கியை விழுங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

அப்பாடா... இந்த மரத்தின் கீழ் இன்னும் கொஞ்ச நேரம் நிற்க முடியும் என்றால், எவ்வளவு சுகமாக இருக்கும்... மெல்லிய சிலுசிலுத்த தென்றல் அவளது கண்களை வருடியது. களைப்பில் அவளது கண்கள் மூடிக் கொண்டன. தூக்கத்தில் யாருடனோ பேசுவது போல அவளது உதடுகள் அசைந்தன. தட்டுவுக்குச் சொல்ல வேண்டும்... உன்னால் முடிந்தால் என்னைக் காப்பாற்று... நீ உண்மையாக... பெமோ ஒரு ஏமாற்றுக்காரன். அவன் அப்படியெல்லாம் செத்திருக்க மாட்டான்... அவன் தப்பியோட விரும்பினான். என்னைக் கடத்திவிட்டுப் போக விரும்பினான். அதற்காகத்தான் அந்தச் சாக்குப் போக்கெல்லாம் சொன்னான்....

திடீரென்று அவள் திடுக்கிட்டு கண்களைத் திறந்தாள். அவளது இமைகள் கனத்தன. ஆனால், ஒரு பலமான உருட்டல் அவளை திடுக்கிட வைத்தது. ஓடினாள்... நேரடியாக பிம்நாத் கோவிலை நோக்கி அவள் ஓடத்



தொடங்கினாள். அவளை நோக்கி கற்கள் வீசப்பட்டன. தடிகளும் கோடரிகளும் காற்றில் வீசப்படும் ஒலி எழுந்தது.

"அவளை முடித்துவிடு. அவளை விட்டு வைக்கவேண்டாம். சூனியக்காரியை விட்டு வைக்கக்கூடாது.

"வாடி இங்கே சூனியக்காரி: ஒளித்துவிடப் பார்க்காதே, நாங்கள் என்ன செய்வோம் தெரியுமா? இந்தக் கிராமத்தைப் பாதுகாக்க நாங்கள் இன்னமும் உயிரோடிருக்கிறோம்...."

"டேய் வாங்கடா.. கெதியா வேகமாக வாங்கடா... இந்தச் சூனியக்காரி எங்களை ஏய்த்துவிடுவாள்... தன்னை வேறேதாவது ஒன்றாக மாற்றிவிடுவாள். இவர்களுக்கு. அப்படிச் செய்யும் சக்தியும் இருக்கிறது இல்லையா?"

பாங்கியின் தலைமுடி அவள் முகத்தை கிட்டத்தட்ட முற்றாக மூடியிருந்தது. ஒரு பகுதி முடி காற்றில் பறந்தது. அவளது ஆடையைப்பற்றி அவள் அக்கறைப்படவில்லை. அவளது மார்பகத்தை மூட அவள் முயற்சிக்கவில்லை. அவளது இடது மார்பகத்திலிருந்த கறுப்பு நிற மச்சம் கூட தெளிவாகத் தெரிந்தது. அவள் தட்டுவின் முன்னால் நின்றாள் வார்த்தைகள் எதுவும் இன்றி. அவளை இந்த நிலையில் கண்ட தட்டு குழம்பிப் போனான். தனக்கேற்பட்ட அதிர்ச்சியிலிருந்து ஒரு கணத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டாலும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மூச்சிழந்த களைத்துப்போன பாங்கி ஓரளவு உறுதியாக இருந்தாள். தட்டு வெளியே கேட்ட சத்தத்தால் ஈர்க்கப்பட்டான்.

"ஓய்... தட்டு அவளை, அந்தச் சூனியக்காரியைப் பிடி"

"தட்டு ஒரு குடிகாரன். அவன் அவனாக இருக்க மாட்டான்."

"தட்டு அவளை இங்கே எறி"

"தட்டு அவளை விட்டுவிடாதே... அவள் இந்தக் கிராமத்து ஆண்களை விழுங்கப் போகிறாள்... நடத்தை கெட்டவள்..."

பாங்கிக்கு நிறையவே பேசவேண்டும் போல இருந்தது. ஆனால், தட்டு பயந்தவனாகப் பின் வாங்கினான். அவளது கைகள் எதையோ தேடின. ஏதாவது பொருளையாக இருக்கலாம். அல்லது பாங்கி அப்படி நினைத்தாள். அவனுக்கு முன்னால் பெரிதாக திறந்தபடி தெரிந்து கொண்டிருந்த அவளது மார்பகங்களைக் கூட அவன் கவனித்திருக்கவில்லை. அவன் அதிர்ச்சியடைந்தவனாக அங்கும் இங்கும் பார்த்தான்.

"தட்டு, நீ நேரத்தை வீணாக்குகிறாய். ஏன் அங்கே நின்று கொண்டிருக்கிறாய்"

தட்டு எதையும் செய்வதற்கு முன் பயம் அவளை முழுமையாக ஆட்கொண்டுவிட்டது. அவள் கோவில் முகப்பைத் தாண்டி ஒரு அம்புபோல வேகமாகப் பறந்து போனாள். அவளது உறுதியான கால்கள் நிலத்தில் பாய்வதாகவே தோன்றவில்லை.

"பார் அந்தச் சூனியக்காரி ஆம்பிளையள் எங்களை முந்திக் கொண்டு வேகமாக ஓடிவிட்டாள்"

ஆற்றில் குதிப்பது அவர்களின் கைகளில் அகப்படுவதை விட நல்லது. பாங்கியின் ஆற்றாமையினால் எழுந்த இந்த முடிவு அவளை ஒப்பரவற்ற மலைப் பாதையைத் தெரிவு செய்ய வைத்தது. அதில் கற்களும், முட்புதர்களும் நிறைந்திருந்தன. அவள் தடுமாறி வீழ்ந்தாள். அவளது கால்கள் உடைந்து போனவை போல அவளைத் தூக்கமறுத்தன. நாதியற்றவளாக, திகைத்துப்போய், முகம் முரட்டுத் தரையை முட்டிக்கொண்டிருக்க வியர்வையில் குளித்தபடி அவள் விழுந்து கிடந்தாள்.

வன்முறைக் கும்பலும் அதன் துளைக்கும் சத்தமும் அண்மித்துக் கேட்டது. யாரோ அவளை இழுத்தார்கள். அவள் உறுதியாக வேர் விட்டிருந்த புற்களை இறுகப் பற்றிக் கொண்டாள். அவளது உடைகள் கிழிந்து தொங்கின. அவளது வெற்று முதுகுப்புறம் பல தடிகளை, முஷ்டிகளை, உதைகளை, கற்களை மூறைகேடான செயல்களையெல்லாம் வாங்கிக் கொண்டது. அதன்பிறகு அவள் முழுமையான அமைதியை அடைந்தாள். மூர்ச்சிலசயாகி உயிர் அமிழ்ந்து கொண்டிருக்கையில், ஒரு கடந்துபோகிற சிந்தனை... வெறும் கடந்து போகிற சிந்தனை அவள் மனதில் ஓடியது...

"... காட்டிக் கொடுக்கும் பன்றிகளா... நீங்கள் புழுத்துப் போவீர்கள்... தட்டு இவர்களுள் ஒருவன் அல்ல... அந்தப் பாவி குடிக்காமல் இருந்திருந்தால் என்னைக் காப்பாற்றியிருப்பான்... இந்தக் குவியலுக்குள் ஒரு உண்மை மனிதன்...

மக்கள் சூனியக்காரிகட்கு பிடரியிலும் கண் இருப்பதாக , பின் புறமாகப் பார்க்கும் சக்தியிருப்பதாகவும் நம்புகிறார்கள். எல்லாம் சுத்தப்பேத்தல். இல்லாவிட்டால், குப்புற விழுந்து கிடந்த பாங்கி ஒரு மலைபோன்ற மனிதன் பலமும், உறுதியும் கொண்ட தட்டு அந்தக் கூட்டத்தில் இருந்ததை நிச்சயம் கண்டிருப்பாள்.

'பிடரிக் கண்' என்ற தலைப்பிலான இக் குஜராத்திக் கதை, கதாசிரியையாலேயே ஆங்கிலத்திற்கு மொழி மாற்றம் செய்யப்பட்டு Indian Literature இதழில் பிரசுரமாகியிருந்தது. ■

## இந்தியத் திரைப்பட விழா - 99

1999ம் ஆண்டிற்கான இந்தியத் திரைப்பட விழா இம்மாதம் 29ம் திகதி முதல் பெப்ரவரி 5ம் திகதி வரை கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி திரையரங்கில் நடைபெறவுள்ளது. இவ்விழாவை இம்முறை இந்தியாவின் பிரபல திரைப்பட இயக்குனர் ஷியாம் பெனகல் தொடங்கி வைக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், இவர் கலந்து கொள்ளும் நிகழ்வு, 'அழைப்பாளர்களுக்கு மாத்திரமான' நிகழ்வாக இருக்குமென ஆசியத் திரைப்பட நிலையம் தெரிவித்துள்ளது. இந்நிகழ்வு 28ம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டப சினிமா அரங்கில் நடக்கவுள்ளது.

ஜனவரி 27ம்திகதி நடைபெறவுள்ள நீல் ஐ பெரேராவின் எட்டாவது ஞாபகார்த்த உரையை 'இந்திய சினிமாவும் தேசம் பற்றிய கருதுகோளும்' என்ற தலைப்பில் ஷியாம் பெனகல் நிகழ்த்தவுள்ளார். நீல் ஐ பெரேரா, இலங்கையின் தனித்துவமான சினிமா கலாசாரத்துக்காக செயற்பட்ட ஒருவர் என்பதும், சினிமா விமர்சக, தொடர்பூடக அமைப்பின் நிறுவனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த ஞாபகார்த்த உரை கொழும்பு - 7ல் அமைந்துள்ள இலங்கைத் தொலைக்காட்சி பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

65 வயதாகும் ஷியாம் பெனகல் 'நல்ல' திரைப்பட ரசிகர்களால் மிகவும் நன்கறியப்பட்டவர். இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் பிறந்த இவர் பிரபல படத் தயாரிப்பாளர் குரு தத்தின் மைத்துனர். ஹைதராபாத் உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு மேற்கொண்டிருந்த போது மாணவ சினிமா இயக்கத்தில் பங்கேற்றார். பின்பு மும்பாயில் தொழில்நிமித்தம் குடியேறிய வேளை தொழிலினூடே சுமார் 900 விவரணப் படங்களை எடுத்தார். அத்துடன் 11 கூட்டுத் தயாரிப்புக்களிலும் பங்கேற்றார்.

இவரின் முதற் திரைப்படம் 'அங்கூர்' (1973). ஷப்னா ஆஸ்மி நடித்தது. இலங்கை ரூபவாஹினியும் ஒளிபரப்பியது. இத்திரைப்படம் பரவலான வெற்றியையும், சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்தது. எனினும் இத்திரைப்பட விழாவில் ஷியாம் பெனகலின் வேறுபடங்களே திரையிடப்படுகின்றன. 'நேரு' பற்றிய விவரணத் திரைப்படமும், 'The Making of Mahathma, என்ற திரைப்படமுமே காண்பிக்கப்படவுள்ளன. இது காந்தியின் 20 வருட கால ஆபிரிக்க அனுபவத்தைப் பின்னணியாகக் கொண்ட படமாகும்.


இம்முறை திரைப்பட விழாவின் சிறப்பம்சம் யாதெனில், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தோடு தொடர்பான படங்கள் காண்பிக்கப் படுவதாகும். ஏதாவதொரு பொதுத் தலைப்பில் திரைப்பட விழாவை நிகழ்த்தும் போக்கை ஆசிய திரைப்பட நிலையம் சென்ற முறையே தொடக்கி வைத்திருந்தது. ஈரானியத் திரைப்பட விழாவில் தனியே யுத்தம் சம்பந்தமான படங்களைக் காண்பித்தது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவில் திரையிடப்படும் இன்னொரு திரைப்படம் கோவிந் நிஹ்லானியின் 'Tamas' (இருள்) ஆகும். இது இரண்டு இடைவேளைகள் கொண்ட ஆறு மணித்தியாலயப் படமாகும். இதுவும் இந்தியப் பிரிவினை தொடர்பான படமாகும்.

இது தவிரவும் பிரபல இயக்குனர் எம்.எஸ் சத்யுவின் 'Garam Havo (சுடுகாற்று) எனும் படமும், குஷ்வந்த் சிங்கின் நாவலை அடியொட்டி Pamela Rook இயக்கிய Train to Pakistan படமும், Ketan Mehtaவின் 'Sardar'ம், ரிச்சர்ட் அட்டன்பர்ரோவின் 'காந்தி' திரைப்படமும் இவ்விழாவில் காண்பிக்கப்படவுள்ளன. இப் படங்கள் யாவும் இந்திய சுதந்திரம், இந்திய - பாகிஸ்தான் பிரிவினை பற்றிப் பேசும் படங்களாகும். 'காந்தி' படம் இலங்கையில் முன்பு திரையிடப்பட்டது. Train to Pakistan இலங்கைத் திரையரங்குகளில் காண்பிக்கப்படவுள்ளது.

சென்ற முறையைவிட இம்முறை படத் தெரிவுகள் சிறப்பாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'Tridev' போன்ற படங்களை சென்ற முறை காண்பித்து பார்வையாளர்களின் எரிச்சலை சம்பாதித்த AFC, இம்முறை ஷியாம் பெனகலையும் வரவழைத்து நல்ல படங்களையும் காண்பிப்பது பாராட்டுக்குரியது.

இவ்விழா கேகாலை, திருகோணமலை, மாத்தறை போன்ற இடங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் வருட ஆரம்பத்திலேயே கொழும்பில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. ○



# சீன அச்சுறுத்தல் என்கிற பூச்சாண்டி:

# சில மேலதிகக் குறிப்புகள்

எஸ்.வி. ராஜதுரை

(இறுதிப் பகுதி)

ஹன்டிங்டனின் கூற்றுக்களிலுள்ள பொய்களை நாம் இப்போது காண்போம்.

(1) அமெரிக்கா தனது இராணுவ பலத்தைக் குறைக்கவில்லை. மரபான துருப்புக்களின் எண்ணிக்கையையும் வெளிநாடுகளில் இருந்த இராணுவத் தளங்களின் எண்ணிக்கையையும் அது குறைத்திருக்கக் கூடும். அதே சமயம் அதனுடைய அதிநவீனமான ஆயுதங்களும், போர் நுட்பங்களும் பெருகியுள்ளன. அதன் காரணமாக அது உலக நாடுகள் அனைத்தின் மீதும் தனது மேலாதிக்கத்தைச் செலுத்தக் கூடிய வல்லமை பெற்றுள்ளது என்பதை 1991 வளைகுடாப் போர் நிரூபித்தது. கெடுபிடிப்போரின் முடிவுக்குப் பிறகு உலகில் ஆயுத ஏற்றுமதியில் முதலிடம் வகிப்பது அமெரிக்கா தான். வளர்முக நாடுகளுக்கு எழுபதுகளிலும், எண்பதுகளிலும் அமெரிக்கா செய்து வந்த ஆயுத விற்பனையைவிட 1990களில் செய்யும் ஆயுத விற்பனை அதிகம். ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தின் (UNDP) 1994 ஆம் ஆண்டு அறிக்கை அதிக அளவில் ஆயுத ஏற்றுமதிகளையும், இறக்குமதிகளையும் செய்துள்ள நாடுகளின் விபரங்களைத் தந்துள்ளது:

பாகிஸ்தானின் ஆயுத இறக்குமதி, இந்தியாவின் இறக்குமதியை நெருங்கவே முடியவில்லை.

(2) ஆயுதங்களின் உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் சீனா முக்கிய இடம் வகிக்கிறது என்றாலும் "எண்பதுகளில் இராணுவச் செலவை இடைவிடாது குறைத்துக் கொண்டே வந்த ஒரே ஒரு வலிய நாடு சீனா தான்" என்று உலகில் மதிக்கப்படும் நிறுவனமான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) 1990இல் வெளியிட்ட ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளது. இராணுவ நவீனமயமாக்கத்தைவிட பொருளாதார நவீனமயமாககத்திற்குத்தான் சீனா முன்னுரிமை வழங்குகிறது. ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதைவிட வெளிநாட்டு மூலதனங்களை வரவழைப்பதிலும் அண்டை நாடுகளுடன் வெளிவர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதிலும் தான் சீனா அக்கறை கொண்டுள்ளது.

(3) ஐக்கிய அரபு எமிரேட்டுகளிலிருந்து இந்தோனேசியா வரை, எகிப்திலிருந்து பங்களாதேஷ் வரை பெரும்பாலான முஸ்லிம் நாடுகள் அமெரிக்காவிடமிருந்து தான் ஆயுதங்கள் வாங்குகின்றனவேயன்றி சீனாவிடமிருந்து அல்ல. 1990ஆம் ஆண்டு இறுதியில் சவூதி அரேபியா அமெரிக்காவிடம் 2100 கோடி டாலர் மதிப்புள்ள ஆயுதங்களை இறக்குமதி செய்வதற்கும் ஒப்பந்தம் செய்து கொண்டது. 1991 செப்டம்பரில் குவைத் அமெரிக்காவுடன் பத்தாண்டுகால இராணுவப் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டது. அணுஆயுதங்களைத் தயாரிப்பதற்காக ஈரான் சீனாவிடமிருந்து அணுசக்தி தொழிநுட்பத்தை வாங்கியிருப்பதாக ஹன்டிங்டன் கூறுகிறார். ஆனால், ஈரான் - ஈராக் போர் முடிந்த பிறகு ஈரான் தனது இராணுவச் செலவைக் குறைத்துக்கொண்டே வருகிறது. உலகில் கொந்தளிப்புள்ள பகுதி என்று சொல்லப்படும் பகுதியில் மிகக் குறைந்த இராணுவச் செலவு செய்யும் நாடு ஈரான் தான்.

(4) சீனாவிடமிருந்து ஒரு சில இஸ்லாமிய நாடுகள் ஆயுதங்கள் வாங்குவதாக வைத்துக்கொண்டாலும், அது கான்பூசிய - இஸ்லாமியத் தொடர்பை உருவாக்குவதாகக் கூறுவது மடமை. பிற எல்லா நாடுகளையும் போலவே சீனாவும் தனது சொந்த நலன்களுக்கே முதன்மை தருகிறது. முஸ்லிம் நாடுகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் பலவற்றில் சீனா அந்நாடுகளின் நிலைப்பாட்டை ஆதரிக்கவில்லை. பொஸ்னியா - ஹெர்சகேஸினா விஷயத்தில் இஸ்லாமிய நாடுகளுக்கு சீனா ஆதரவு தரவில்லை. 1941இல் இஸ்ரேல், ஸ்யோனிசம் (Zioism) பற்றி அமெரிக்காவின் முன் முயற்சியால் ஐ.நா. அவையில் வாக்கெடுப்புக்காகத் தொடங்கப்பட்ட விவாதத்தின் போது அரபு நாடுகளையும், பிற இஸ்லாமிய நாடுகளையும் சீனா ஆதரிக்கவில்லை. அதற்கு முந்திய ஆண்டு சீனா இஸ்ரேலுக்கு இராஜதந்திர அங்கீகாரம் வழங்கியது. அது ஈரான், ஈராக், லிபியா, பாகிஸ்தான் போன்ற இஸ்லாமிய நாடுகளுக்கு எரிச்சலூட்டியது. சீனாவின் எல்லைப்புற மாகாணமான சிங்கியாங், உள்மங்கோலியா ஆகியவற்றில் முஸ்லிம் சிறுபான்மையினருக்கும், ஹன் இனத்தவருக்குமிடையே பூசல்கள் நிலவுகின்றன. சில மத்திய ஆசிய முஸ்லிம் நாடுகளிடமிருந்து தொல்லைகள் வருவதாக சீனா புகார் கூறுகிறது. 1971இல் நடந்த பங்களாதேஷ் விடுதலைப் போரை சீனா ஆதரிக்கவில்லை. இவையெல்லாம் கன்பூசிய - இஸ்லாமிய தொடர்பைச் சுட்டிக்காட்டுகின்றன.

மேலும், கடந்த 20 ஆண்டுகளாக சீனா தனது பொருளாதாரத்தை நவீனமயமாக்குவதற்காக மேற்கு நாடுகளிடம் நெருக்கமாக வந்துள்ளது. எனினும், வளைகுடாப் போரின் போதும் லிபியா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட போதும், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பக்கம் நிற்க சீனா மறுத்து விட்டது. ஐ.நா. சபையானது அதில் உறுப்பு வகிக்கும் நாடுகளின் இறையாண்மைக்குக் குழிபறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்று கருதும் சீனா ஈராக்குக்கும் லிபியாவிற்கும் நேர்ந்த கதி தனக்கும் வரலாம் என்று அஞ்சுவதில் வியப்பில்லை.

ஒரு பொதுவான நாகரீகத்தையோ, பண்பாட்டையோ பல நாடுகள் பகிர்ந்து கொள்வதால் மட்டுமே அவற்றுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பு ஏற்படும் என்பதற்கான அறிவுபூர்வமான அடிப்படை ஏதுமில்லை என்ற போதிலும், மக்கள் சீனக் குடியரசு, ஹாங்காங், தாய்வான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் வேறு சில ஆசிய நாடுகளிலும் உள்ள கன்பூசிய சமூகங்கள் ஒன்று கூடி கலாசார ஒற்றுமையின் அடிப்படையில் சீன மக்கள் குடியரசை மையமாகக் கொண்ட கிழக்கு ஆசிய பொருளாதார முகாமொன்றை உருவாக்கிக் கொண்டிருப்பதாக ஹன்டிங்டன் கூறுகிறார். அதாவது இந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மேற்குலக மூலதனத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் என்று அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் எச்சரிக்கிறார் அவர்.

இஸ்லாமிய அச்சுறுத்தல் என்ற பிரசாரத்தை அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பரப்புவது அவ்வளவு கடினமான காரியம் அல்ல. இஸ்லாத்திற்கும் முஸ்லிம் சமூகங்களுக்கும் எதிரான காழ்ப்புணர்வுகளும் தப்பெண்ணங்களும் அமெரிக்க, ஐரோப்பிய சமுதாயங்களின் மனத்தில் ஆழமாய் பதிந்துள்ளன. இஸ்லாமியர்களின் பிரதேசங்கள், அவர்களது மூலவளங்கள், முஸ்லிம் கலாசாரங்கள், சமூகங்கள் ஆகியவற்றின் மீது மேற்கு நாடுகளும் அவற்றின் நட்பு நாடுகளும் செலுத்தும் ஆதிக்கத்தை எதிர்த்துப் பல்வேறு பகுதிகளில் எதிர்ப்புப் போராட்டங்கள் வலுத்து வருவதால் முஸ்லிம்கள், இஸ்லாம் பற்றிய கோரமான சித்திரிப்புகளும், கேலிச்சித்திரங்களும் உருவாக்கப்படுகின்றன.

மற்றோர் புறம் தமக்கு ஆதாயம் என்றால் அமெரிக்காவும் ஐரோப்பாவும் மிகப் பிற்போக்குத்தனமான இஸ்லாமிய அரசாங்கங்களை ஆதரிக்கத் தவறுவதில்லை. ஈராக் - ஈரான் போரின்போது அமெரிக்கா இருநாடுகளுக்கும் மாறி மாறி ஆயுத விற்பனை செய்து வந்தது. வளைகுடாப்போரின் போது அமெரிக்காவின் கிறிஸ்தவ, யூதத் துருப்புகள் தனது மண்ணில் வந்து இறங்குவதற்கு இஸ்லாத்தின் பாதுகாவலனாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் சவூதி அரேபியா அனுமதி தந்தது. (இதை கிறிஸ்துவ - யூத - இஸ்லாமியத் தொடர்பு என்று கூறமுடியுமா?) ஆப்கானிஸ்தானிலுள்ள தோஸ்தம் - ரப்பானி - தலிபான் கொலைவெறிக் கும்பல்கள் அனைத்திற்கும் அமெரிக்கா உதவி செய்துள்ளது.

மற்றோர்புறம் 'இஸ்லாம்', 'முஸ்லிம் நலன்கள்' என்ற பதங்கள் இஸ்லாமிய நாடுகளால் அவ்வப்போது பயன்படுத்தப்பட்டபோதிலும் ஒரேபடித்தான இஸ்லாமிய நாகரீகம் என்பதோ, இஸ்லாமிய நாடுகளின் ஒற்றுமை என்பதோ ஏதும் இல்லை. ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் முஸ்லிம்களுக்குள்ளே தான் சண்டைகள்.

இந்த உண்மைகளை முற்றாகப் புறக்கணிக்கும் ஹன்டிங்டன் 'இஸ்லாமிய அச்சுறுத்தல்' என்று குறிப்பிடுவது அமெரிக்க, ஐரோப்பிய, இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கும், ஆதிக்கத்திற்கும் எதிரான போராட்டங்களை மட்டும் தான். "யூரேஷியாவில் நாகரீகங்களுக்கிடையில் உள்ள வரலாற்று ரீதியான மாபெரும் பிரிவினைக்கோடுகள் மீண்டும் தீப்பற்றி எரிகின்றன. குறிப்பாக ஆபிரிக்காவில் பிறைவடிவத்திலுள்ள இஸ்லாமிய நாடுகளின் முகாமிலிருந்து மத்திய ஆசியா வரை நடந்து வருவது இதுதான். ஒரு புறம் முஸ்லிகளுக்கும், மறுபுறம் பால்கன் நாடுகளிலுள்ள ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்துவ செர்பியர்கள், இஸ்ரேலிலுள்ள யூதர்கள், இந்தியாவிலுள்ள இந்துக்கள், பர்மாவிலுள்ள கத்தோலிக்கர்கள் ஆகியோருக்கும் இடையில் வன்முறை மூண்டுள்ளது" என்றெழுதும் ஹன்டிங்டன், தான் குறிப்பிடும் இடங்கள் எல்லாவற்றிலுமோ, அல்லது அவற்றில் மிகப்பெரும்பாலானவற்றிலோ பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள் தான் என்பதை சௌகரியமாக மூடிமறைத்து விடுகிறார்.

பிற ஏகாதிபத்தியக் கருத்தியலாளர்கள் போலவே ஹன்டிங்டனும் உண்மைகளையும், வரலாற்றையும் திரிப்பதில் சிறிதும் தயக்கம் காட்டுவதில்லை. 'நாகரீகங்களின் மோதல்' என்ற அவரது கட்டுரையின் தலைப்பு பெர்னாட் லூயிஸ் என்பவர் எழுதியுள்ள 'The Roots of Muslim Rage' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். முஸ்லிம்கள் பற்றியும் இஸ்லாம் பற்றியும் மிக இழிவான அவதூறுகளைச் செய்வதில் முன்னணிப் பாத்திரம் வகிப்பவர் பெர்னாட் லூயிஸ். லூயிஸ், ஹன்டிங்டன் வரிசையில் புதிய உறுப்பினராகச் சேர்ந்துள்ளவர் வி. எஸ். நைப்பால்.

<u>பின்குறிப்பு</u>

நவீன சீன சமுதாயத்தில் (1949க்குப் பிந்திய சமுதாயத்தில் கன்பூசியத்தின் தாக்கம் குறித்த அறிவார்ந்த விளக்கத்தை பல ஆண்டுகளுக்கு முன்பு ஜோசப் நீதாம் எழுதிய The Past in China's Present என்ற கட்டுரையில் கர்ணலாம். சிறிலங்காவுடன் தன் இறுதிக்காலம் வரை தொடர்பு கொண்டிருந்த ஜோசப் நீதாமின் கட்டுரையை அங்குள்ள வாசகர்கள் தேடிப் பிடித்துப் படிப்பது கடினமானதல்ல. சீனாவின் கலாசாரப் புரட்சியின்போது கன்பூசியம் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் ஜோசப் நீதாமுக்கு உடன்பாடானவையாக இருக்கவில்லை.

*Joseph Needham, man and his Struction: How Eastem perspective on western Civisation....*

■

| ஏற்றுமதி | 1988 - 1992 (மில்லியன் டாலர்களில்) |
|---|---|
| அமெரிக்கா | 54068 |
| ரஷ்யா | 45182 |
| பிரான்ஸ் | 9345 |
| ஜெர்மனி | 8140 |
| சீனா | 7658 |
| பிரிட்டன் | 7623 |
| செக்கோஸ்லோவாக்கியா | 3163 |
| நெதர்லான்ட் | 2045 |
| இத்தாலி | 1613 |
| ஸ்வீடன் | 1416 |
| பிரேசில் | 1028 |

(UNDP Developement Report 1994 Page 58)

| இறக்குமதி | 1988 - 92 (மில்லியன் டாலர்களில்) |
|---|---|
| இந்தியா | 12235 |
| ஜப்பான் | 9224 |
| சவூதி அரேபியா | 8690 |
| ஆப்கானிஸ்தான் | 7745 |
| கிரீஸ் | 6197 |
| துருக்கி | 6167 |
| ஈராக் | 4967 |

## யாழ். செய்திகள்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏ.வில்வராஜா(40) ஈ.பி.டி.பியினரின் தாக்குதலுக்குள்ளாகி யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
கண்டியைச் சேர்ந்த வில்வராஜா யாழ்ப்பாணத்தில் ஹோட்டல் ஒன்றில் சமையல்காரராகப் பணி புரிகிறார்.
ஊர்காவற்றுறையிலுள்ள தனது தம்பியின் மனைவியைப் பார்ப்பதற்காக அங்கு சென்ற போதே ஈ.பி.டி.பியினரால் அவர் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டுள்ளார். கூடவே அவரது அடையாள அட்டையும் ஈ.பி.டி.பியினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.
அடையாள அட்டையைப் பறிகொடுத்ததன் காரணமாக ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வர முடியாதிருந்ததால் காலில் பிளேட்டால் ஒரு காயத்தை ஏற்படுத்தி விட்டு பாம்பு கடித்ததெனக் கூறி ஊர்காவற்றுறை வைத்தியசாலை மூலமாக அவர் யாழ். வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்திருக்கிறார்.
யாழ்.வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய அவர் நடந்த சம்பவத்தைத் தெரிவித்திருக்கிறார்.

●

ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரான நிமால் என்பவர் நெடுந்தீவில் ஜனவரி 15ம் திகதியன்று தன்னைத் தானே சுட்டுக் கொன்றுள்ளார்.
அதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் நெடுந்தீவுப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரது வீட்டில் இடம் பெற்ற கொள்ளை தொடர்பாக நெடுந்தீவு ஈ.பி.டி.பியினர் அங்கு தேடுதல் வேட்டை ஒன்றை ஜனவரி 15ம் திகதி மேற்கொண்டனர்.
இத்தேடுதல் வேட்டையின் போது ஈ.பி.டி.பியிலிருந்து விலகி கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குழுவின் தலைவராகச் செயற்பட்டு வந்த நிமாலே தன்னைத் தானே சுட்டுக் கொன்றவராவார்.
மற்றைய இருவர் ஈ.பி.டி.பியினரிடமே சரணடைந்தனர். மற்றும் இருவர் அங்கிருந்த வணக்கத்திற்குரிய அடிகளார் மன்டேற் அவர்களிடம் சரணடைந்துள்ளனர்.

●

யாழ்ப்பாணத்தில், சாவகச்சேரியில் ஒருவரும் கொக்குவிலில் ஒருவருமாக இருவர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
முதலாவது மைல்கல், சாவகச்சேரியைச் சேர்ந்த சதாசிவம் துளசிதாசன்(18) என்ற கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி மாணவன் அவரது வீட்டில் வைத்து ஜனவரி 18ம் திகதியன்று படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.
சிவசுப்பிரமணியம் விஜயகுமார்(23) என்பவர் ஜனவரி 17ம் திகதியன்று கொக்குவில் கிழக்கு கொக்குவிலில் உள்ள அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவர் ஒரு சீவல் தொழிலாளியாவார்.
இருவரும் முறையே சாவகச்சேரி படைமுகாமிலும், கொக்குவில் படை முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நன்றி - நூலகத்திட்டம்



# கம்பன் கழகம் : வெக்கங்கெட்டோர் விருதுகள்!

முதலாளிகளின் கையில் மாட்டுப்பட்டு வெற்றிகரமான வியாபார ஸ்தாபனமாக இயங்கிக் கொண்டிருக்கும் கம்பன் கழகம் இரண்டாவது வருடமாக கொழும்பு கம்பன் கழகம் எனும் "பதாகை"யின் கீழ் கம்பன் களியாட்ட விழாவை நடாத்தியிருக்கின்றது. விழாவின் முக்கிய அம்சமாக "கௌரவிப்பும்" நடைபெற்றிருக்கிறது. முத்தையா முரளிதரனை ஏற்கெனவே மேடையில் ஏற்றி தாமும் சேர்ந்து நின்று மாலை போட்டும், மகுடம் சூட்டியும் படம் எடுத்து பத்திரிகைகள், தொலைக்காட்சி வாயிலாக சர்வதேச ரீதியில் 'கம்பனின் கன்னித் தமிழை' மணக்கச் செய்த கழகத்தினரின் பணி பாராட்டுக்குரியதே.

தமிழையும், தமிழ் கலாசாரத்தையும் பண்பாட்டையும் பேணிவளர்க்கும் பற்றுறுதி கொண்ட கம்பன் கழகத்தினர் இம்முறை கௌரவிப்புக்காக இரு தமிழ் ஆவலர்களையும், தெரிவு செய்துள்ளனர். இம்முக்கியமான இருவர் வீரகேசரி நிர்வாக ஆசிரியர் வென்சஸ்லோஸ், மற்றும் சண்டே ரைம்ஸ் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் ஆகியோராவர்.

முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடும் வல்லமையுள்ள சில கழகத் தலைகள் கம்பன் கழகம் இவர்களைக் கௌரவித்ததற்கான நியாயங்களையும், காரணங்களையும் கூறி 'பெப்பே' காட்டிக் கொண்டிருக் கின்றன.

தேசியப் பத்திரிகை ஒன்றில் சில பத்திகளை எழுதிவந்த கம்பன் கழக அமைப்பாளர் அந்தப் பத்திரிகை ஆசிரிய பீடத்துடன் ஏற்பட்ட சில முரண்பாடுகள் காரணமாக அப்பத்திகளை எழுதுவதை நிறுத்திவிட்டார். அவருடைய ஹிந்துத்துவக் கொள்கைக்கு, (முஸ்லிம் எதிர்ப்புக்கு) அவ் ஆசிரியபீடம் இடம் கொடுக்காததே காரணம் என்று சொல்லப்படுகிறது. இப்போது அவரது பிரச்சாரத்திற்கான வாய்ப்பான பத்திரிகைகளைப் பிடிப்பது அவசியமாக இருப்பதால், வென்சஸ்லோஸ்ஐக் கௌரவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பு கம்பன் கழகம் என்ற பெயரின் கீழ் செய்வதையெல்லாம் செய்துவிட்டு தங்கள் பொறுப்பில் இருந்து நழுவிக் கொள்ள விரும்பும் வாரிதிகள், தக்கதருணத்தில் தனது நிறுவனத்தில் கடமையாற்றிய பத்திரிகையாளர்களைக் கைகழுவி விட்டுப் பொறுப்பில் இருந்து நழுவிக் கொண்ட வென்சஸ்லோஸ் ஐ கௌரவிப்பது சாலப் பொருத்தமானதே. இவ்வாறு இவர்களைக் கௌரவித்து ஊக்கமளித்தால் மேலும் பல பத்திரிகை நிறுவன அதிபர்களும் இவர்களைப் போலவே செயற்பட்டு தமிழ்ப் பத்திரிகை உலகை வானளாவ வளரச் செய்வார்கள் அல்லவா?

கம்பராமாயணத்தின் யுத்தகாண்டத்தை அடுத்த சிறுவேசன் றிப்போட்டில் இக்பால் அத்தாஸ் எழுதக்கூடும் என்ற நப்பாசையில் அவரையும் கௌரவிக்கிறார்களோ தெரியவில்லை.

வட- கிழக்கில் நடைபெறும் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்றும்,அங்கு போராடுபவர்கள் அழித்தொழிக்கப்பட வேண்டிய எதிரிகளே என்றும், இந்த அரசாங்கங்கள் யுத்தத்தைச் சரியாக முன்னெடுக்கவில்லை என்றும் 'தார்மீகக் கோபங் கொண்டு' எழுதிக் கொண்டிருக்கும் தமிழ் அபிமானியான இக்பால் அத்தாசை கௌரவிக்க வேண்டிது தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் கடமை அல்லவா?

இக்பால் அத்தாசை கௌரவிப்பதற்கான காரணங்களை பலர் வினவியபோது கம்பன் கழகத் தலைகளால் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டதாம்.

1. அவர் துணிகரமான செய்திகளை வெளியிட்டு வருகின்றமை.

ஸ்ரீகஜன், மாணிக்கவாசர் தொடர்பாக இக்பால் அத்தாஸ் வெளியிட்ட துணிகரச் செய்திகள் நாம் அறிந்ததே.

2. இக்பால் அத்தாஸ் அரசாங்கத்தினால் பல பாதிப்புகளுக்கும், நெருக்குதல்களுக்கும் உட்படும் ஒரு பத்திரிகையாளர்.

மாணிக்கவாசகரும், ஸ்ரீகஜனும் அரசாங்கத்தினால் நெருக்குதல்களுக்கு உட்படவில்லை. மாறாக, மாலை சூட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள். எனவே அவர்கள் இந்த விருதுகளுக்குப் பொருத்தமற்றவர்கள்.

அரசாங்கத்தின் காடைக் கோஷ்டியினால் சண்டே லீடர் லசந்த விக்கிரமதுங்க தாக்கப்படவில்லையென்பதாலும் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் சிங்க ரணதுங்க வழக்கு நடவடிக்கைகள் மூலம் அரசாங்கத்தினால், நெருக்குதல்களுக்கு உட்படுத்தப்படாததாலும் அவர்களும் இந்த விருதுகளுக்குப் பொருத்தமற்றவர்கள்.

3. இக்பால் அத்தாஸ் முன்னர் தலைவருடன் நின்று புகைப்படம் எடுத்திருக்கிறார்.

எப்போது தொடக்கம் கம்பன் கழகத்தில் விருதுபெறுபவர்கள் தலைவர் உடன் நின்று புகைப்படம் எடுப்பதும், ஒரு தகைமையாகக் கொள்ளப்பட்டிருக்கிறதோ தெரியவில்லை. வருங்காலத்தில் ஏ.சி.எஸ். ஹமீட், ஆயர் கெனத் பர்ணாந்து போன்ற பல்வேறு "தலைவருடன்" புகைப்படம் எடுத்த பெரியோர்களையும் கௌரவிக்கலாம்.

உமா மகேஸ்வரன், பத்மநாபா, ஸ்ரீசபாரத்தினம் போன்றோரும் தலைவருடன் நின்று புகைப்படம் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் காலம் சென்றாலும் அவர்களைக் கௌரவித்து வருங்காலத்தில் கழகத்தால் விருது வழங்கலாம்.

இக்பால் அத்தாஸ் தாக்கப்பட்டபோது தமிழ்ப் பத்திரிகையாளர்களும், அதற்கெதிராக குரல் கொடுத்திருந்தனர். ஆனால், தமிழ்ப் பத்திரிகையாளர்கள் காரணமின்றிக் கைது செய்யப்பட்டபோது அவர்களுக்குப் புலி முத்திரை குத்திய இக்பால் அத்தாஸ் கௌரவிக்கப்படுவதும், தமிழ்ப் பத்திரிகையாளர்களை பத்திரிகையின் வளர்ச்சிக்குப் பாவித்துவிட்டு அவர்களுக்கு நெருக்கடி ஏற்படும்போது பொறுப்பில் இருந்து கழன்று கொண்ட வென்சஸ்லோஸ் கௌரவிக்கப்படுவதும் வரவேற்கத்தக்கதே. அதுவும் "கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்க்கும்" கம்பன் கழகத்தால் இவர்கள் கௌரவிக்கப்படுவது பொருத்தமான விடயமாகும்.

கம்பன் கழக அமைப்பாளரிடம் பல்கலைக்கழக பேராசிரியர்களை அவர் கண்டிப்பது தொடர்பாகவும், கடிதம் எழுதுவது தொடர்பாகவும், அதனால் ஏதும் பயன் ஏற்படுமா என்று ஒருவர் வினவியபோது அவர் கூறிய பதில் "கேட்பது கேட்காதது அவர்கள் விருப்பம். இவர்களது தவறுகளை சுட்டிக் காட்டாமல் விட்டால் தாங்கள் செய்வது எல்லாம் சரி என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். எனவே இவற்றை சுட்டிக் காட்டுவது சமுதாய அக்கறையுடைய ஒவ்வொருவரது கடமையும் ஆகும்." என்பதாகும்.

இது அவருக்கும் விளங்கினால் சரி.

-பழம்பாமரன

---

தமிழ்த் தேசிய இனத்தின்உரிமைப் போருக்கு உறுதுணையாயிருக்கும் இக்பால் அத்தாஸ் வாழி! அவர்தம்மை கௌரவிக்கும் கம்பன் கழகமெ நீ வாழி! வாழி!

1. விடுதலைப் புலிகளை "எதிரிகளை" என்றும்,

தமிழர்தம் போராட்டத்தை "பயங்கரவாதம்" என்றும்

வெல்லப்படமுடியாத யுத்தத்தை வெல்லக்கூடிய யுத்தம் என்றும், எழுதிவருவதனாலும்

2. தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் "யுத்த நிலவரத்தை" ஆங்கில மொழி மூலமாக எழுதும் சிங்கள தேசிய உணர்வு மிக்க தமிழ் பேசும் பத்திரிகையாளர் என்பதனாலும்

3. மாணிக்கவாசம், ஸ்ரீகஜன் போன்ற தேசவிரோத பத்திரிகையாளர்கள் எவ்வாறு புலிப்பயங்கரவாதிகளுடன் இணைந்து சதித்திட்டங்களைத் தீட்டினார்கள் என்று விவாரியாக "உண்மை நிலவரத்தை" உலகோர் அறிய எழுதிக் கிழித்ததினாலும்

4. கம்பன் கழகத்தினரின் கம்ம கோட்டத்தை புலிப்பயங்கரவாதத் தலைவர் குடியிருக்கும் வீடென அரச பிரச்சார இயந்திரங்கள் கூக்கிரலிடும் போது வாய்மூடி மௌனித்து ஒரு பத்திரிகையாளனுக்குரிய கடமையை செவ்வனே நிறைவேற்றியதாலும்

5. அரசாங்கத்தினால் பல்வேறு நெருக்கடிகளுக்கும் உட்படும் மாணிக்கவாசம், ஸ்ரீகஜன் லசந்த விக்கிரமதுங்க, சிங்க ரட்ணதுங்க, விக்டர் ஐவன் போன்ற முதுகெலும்புள்ள வேறு பத்திரிகையாளர்கள் யாருமே இல்லையென்பதாலும்

6. ஈராக்கிய மக்கள் மீது அடக்குமுறையை பிரயோகித்து உலகளாவிய ரீதியில் முஸ்லிம் இனத்தை அழித்தொழிக்க கங்கணம்கட்டி நிற்கும் அல்லாவின் எதிரிகளான அமெரிக்க ஏகாதிபத்திய அரசின் உளவுப்பிரிவுக்கும், பெண்டகனுக்கும் அடிக்கடி விஜயம் செய்து விரிவுரைகள் விளக்கவுரைகள் என்பவற்றை வழங்கி அல்லாவின் எதிரிகளை அவர்களுடைய இலக்கை அடையச் செய்வதில் உறுதுணையாயிருப்பதாலும்

தன்மானமிகு தமிழ் அமைப்பாகவும் பண முதலைகளின் கூடாரமாகவுமுள்ள தமிழ்த் தேசிய உணர்வு மிக்க கம்பன் கழகத்தினருடன் இணைந்து தமிழ்த் தேசிய இனம் முஸ்லிம் தேசிய இனம் ஆகியவற்றைச் சேர்ந்த இன அபிமானமும், முதுகெலும்பும் உள்ள நாமும் திருமிகு இக்பால் அத்தாஸ் அவர்களை

கௌரவிப்போம்


காலில் விழுவோம்

ஆசிபெறுவோம்.

கொழும்பில் கம்பன் விழாவிலன்று வினியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம்


---

*ஒக்டோவியோ பாஸ்* (1914-1998) மெக்ஸிகோ நகரில் 1914ல் பிறந்தார். அங்குள்ள தேசிய பல்கலைக் கழகத்தில் பயின்ற இவர், தனது பதினேழாவது வயதில் படைப்பிலக்கியத்துறையில் ஈடுபடத் தொடங்கினார். சர்வதேச ரீதியாக ஒரு கவிஞராகவும், விமர்சகராகவும், சமூகத் தத்துவஞானியாகவும் மதிக்கப்படுகிற இவர் , 1990 இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றுக்கொண்டார். 1998 ஏப்ரல்19ல் மரணமடைந்த ஒக்டோவியோ பாஸினுடைய THE GREEN WAVE ( 1948 ) , SUN STONE ( 1963 ) போன்றவை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. இவருடைய THE STREET என்ற கவிதையை கீழே தமிழாக்கித் தந்திருப்பவர் *ஸிராஜ் மஷ்ஹூர்*



OCTAVIO PAZ

( 1914 - 1998 )



## வீதி

ஒக்டோவியோ பாஸ்

நீண்டதும் அமைதியுமானதொரு வீதி.
காரிருளில் நடக்கிறேன் நான்
இடறுகிறேன் வீழவும் செய்கிறேன்
பின் எழுவது கூடத்தான்.
குருட்டு வெளிச்சத்தில் நடக்கிறேன் நான்
அமைதியான கற்களிலும் காய்ந்த இலைகளிலும்
எனது கால்கள் தடம் பதிக்கின்றன.
கற்களில், இலைகளில்
எனக்குப் பின்னே யாரோ ஒருவன்
கூடவே காலடி எடுத்து வைக்கிறான்.
நான் வேகத்தைக் குறைத்தாலும் அவனும் குறைக்கிறான்
நான் ஓடினால் அவனும் ஓடுகிறான்
திரும்புகிறேன் நான்: யாருமேயில்லை
ஒவ்வொன்றுமே இருளாயும் கதவுகளின்றியுமே இருக்கிறது.
திரும்பித் திரும்பிப் பார்க்கிறேன்
சதாவும் வீதிக்கே இட்டுச் செல்லும்
இந்தத் திருப்பங்களில்
யாருமே எனக்காகக் காத்திருக்கவில்லை
யாரும் என்னைத் தொடரவுமில்லை.
நான் தூரச் செல்கிற மனிதன்
இடறி வீழ்கிறான்
பின் எழுந்து
என்னைப் பார்க்கும் போதெல்லாம் சொல்கிறான்:
யாருமே இல்லை.

□

நன்றி - நூலகத்திட்டம்



# சிதைவுகள் : சில மேலதிக குறிப்புகள்




*சின்னுவ அச்சிபே* பற்றிய அறிமுகக் கட்டுரையொன்றினை இருபதாண்டுகட்டு முன் (ஏப்.78' மல்லிகை) நான் எழுதியபோது, அதன் முத்தாய்ப்பாக இப்படிக் குறிப்பிட்டிருந்தேன்:

'அச்சிபேயின் நாவல்களைப் படித்த போது - முக்கியமாக 'திங்ஸ்ஃபோல் எபாட்' - ஒரு ஆசையே மனதில் மேவிநின்றது: தமிழில் பெயர்க்கலாமா என்று.'

பல காரணங்களால் அது சாத்தியப்படாமலே போயிற்று. இப்போது என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய நண்பர் என். கே. மகாலிங்கம் அதனைச் சாதித்திருக்கிறார்.

'சிதைவுகள்' இன்னமும் படிக்கக் கிடைக்கவில்லையெனினும் அது பற்றிய சேதி மிக்க மகிழ்ச்சி தருவதாயிருந்தது. ஊடே, ஒரு சின்னஞ்சிறு நெருடலும் -

மொழிபெயர்ப்பு நூலின் பெயர், மூல நூலின் பெயர் கொண்டுள்ள கருத்தாழத்தையும், கவித்துவத்தையும் கொண்டிருக்கவில்லையே என்றிருந்தது. அதனை, மு. பொன்னம்பலம் அவர்களும் குறிப்பிட்டுள்ளமை முக்கியமாகப் படுகிறது. (சரிநிகர் - 161. 'சிதைவுகள்' விமர்சனம்).

உண்மையில், இந்நாவல் Yeatsன் 'The Second Coming' என்ற கவிதையின் 'Things Fall Apart; The Centre Cannot Hold' என்ற வரிகளிலிருந்தே தன் தொனியையும், 'Things Fall Apart' என்ற தலைப்பையும் பெற்றதாகக் கூறுவர்.

ஒரு முகமாய்ச் சிந்தித்து, ஒன்றையே பேசி, பொதுப் பிரக்ஞையைப் பகிர்ந்து, ஒன்றாகவே செயற்பட்ட ஒரு இனக் குழுவில், வெள்ளையர் வருகைக்குப் பின் இந்த ஒற்றுமை, கட்டுக்கோப்பு, கட்டுமானம் எல்லாம் உடைந்து வீழ்ந்ததையே நாவலும், மூலத்தின் தலைப்பும் கூறுகின்றன. இப்படிப் பார்க்கையில், 'சிதைவுகள்' என்ற பெயர் வரட்சி கொண்டதாகவே தெரிகிறது.

இனி இம்மொழிபெயர்ப்பில் 'துருத்திக் கொண்டு' நிற்பதாக (நெருடும்?) மு.பொ. குறிப்பிடும் சிலவற்றைப் பற்றி-

தென்னையோ, தேங்காயோ மூல நாவலில் குறிப்பிடப்படவில்லை. அங்கு கூறப்படுவது, தென்னை இனத்தை (Palm)ச் சேர்ந்த ஒரு தாவரம் பற்றியே. பனை, தென்னை போன்ற குறிப்பான பெயரெதுவும் அதற்கிருப்ப தாக - நாவல் மூலம் - தெரியவில்லை. நாவல் நெடுகிலும் - ஏனைய அநேக ஆபிரிக்க நாவல்களிலுங் கூட - அது Palm என்று தான் குறிப்பிடவும் படுகிறது. இதைக்கருதியே, மொழி பெயர்ப்பாளர் 'தெங்கு' என அதைக் குறிப்பிட முனைந்திருக்க வேண்டும். இப்படியே, தேங்காய் எண்ணெய், தென்னங்கள் - ஆகியவையும் பொருந்தா. அவையும் முறையே, Palm Oil, Palm Wine என்றே குறிப்பிடப்படுவன.

(ஆபிரிக்க நாவல்களில், பொதுவாக, Toddy என்ற பதமும் இடம்பெறுவதில்லை. பதிலாக Palm Wine என்பது தான் வழக்காய்த் தெரிகிறது. Fantasy Fiction உடன் சேர்த்துப் பேசப்படுபவரும், இன்னொரு ஆபிரிக்க எழுத்தாளருமான Amos Tutuolaவின் படைப்பொன்று கூட, 'The Palm Wine Drinkard' என்ற பெயரிலே உள்ளது.)

இவற்றைக் கருதி, வெறுமனே எண்ணெய் என்றோ. கள் என்றோ, அல்லது அந்த Palmமிற்கு குறிப்பான பெயரொன்றைச் சூட்டி, (தெற்காசியாவின் 'கூந்தல் பனை' போல) குறிப்பிட்டிருந்தாலோ, சிறப்பாயிருந்திருக்குமென்று படுகிறது.

தெங்கு பருப்பு என்று குறிப்பிடப்படுவதும் தேங்காயன்று அது Kola Nut என்பது. (உபசாரங்கள், சடங்குகளைப் பொறுத்தளவில் நமது வெற்றிலை போல அது அவர்களாற் பயன்படுத்தப்படுவதாக அறிய முடிகிறது.) எனினும், Kola Nut என்பதை மொழிபெயர்ப்பாசிரியர் ஏன் 'தெங்கு, பருப்பு' எனக் குறித்தாரென்பதுந் தெரியவில்லை. Kola Nut, குறித்த Palmன் காயாயிருக்க முடியாது. அதனைக் 'கோலாக்காய்' என்றோ, 'கோலாப் பருப்பு' என்றோ (ஒரு சிறு அடிக்குறிப்புடன்) அழைத்திருக்கலாம்.

'மனிதத் தலையில் கள்ளருந்தும்' வசனம், மூலத்தில் Human Head என்றே தானிருந்திருப்பினும், 'மண்டை ஓடு' என்று தமிழிற் தரப்பட்டிருப்பின் நன்றாயிருந்திருக்கும். (இன்னொரு விதத்தில், இலக்கியம் என்று பார்க்கையில், 'மனிதத்தலை' என்ற பிரயோகங் கூட அவ்வளவு ஆட்சேப கரமானதாயில்லை.)

அடுத்த ஊரிலிருந்து தண்டமாகப் பெற்றுவந்த சிறுவனைக் கொலை செய்ய ஒக்கொங்வோ உடன் படுவதும், அவன் கண் முன்னாலேயே சிறுவன் கொலை செய்யப்படுவது மட்டுமல்ல: அச்சிறுவனின் கொலையில் - தன் தவறான முரட்டு EGOவைத் திருப்தி செய்யவேண்டி - ஒக்கொங்வே தானும் பங்கு பெறுகிறான். இது, விமர்சனத்தில் கவனிக்கப்பட்டதாய்த் தெரியவில்லை.

இங்கேயிருந்து நாம் எவ்வளவு தான் விரும்பினாலும், தொடர்புகள், வசதி, நிதி, படைப்புரிமைப் பிரச்சினைகள் போன்றவற்றால் எமக்குச் சாத்தியப்படவியலாத இப்படியான மொழிபெயர்ப்பு முயற்சிகளிலும் புலம் பெயர்ந்தவர்கள் ஈடுபடுவது மகிழ்வு தருவதும் வரவேற்க வேண்டியதுமாகும். என்.கே.மகாலிங்கம் அவர்களின் முயற்சியைப் பாராட்டும் அதேவேளை:

கனடாவில் 'சிதைவுகள்' வெளியீட்டின் ஏற்புரையின் போது அவர் குறிப்பிட்டதாக (சரிநிகர் - 155 'இலக்கியத்திற்கான இரவு') அறிய நேர்ந்தவற்றையொட்டி இதனைக் கூறலாம்.

சொயின்காவை மொழிபெயர்ப்பது (படிப்பதுவும்) சிரமம் என்பது சரியே. ஆனாலும் ங்குகி (Ngugi)யின் 'Petals of Blood' மட்டுமல்ல , அவரது ஏனைய நாவல்களான 'The River Between', மற்றும் முக்கியமாக, 'Weep not, Child', 'A Grain of Wheat' போன்றவையும், அச்சிபேயின் 'A Man of the People'ம் கூட மொழிபெயர்க்க ஏற்றவைதாம்.

மகாலிங்கம் அவர்கட்கு இதற்கான தகுதிகளும், வாய்ப்புகளும் உள. 'சிதைவுகள்'க்கு 'தமிழ்கூறு நல்லுலகம்' அளிக்கவிருக்கும் வரவேற்பிலேயே அவரது உற்சாகம் தங்கியிருக்கும்.

**- சாந்தன்**

# சின்னுவா ஆச்சிபே — ஆபிரிக்க எழுத்தாளர்

**சின்னுவ அச்சிபே பற்றிய இக்கட்டுரை1978 இல் சாந்தனால் எழுதப்பட்டது. 1978 ஏப்ரல் மல்லிகையில் வெளியாயிற்று. அச்சிபேயின் *Things Fall Apart* தமிழில் சிதைவுகள் என என்.கே.-மகாலிங்கத்தால் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளிவந்திருக்கும் சூழ்நிலையில் அச்சிபே. அவரது நாவல்கள். ஆபிரிக்க இலக்கியம் என்பவை குறித்த மேலதிக புரிதலுக்காக அதனை இங்கு மீள்பிரசுரம் செய்கிறோம்.**

**ஆ-ர்.**

*'அட்வட்டைசிங்' புத்தகங்களை நூலகப் பட்டியலில் தேடியபோது, 'அச்சுபே' என்ற பெயர் சந்தித்தது.*
*'அச்சுபே - சின்னுவ'. முதலிலேயே கொஞ்சங் கேள்விப்பட்டிருந்த பெயர். 'லோட்ட'ஸில் அவருடைய ஒரு சிறுகதையையும் அவர் பற்றிய கட்டுரையையும் படிக்க முடிந்தி ருந்தது. 1975ல் 'தாமரை விருது' பெற்ற எழுத்தாளர். ஆங்கிலத்தில் எழுதுகிற ஆபிரிக்கர்.*

அச்சுபேயுடைய நாவல்களில் மூன்று - 'திங்ஸ் ஃபோல் எபாட்' (1958), 'நோ லோங்கர் அற் ஈஸ்' (1960), 'அரோ ஓஃப்கோட்' (1964) - அங்கிருந்தன. அவற்றைவிட, 'மோணிங் யெற் ஒன் க்ரியேஷன் டே' (1975) என்ற அவருடைய கட்டுரைத் தொகுதியும், அவருடைய நாவல்களைப் பற்றி ஜி.டி..கில்லம் என்பவர் எழுதிய 'நொவல்ஸ் ஓஃப் சின்னுவ அச்சுபே' என்ற நூலும் கிடைத்தன.

இவற்றைப் படித்தபோது அச்சுபேயுடைய மற்ற நூல்களைப்பற்றியும் அறிய முடிந்தது.

'எ மான் ஓஃப் த பீப்பிள்' (1966) நாவல், 'த ஸக்ரிஃபிஷியல் எக்' (1962) கதைத் தொகுதி, 'கேள்ஸ் அற் வார் அன்ட் அதர் ஸ்ரோரீஸ்' (1972) கதைத்தொகுதி, பிவார் ஸோல் ப்றதர் அன்ட் அதர் பொயம்ஸ் (1971) - கவிதைகள்.

அச்சுபே, ஆபிரிக்காவின் மிகவும் அறியப்பட்ட நாவலாசிரியர் ஆபிரிக்க நாவலின் முன்னோடி என்று குறிப்பிடப்படுகிறார். ஆபிரிக்காவின் கதையை - ஐரோப்பாவைச் சந்தித்த பிறகு அது எதிர்கொண்ட சரித்திரத்தை - ஆபிரிக்க கண்களாற் கண்டு எழுதியவர் அச்சுபே. ஆபிரிக்கத்துவத்திற் கூடாக, மானுடத்தைத் தரிசிக்க வைத்ததில் வெற்றிபெற்றவர்.

கிழக்கு நைஜீரியாவின் இக்போ (ஆங்கிலத்தில் இபோ) இனத்தைச் சேர்ந்த அச்சுபேயின் நாவல்கள் - தமக்கு மிகவும் பரிச்சயப்பட்ட - தமது சமூகத்தையே நிலைக்களனாகக் கொண்டெழுந்தவை. தமக்கு முன்னால் விரிந்து கிடந்த கன்னிக் களத்தை அந்தக் கலைஞன் சரியானபடி பயன்படுத்தினார்.

வெளித்தொடர்பில்லாமல் தனியுலகில் வாழ்ந்து வந்த இபோக்கள், சொந்த நாகரீகம் இருந்தாலும் மூட நம்பிக்கைகளால் பிணிக்கப்பட்ட வாழ்வு: இவர்களிடையே வருகிற வெள்ளையர்கள் கொண்டு வருகிற புதிய விஷயங்கள்: இந்தச் சந்திப்பால் நடுவில் நசுக்குண்டு கொள்கிற சமூகம்: அது எதிர்நோக்குகிற போராட்டங்களும் அதன் பயனான மாற்றங்களும் - இவை 'திங்ஸ் ஃ போல் எபாட்'டிலும், 'அரோ ஓஃப் கோட்'டிலும் சித்திரிக்கப்படுகின்றன.

அச்சுபேயின் நாவல்களைச் சுருக்கிச் சொல்வது எளிதான விஷயமல்ல.

'திங்ஸ் ஃ போல் எபாட்'டின் நாயகன் ஒக்கோங்வோ. உழைப்பாளி' வீரன். சமூகத்தால் மதிக்கப்படுபவன். பூமித் தேவதைக்கெதிராக அவன் தெரியாத் தனமாகச் செய்த பிழைக்குத் தண்டனையாக ஊரை விட்டுப் போக நேர்கிறது. திரும்பி வருகிறபோது, வெள்ளையர்களின் மதமும், அதிகாரமும்.வேரூன்ற முயல்வதைப் புரிந்து கொண்டு, அதற்கெதிராகப் போராட தன் இனத்தாரைத் தூண்டுகிறான். அதில் தோல்வியுறுகிற ஒக்கோங்வோ தன்னை மாய்த்துக் கொள்கிறான்.

தகர்வு - அந்தப் பழைய அமைப்பின், வாழ்வு முறையின் தகர்வைச் சொல்லும் இந்நாவல் இபோ இனத்தை வைத்து எழுதப்பட்ட முதல் நாவலாகவும் அமைகிறது.

அந்த ஒக்கோங்வோவின் பேரன் - ஒபி ஒக்கோங்வோ- அடுத்த நாவலின் - 'நோ லோங்கர் அற் ஈஸ்' - கதாநாயகன், பாட்டன் தடுக்க முயன்று தோற்ற அந்த மாற்றங்களின் தாக்கங்களுக்குட்பட்ட ஒரு சமுதாயத்தின் அங்கம். தன் சமூகத்திலேயே முதல் ஆளாக லண்டனுக்குப் போய்ப் படித்துவிட்டு வருகிற வாய்ப்புப் பெற்றவன். சுதந்திரம் பெறவிருந்த - புதிய - நைஜீரியாவின் அரசாங்க சேவையில் 'ஐரோப்பியப் பதவி' கிடைக்கிறது. லஞ்சமும் ஊழலும் பெருகிக் கிடப்பது கண்டு அவற்றை எதிர்க்கும் தீவிரத்துடன், அவற்றை அழிக்கும் திடத்துடன் வருகிற ஒபி, தானே லஞ்சம் வாங்கும் நிர்ப்பந்தத்துக்குள்ளாகி அகப்படுகிறான்.

இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு காலத்தை கூடுதலாக முதல் நாவலுக்கு அண்மியதை - காலனித்துவம் நைஜீரியாவில் வேரூன்ற ஆரம்பித்துவிட்ட காலத்தைக் கொண்டெழுந்தது அச்சுபேயின் மூன்றாவது நாவலான 'அரோ ஓஃப்கோட்'. சமூகத்தின் மதத் தலைவனான பூசாரி - வெள்ளையரின் ஆற்றலையும், சக்தியையும் கண்டு வியந்து, அதை அறிவதற்கும், வெள்ளையருக்கிடையில் தன்னாளாக ஒருவன் இருக்கவும் வேண்டி, தனது மகனை அந்தப் புதிய சமயத்தைப்-படிக்கும்படி அனுப்புகிற பூசாரி-

சுதேசிகளைப் பிரித்தானிய சாம்ராஜ்ய கட்டுக் கோப்புக்குள் முழுமையாக அமைத்துவிட முயற்சிக்கிற அதிகாரி-

பூசாரியின் பொறாமைக்கார எதிரிகள்

இந்த மூன்று முனைகளையும் அறிகிறபோது, நமக்கு வழமையாகத் தெரிகிற முக்கோணக் கதையல்ல இது.



இதன் நாலாவது முனை -பூசாரிக்குள்ளேயே இருக்கிற ஒரு அரிப்பு - தான் எவ்வளவு சக்திவான் என்பதை அறிகிற அரிப்பு, அல்லது அதை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் - கதைத் தடத்தை வழமையான போக்கிலிருந்து மாற்றுகிறது.

அநேகமாக முதல் மூன்று நாவல்களுமே மாற்றங்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாத ஆபிரிக்கர்களின் துன்பியல் கதைகளைப் பேசுகின்றன. இது அந்தப் பாத்திரங்களின் தனிப்பட்ட பலவீனம் என்பதிலும், சரித்திரப் போக்கின் நிர்ப்பந்தத்தில் அகப்பட்ட - அதனைத் தடுக்கச் சக்தியற்றுப் போன - மனிதர்களின் கதி என்பதே சரி.

மூன்றாவது நாவலின் பிரசுரத்திற்குப் பிறகு, இறந்த காலத்திலிருந்து விலகி, சமகாலப்-பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பவராக அச்சுபே தம்மை ஆக்கிக்கொண்டார். இந்நிலை மாற்றத்தின் பிறகு எழுதப்பட்டதே, 'எ மான் ஓஃப் த பீப்பிள்' என்ற நாலாவது நாவலாகும். சுதந்திர நைஜீரியாவின் ஊழல்களும், குழறுபடிகளும் நிரம்பிய அரசியல் நிலையை எடுத்துக் காட்டுவது இது. கதையின் முடிவில் ஏற்படுவதாக அவர் தீர்க்க தரிசனமாகக் குறிப்பிட்ட இராணுவப் புரட்சி பின்னர் உண்மையிலேயே நடந்தேறிய தென்பதால், அந்நாவல் குறிப்பிடத்தக்க கவனத்தைத் தன்பால் ஈர்த்தது. என்றாலும், அச்சுபேயின் முதல் நாவலாகிய 'திங்ஸ் ஃ போல் எபாட்'டிலேயே அவரது கனம் அறியப்பட்டு விட்டது.

இந்த நாவல்கள் ஒவ்வொன்றும் தத்தம் அளவில் முழுமையடைந்திருந்த போதும், ஒரு சேரப் பார்க்கையில் அவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவையாயும், பரஸ்பரம் ஒன்றையொன்று விளக்குபவையாயும் உள்ளன. பரம்பரை பரம்பரையான குழுவாழ்வு தகர்க்கப்படுவதிலிருந்து ஒரு நிச்சயமற்ற நிலையில் வந்து நிற்கிற சமுதாயத்தின் சரித்திரம் மொத்தமாகச் சொல்லப்படுகிறது. எனினும், இவற்றிற்கடியில், மனிதனின் ஆத்மாவும், வெற்றி பற்றிய நம்பிக்கையும் அழியாமல் நிற்கின்றன.

அச்சுபேயின் நாவல்கள் பொதுவாக இளம் ஆபிரிக்க எழுத்தாளர்களிடத்து - குறிப்பாக நைஜீரிய இளம் எழுத்தாளர்களிடத்து - ஆழமாயும் பலமாயும் பாதிப்பேற்படுத்தியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கதைகளின் கனத்தால் மட்டுமன்றி, தம் விதிகளுடன் போராடுகிற உயிர்த் துடிப்பு வாய்ந்த பாத்திரப்படைப்பாலும் அவர் →

நன்றி - நூலகத்திட்டம்



நாவல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இபோக்களின் வாழ்வு, சடங்குகள், கொண்டாட்டங்கள், பழக்க வழக்கங்கள் பண்பாடு நம்பிக்கைகள், சமூக அமைப்பு, பழமொழிகளும், உப கதைகளும் நிறைந்த பாஷை - எல்லா வற்றையும் அச்சுபே தரிசிக்க வைக்கிறார். 'காப்பிரி'களைப் பற்றிய கணிப்பீடு எப்படி மாறிவிடுகிறது!

வெள்ளையரின் வருகைக்கு முன்னால், ஆபிரிக்கா ஒரு கலாசார சூனியப் பிரதேசமாக இருந்தது என்ற கூற்றை அவர் வன்மையாக மறுக்கிறார். ஆபிரிக்காவுக்கு இருந்த சரித்திரத்தையும், பழமையையும் அவர் வலியுறுத்துகிறார்.

'ஐரோப்பியரிடமிருந்து தான் ஆபிரிக்கர் கலாசாரம் என்ற ஒன்றைக் கேள்விப்பட்டார்கள் என்றில்லை. அவர்களுக்கென்று, ஒரு அழகும், ஆழமும் பெறுமதியும் மிக்க வாழ்க்கைத் தத்துவம், இலக்கியம் எல்லாவற்றிற்கும் மேலாகக் கௌரவம் என்று ஒன்று - எல்லாம் இருந்தன. இந்தக் கௌரவம் தான் பெரும்பாலான ஆபிரிக்கர்களால் காலனித்துவ ஆட்சியின் போது இழக்கப்பட்டதும் இனி மீட்கப்பட வேண்டியதுமாகும்."

முதன் முதலில் தங்கள் இடத்திற்கு வந்து சேர்கின்ற அதிசயமான வெள்ளை மனிதனைக்கொன்றுவிட்டு, அவனது இரும்புக்குதிரை (சைக்கிள்) ஓடிவிடாமல் அதை மரத்தோடு கட்டி வைக்கின்ற மக்கள்.

இடக்கையனான வெள்ளை மனிதனைச் சந்திக்க நேர்கின்ற பூசாரி அவன் இடக்கையால் எழுத முடிகிறதைப் பார்த்து வியந்து அதற்கும் வெள்ளையரின் சக்திக்கும் தொடர்பிருப்பதாகத் தீர்மானிக்கிற அறியாமை.

அதேநேரம் -

வெள்ளை அதிகாரியால் அனுப்பப்பட்ட சேவகர்கள் பூசாரி வீட்டைத்தேடி அலையும் போது, பேயர்களாக நடித்து சேவகர்களைப் பேய்க்காட்டுகிற இனத்தவர்களின் அந்த நடிப்பும், புத்திக் கூர்மையும்.

('இனத்தவனைக் காட்டிக்கொடுப்பது எங்கள் வழக்கமில்லை')

வாய்க்கு வாய் பழமொழிகளையும், உப கதைகளையும், மரபுச் சொற்றொடர்களையும் வீசிப் பேசுகிற வாசாலகம் வாய்ந்த மக்கள், ('வாக்குவன்மை வாய்ந்தவர்கள் சமூகத்தில் கௌரவம் பெற்றதோடு தலைவர்களாகவும் கருதப்பட்டார்கள்')

கதை கேட்டுக் கொண்டிருக்கும் போது, ஆவிகளைப் பற்றிய இடம் வந்ததும் தாய்க்கு அருகே நெருங்கி உட்காருகிற சிறுமி.

பிள்ளையை மலங்கழிக்க விட்டுக்கொண்டே நாயைக் கூப்பிட்டு அதைத் தின்ன ஏவுகிற தாய் (தின்னுகிற நாய்).

'உனது உறவினன் தானே. வீட்டுக்குப் பின்னால் ஆட்டுக்குப் பிடிபட்டவன்' என்று எதிராளியைச் சாடுகிற வாயாடிப் பெண்.

-உயிரோட்டம் நிறைந்த குழுவாழ்வைத் தரிசிக்க வைக்கிற எழுந்து.

இப்படியெல்லாம் படம் பிடித்த அச்சுபே பிறகு சொன்னார்.

'எழுத்தாளனின் உண்மைப் பணி, வெறுமனே - நிகழ்காலப்படப்பிடிப்போ. சித்திரிப்போ அல்ல. எதிர்காலத்திற்குள் ஊடுருவி நோக்கி, அதற்காக மக்களைத் தயார் பண்ணுவது.'

'சமகால ஆபிரிக்க சமூக அரசியல் விவகாரங்களைப் பற்றிக் கவலைப்படாத எந்த ஆபிரிக்க ஆக்க இலக்கிய காரனும் எரிகிற வீட்டை விட்டு விட்டு எலியைத் துரத்துகிறவன் போல வீணாய்ப் போவான் என்பது எனக்கு உறுதி' என்று சொன்னார் அச்சுபே.

1930ம் ஆண்டு நவம்பரில் கிழக்கு நைஜீரியாவில் பிறந்தார் அச்சுபே. தகப்பன் கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலையில் ஒரு ஆசிரியர். இபடான் பல்கலைக்கழகக் கல்லூரியில் பி.ஏ. பட்டதாரியான பிறகு, 1954ல், ஒலிபரப்புத் துறையில் பணியாற்றப் புகுந்தார். 1961லிருந்து 1966வரை, 'வொய்ஸ் ஒஃப் நைஜீரியா'வின் வெளிநாட்டுச் சேவைப் பணிப்பாளராக இருந்தார். 1966ல் வடக்கு நைஜீரியாவில் உள்ள ஹௌசாவில் இடம்பெற்ற இபோ இனப்படுகொலை கண்டு, பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு கிழக்கு நைஜீரியாவுக்குப் போனார். 1967ல் கவிஞர் ஓகிக்போவுடன் சேர்ந்து எனுகுவில் ஒரு பிரசுராலயத்தைத் தொடங்கினார். பள்ளிப்பிள்ளைகளுக்கு சுதேச சிந்தனையை ஊட்டுகிற நூல்களைப் பிரசுரிப்பது நோக்கமாயிருந்தது. நைஜீரிய உள்நாட்டு யுத்தம் மூண்ட போது பயாஃப்ரா இராணுவத்தில் சேர்ந்த ஓகிக்போ கொல்லப்பட்டார். பயாஃப்ராவிலிருந்த எல்லா இபோக்களுக்கும் நேர்ந்த கதியே அச்சுபேக்கும் ஏற்பட்டது. அவரது வீடும் அழிக்கப்பட்டது. யுத்தத்தின் பிறகு கீழ் மத்திய மாகாணப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். 1971ல், அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்றினால், உலக இலக்கியத்திற்கான அவரது தனித்துவம் வாய்ந்த பங்களிப்புக்காக கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. 16 மொழிகளில் அவரது படைப்புகள் மொழி பெயர்க்கப்பட்டன.

இந்த 1966ம் ஆண்டு படுகொலை முடிந்த கையோடு ஹௌசா மொழியை முழுநாட்டுக்கும் அமுல்படுத்துவதைப் பற்றித் தீவிரமாக இருந்த சொலாரின் என்பவரை அச்சுபே வன்மையாகக் கண்டித்தார். 'ஐம்பது வருஷங்களுக்கு முன்பே ஹௌசாவை எல்லோருக்கும் கற்பித்திருந்தால் இந்த அசம்பாவிதங்கள் ஏற்பட்டிருக்காதெனக் கூறுகிறீர்... நைஜீரியாவை ஏற்படுத்தியவர்களும், ஆண்டவர்களும் ஆங்கிலேயரேயன்றி ஹௌசாக்கள் அல்ல.'

மற்ற பயாஃப்ரா எழுத்தாளர்களைப் போல அச்சுபேயும் பயாஃப்ரா பிரச்சினையின்போது, நீதிக்கும், தம் விதியைத் தாமே தீர்மானிக்கிற உண்மையான சுதந்திரத்திற்குமான தம் மக்களின் புரட்சிப் போராட்டத்தில் இணைந்து நின்றார். இதைப்பற்றி லண்டன் ரைம்ஸ் பத்திரிகைக்கு 1968ல் எழுதிய கடிதமொன்றில் அச்சுபே குறிப்பிட்டார். 'நான் ஒரு நைஜீரியனாயும், நைஜீரிய ஐக்கியத்தில் பெரு நம்பிக்கை கொண்டவனாயும் இருந்தேன்... நைஜீரியாவை உணர்ந்து நேசித்தவன் நான். ஆனால், இப்போது அப்படியல்ல'.

'ஆபிரிக்கத்துவம்' என்பதை ஒதுக்கி, 'பிரபஞ்ச'வாதம் புரிந்த மேற்கத்திய விமர்சகர்களையும், அவர்களுடன் எடுபட்ட ஆபிரிக்க எழுத்தாளர்களையும் அச்சுபே சாடினார். இந்த விஷயத்தில் ஆபிரிக்க எழுத்தாளர்களின் பலவீனத்துக்குக் காரணம் அவா தான் என்று அவர் சொன்னார். ஒரே பாய்ச்சலில் 'ஆபிரிக்கன்' என்கிற கொஞ்சம் பாரமான அடையாளத்தை அழிப்பதற்காக தன் மண்ணுடன் உள்ள பந்தங்களை அறுத்து, அதற்கான தன் கடனைச் செலுத்தி முடிக்காமல், ஒரு அசுரப் பாய்ச்சலில் - பிரபஞ்சத்திற்குள் குதிக்கிற அவா. இப்படியான நழுவுதல்களை எழுத்தாளர்கள் மேற்கொண்டால் சவாலை ஏற்பவர் யார்? என அவர் வினவினார்.

எழுத்தாளன் தன் சமூகத்தின் உணர்ச்சி நிலை என்றும் அதனை வழிநடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு அவனுக்கு உண்டு என்றும் அவர் சொன்னார்.

'நோ லோங்கர் அற் ஈஸ்' நாவலின் நாயகன் ஒபிக்கு ஏற்படுகிற காதலில், அவன் காதலி ஒரு 'ஒசு' - சமூகத்தில் தாழ்த்தப்பட்ட பிரிவினள் - என்று காரணங்காட்டித் தடை போடப்படுவதும்:

'ஸக்ரிஃபிஷியல் எக்' சிறு கதையில், 'கழிப்பு முட்டையை மிதித்தால், கழிப்பின் கேடு மிதித்தவரைச் சேரும்' என்று சொல்லப்படுவதும் யாழ்ப்பாணத்தை நமக்கு நினைவூட்டுகின்றன.


தமிழைத் தோற்கடிக்கிற அளவுக்கு இபோ மொழியில் பழமொழிகளும் மரபுச் சொற்றொடர்களும் இருக்கும் போல் இருக்கிறது. முதல் மூன்று நாவல்களிலும் கிட்டத்தட்ட ஐம்பது ஆவது தேறும்.

நாவல் எழுதுங்கலையில் கரைகண்ட பிறகு - அந்த நாலுடனும் - அச்சுபே அதை நிறுத்திவிட்டார். அவர் கட்டுரைகளும், கவிதைகளும் எழுதுகிறார். இதற்கு அவர் சொல்லும் காரணம் - சொல்ல வேண்டியதைச் சுருக்கமாக, ஒரு சிறுகதை, கவிதை அல்லது கட்டுரையாகச் சொல்ல வேண்டிய காலம் இது. நாவலின் சகாப்தம் முடிந்து விட்டது - என்பதாகும்.

அச்சுபேயின் நாவல்களைப் படித்த போது - முக்கியமாக 'திங்ஸ் ஃபோல் எபாட்' - ஒரு ஆசையே மனதில் மேவி நின்றது. தமிழில் பெயர்க்கலாமா என்று.

மல்லிகை. ஏப்.1978

---



# "மொகத்தின் மொகத்தட்ட" — ஒரு மீள் விமர்சனம்!

சரிநிகர் இதழ் 163இல் வெளியான "மொகத்தின் மொகத்தட்ட" சினிமா விமர்சனம் கண்டு அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்து விட்டேன். ஒரு படத்தை முழுமையாகக் கூட பார்க்காமல் விமர்சனம் எழுதிவிட வேண்டும் எனும் துடிப்பில் மிகவும் தவறாக தியாகசேகரனால் எழுதப்பட்ட அந்த விமர்சனத்தை சரிநிகரும் அப்படியே பிரசுரித்திருந்து விட்டது.

தியாகசேகரனால் கூறப்பட்டவாறு அச் சினிமாவில் நாயகியும், அவள் காதலனும் கொல்லப்படவில்லை. நாயகி கணவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மீண்டும் இணைந்து வாழ்கின்றனர். இம் முடிவு தான் இச்சினிமாவை சாதாரண சினிமா வரிசையில் வைத்துப் பார்க்க முடியாதவாறு அதற்கான தனித்துவத்தை வழங்குகின்றது. பௌத்த சிங்கள குடும்ப அமைப்பு முறையினை படம்பிடித்துக் காட்டும் வழக்கமான சினிமாப் பாரம்பரியத்தில் இது நிச்சயம் ஒரு வித்தியாசமான முடிவு தான். சற்றுத் துணிச்சலானதும் கூட. தற்போதைய பௌத்த சிங்களக் குடும்பங்களில் இத்தகைய முடிவு எடுக்கப்படும் சந்தர்ப்பங்கள் பரவலாகி வருவதை பிரதி பண்ணி விடுகிறது. இருவரும் சுட்டுக் கொல்லப்படுவதாக வரும் காட்சி ஒரு கனவுக்காட்சி போன்றது. நாயகியின் கணவனால் அவ்வாறு கற்பனை செய்யப்படுகிறது. ஆனால், கற்பனையில் கூட அவள் இறந்துவிடும் காட்சியை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அத்துடன் அதன்பின் தான் தண்டனைக்குள்ளாவதும், அதன் காரணமாக அவர்களின் மகள் அநாதரவாகப் போய்விடும் நிலை ஏற்படுவதையும் கூட அவன் சிந்திக்கின்றான். அவனது சிந்தனை கலையும் போது அவள் வந்து அவனிடம் மன்னிப்புக் கேட்டு இனி அத்தொடர்பு நீடிக்காது என உறுதிதர அவர்கள் இணைகின்றனர். தியாகசேகரன் இறுதி முடிவு வரும்வரை கூடப் பொறுமையாக சினிமா பார்க்காமல் இடையில் எழுந்துவருவது பற்றி எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், அவர் அரைகுறையாகப் பார்த்த சினிமா பற்றித் தொடர்பூடகங்களில் விமசர்னம் எழுதுவதைத் தவிர்த்தல் நல்லது.

சமூகக் கட்டுடைப்புப் பற்றி அவ் விமர்சனம் பேசகிறது. அவ் விமர்சனத்தில் வரும் பல கருத்துருவங்கள் (Ideologies) மீது என் கேள்விகளை எழுப்புவது நியாயம் என உணர்கின்றேன்.

அவ் விமர்சனம் சொல்கிறது இன்னொரு ஆணுடனான காதலுக்குக் காரணம் மனவயப்பட்டதெனில், அவள் கண்டிப்பாக கணவனிடத்தில் வெறுப்புற்றிருக்கவேண்டும் என. இதனை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. கணவனை வெறுத்தால் மாத்திரமே இன்னொருவனைக் காதலிக்க முடியும் எனும் கருத்து நிலைப்பாட்டை காலங்காலமாக வேரூன்றியிருக்கும் மனித அகவயப்படுதல் பற்றிய ஒரு போலி நிலைப்பாடாகவே நான் காணுகின்றேன். ஒருவர் மீது காதல் கொள்ள இன்னொருவரை வெறுக்க வேண்டும். என்பதில்லை. தவிர, இத்தகைய கேள்வி நாயகன் ஒருவன் மனைவியைத் தவிர வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பதாகக் காட்டப்படும் சினிமாக்களின் மீது கேட்கப்படுவதில்லை. இங்கு பெண் என்பதால், இத்தகைய கேள்வி எழுகின்றது. ஆணின் வழங்குதல்கள் (அது பாலுறவாக இருந்தால் என்ன? காதலாக இருந்தால் என்ன?) திருப்தியாயிருந்தால் பெண் தன் சகல உணர்வுகளையும். கட்டிவைத்விட வேண்டும் எனும் எதிர்பார்ப்பு. இங்கும் ஆண்தான் கொடுப்பவர், பெண் அதனைப் (அடிமை போல்) பெறுபவர்.

இவ் விமசர்னம் "மீஹரக்கா"வையும், "எகே வைரய"வையும் ஒரே தளத்தில் வைக்கின்றது. இரண்டும் சகல பரிமாணங்களினூடாகவும் வேறு வேறு தளங்களைக் கொண்டவை. பாலியல் வல்லுறவு எனும் விடயம் பயன்படுத்தப்பட்டிருப்பதும், முற்றிலும் வேறு கோணத்தில். தவிர அக்காட்சி காட்டப்படுதல்களில் கூட பாரிய வேறுபாடு உண்டு. அதேபோல் "அயோமா"வும் வேறு ஒரு அரசியல் கொண்ட சினிமா. இவற்றை ஒரு அகப்பார்வைக்குள் கொண்டு வரமுடியாது. மற்றும் மீஹரக்கா நாயகன் சித்த சுவாதீனம் குறைந்த ஒருவனும் அல்ல. அயோமா பாலியல் தொழிலாளியும் அல்ல.

0 0 0

மொகத்தின் மொகத்தட்டவில் நாயகியின் கணவன் வேடத்தில் நடித்த கிரன்வில் றொட்ரிகோ அண்மையில் விபத்தொன்றில் பலியாகி விட்டார். சினிமா, தொலைக்காட்சி நாடகம், மேடை நாடகம் ஆகியவற்றில் நடித்துக் கொண்டிருந்த இந்தக் கலைஞனுக்கு அஞ்சலி செலுத்துவோமாக.

அ. றஜீசன்

---

# அவரின் தற்போக்கு!

சிவசேகரத்தின் (சரிநிகர் 163) கடிதத்தில் " அவ்வருடத் தொகுதிகளுள் வில்வரத்தினத்தினது தொகுதி தவிர்ந்த எதுவும் போரின் முகங்களுடன் பரிசைப் பகிர்வது மிகவும் அபத்தமாகவே இருந்திருக்கும்" என்று அவர் கூறுவதை விடத் தற்போக்கான (Arbitrary) கூற்றை ஸ்ராலின் காலத்து ரஷ்யாவில் இலக்கியக் கொமிஜாராக இருந்த ஸ்டனோவ் கூடச் சொல்லியிருக்க மாட்டார். பல பிரதிகள், பல வாசிப்புகள், பல ரசனைகள், ரசானுபவங்கள் என்று வளர்ந்து விட்ட இன்றைய கலை இலக்கிய விமர்சன உலகில் இதை நாம் எங்கே வைத்தொழுகலாம், ஸ்டனோவைத் தவிர்த்து. இக்கூற்றின் ஒளியில் அவரது கடிதத்தின் ஏனைய வாசகங்களை அணுகினால் மேலும் பல சரிவுகளும் முரண்நகைகளும் ஏற்படலாம்!

மு.பொ.

---

# மலையகம்...

இ.தொ.காவாகவே அவர்களின் செயற்பாடுகளும் அமைந்துள்ளன. இவர்களின் இலக்குகள், கோரிக்கைகள் பிரகாசமாக இருந்தாலும் செயற்பாடு பெரிதாக கூறும்படி இல்லை.

ஐ.தே.க. மலையக மக்களுக்கு தலைமை கொடுக்கத் துடிக்கிறது. கடந்த பிரதேச சபைத் தேர்தலில் வேறு மாற்று அமைப்பு இல்லாத காரணத்தினாலேயே ஐ.தே.கவுக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். மற்றும்படி அவர்களின் இனவாத, மற்றும் ஏமாற்று வித்தைகளை மறந்து அவர்களுக்கென மக்கள் வாக்களிக்கவில்லை.

சற்று வித்தியாசமாக மலையக மக்களுக்கு தலைமைத்துவம் கொடுக்க முற்பட்டவர்கள் இடதுசாரிக் கொள்கையுடன் புறப்பட்ட புதிய ஜனநாயகக் கட்சி (பு.ஜ.க.)யினர் அரை நூற்றாண்டு கால இடதுசாரி அரசியல் வரலாற்றைக் கொண்ட இவர்கள் மலையகத்தில் தமது செயற்பாடுகளை தீவிரப்படுத்தியது எண்பதுகளின் நடுப்பகுதியில் இலக்கு, கொள்கை, செயற்பாடுகள் என்ற வகையில் ஏனைய அமைப்புகளுடன் முற்போக்காக இருந்தபோதிலும், அவர்கள் ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் எடுக்கும் நிலைப்பாடு, மற்றும் அவர்களின் செயற்பாடுகள் ஒரு குறித்த பிரதேசத்திலும், குறித்த பிரிவினரிடையேயும் காணப்படுவதால் அவர்களால் ஒரு முழுமையான தலைமையை கொடுக்க முடியும் என்று கூறிவிட முடியாது.

இந்நிலையில் இலங்கை வாழ் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது மலையக மக்கள் இன்று சமூக, பொருளாதார, அரசியல் ஆகிய அனைத்து நிலைகளிலும் மிகவும் பின்தங்கியே உள்ளனர். இவற்றுக்கு பங்களிப்புச் செய்த காரணிகள் ஒன்றாகவும், பிரதானமாகவும் எமது தலைமையின் தவறை கூறலாம்.

எனவே நாம் மலையகத்தின் அரசியல் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் பொழுது தற்போதுள்ள தலைமைக்கு மாற்றீடான ஒரு தலைமை/ அமைப்பு பற்றி சிந்தித்தல் வேண்டும். தற்போதைய தலைமையின் வீழ்ச்சியானது ஒரு மாற்றுத் தலைமையின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. இல்லாவிடின் எதிர்கால தலைமைகளும் தற்போதுள்ள அமைப்புக்களிலிருந்து தோன்றிக்கொண்டு அல்லது வளர்ந்து கொண்டிருக்கும். இதனால் எமது சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் பெரிய மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை.

இந்தத் "தேர்தல் ஆண்டில்" மலையக மக்களிடமிருந்து பேரினவாத கூட்டாசிகளிடம் உரிமைகளைப் பேரம் பேசும் வாக்குகளைப் பிடுங்கிச் சென்ற புரோக்கர்கள்: மலையக மக்களுக்கு இனித்தேவையில்லை.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in Sri Lanka


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை
'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல.19/4, நாவல வீதி, நுகேகொட
தொலைபேசிஇலக்கம் 01 - 814859


## தேர்தலை ரத்து செய்!

**வடமேல்** மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் வெளியாகி விட்டன.

எதிர்பார்த்தபடி பொ.ஐ.மு.வின் அதிகார ஆயுத பலமும், மோசடிகளும் சேர்ந்து அதன் வெற்றியைத் தீர்மானித்து விட்டன.

இலங்கையின் தேர்தல்களது வரலாற்றிலேயே மிகவும் மோசமாக தேர்தல்கால வன்முறைகளும் மோசடிகளும் நடந்தது இந்தத் தேர்தலிலேயே என்று கூறுகின்றனர் அவதானிகள்.

அரசாங்க அமைச்சர்களது வாகனங்கள் தேர்தல் வேலைகளில் பயன்படுத்தப்பட்ட இலக்கத்தகடுகளற்ற வாகனங்களில் ஆயுதமேந்திய சிவிலுடை தரித்த நபர்கள் ஆளுங்கட்சி வேட்பாளர்கட்காக தேர்தற்கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். லொறிகளில் போலி வாக்குப் பெட்டிகள் ஏற்றப்பட்டு அப்பிரதேச பா.உ.ஒருவரது வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது பற்றி பொலிஸாரே புகார் செய்திருக்கின்றனர். தேர்தல் கடமைக்காக நிறுத்தப்பட்டிருந்த பொலிஸாரையே பல இடங்களில் ஆளுங்கட்சியினர் துப்பாக்கிகளைக் காட்டி மிரட்டி அவர்களது கடமையைச் செய்யவிடாது தடுத்திருக்கின்றனர்.

பல வாக்குச் சாவடிகளில் வெளிப்படையான மிரட்டல்கள் நடந்திருக்கின்றன. புத்தளம் மாவட்டத்திலுள்ள வாக்குச் சாவடிகளில் அங்கிருந்த ஐ.தே.க. ஆதரவாளர்களை விரட்டிவிட்டு ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் கட்டுக்கட்டாக வாக்குச் சீட்டுக்களை பெட்டிகளுக்குள் திணித்திருக்கின்றார்கள். சில வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பு தொடங்கி சில மணி நேரங்களுக்குள்ளேயே வாக்களிப்பு முடிந்து விட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆக மொத்தத்தில் பொ.ஐ.மு. முன்பு ஐ.தே.க. செய்த அதே பாணியில் தனது வெற்றியை நிலைநாட்டும் நடவடிக்கையை செய்து முடித்திருக்கிறது.

கள்ள வாக்கு, கொலை, மிரட்டல், கடத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலமாக தேர்தல் ஜனநாயகம் பொ.ஐ.மு.வினால் இந்தத் தேர்தலில் வெற்றிகரமாகப் பேணப்பட்டிருக்கிறது.

யுத்தமூலம் சமாதானம் வரமுடியும் என்றால் கள்ளவாக்காலும், கொலை மிரட்டலாலும் ஜனநாயகம் நிறுவப்பட முடியாதென்று எப்படிச் சொல்ல முடியும்?

இவையெல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல, வாக்களிப்பு மோசடி நடந்த சாவடிகளின் வாக்குகளை நிராகரிக்குமாறு ஜனாதிபதித் தேர்தல் ஆணையாளருக்குப் பணிப்புரை வழங்கியிருப்பதாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கை அமைந்திருக்கின்றது.

ஜனநாயகம் பற்றி வாய்கிழியப் பீற்றும் அரசாங்கத்தின் தலைவிக்கு தான் யாருக்குப் பணிப்புரை வழங்க முடியும் என்பது கூடத் தெரிந்திருக்கவில்லை.

இலங்கை அரசியலமைப்பு சட்டப்படி தேர்தல் ஆணையாளருக்கு அவரது கடமை தொடர்பாக எந்தப் பணிப்புரையையோ, ஆலோசனையையோ வழங்க எந்த அதிகாரமும் யாருக்கும் கிடையாது. பாராளுமன்றத்துக்கு மட்டும் கட்டுப்பட்ட, நாட்டின் மிக முக்கியமான கடமையில் ஈடுபடும் ஒருவருக்கு, ஜனாதிபதி பணிப்புரை வழங்குதென்பது சந்திரிகாவின் ஜனநாயகத்தின் கேலிக்கூத்தை தெளிவாக இனங்காட்டியுள்ளது.

இந்தச் செயல் ஒரு சிவில் அதிகாரிக்கு அவரது ஜனநாயகக் கடமையைச் சுதந்திரமாக செய்ய அனுமதிக்காத மாபெரும் குற்றம் என்று கண்டித்திருக்கின்றார்கள் பத்திரிகையாளர்கள்.

இந்தத் தேர்தல் வழமையைவிட அதிகமாக மோசடியும் வன்முறை நிறைந்த ஒன்றாக அமைந்ததனால் தேர்தலின் மூலம் நடைபெற்ற தெரிவு ரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும் பொ.ஐ.மு. தவிர்ந்த பிற அரசியல் கட்சிகள் அனைத்தும் கோரியுள்ளன.

முடிவு எடுப்பது தேர்தல் ஆணையாளரின் கையில் தங்கியுள்ளது.

இலங்கையின் அண்மைக்கால பாராளுமன்ற அரசியல் ஒரு வன்முறைக் களமாகவும் கேடிகளதும் சமூக விரோதிகளதும் ஆதிக்கத்துக்குரிய இடமாகவும் மாறிவிட்டதென்பதை சரிநிகர் பல தடவை சுட்டிக்காட்டி வந்துள்ளது.

பாராளுமன்றத்தின் போலி ஜனநாயக முகமூடி துகிலுரிந்து அதன் கோரமுகும் தெளிவாக வெளிப்படத் தொடங்கியிருப்பதையும் சரிநிகர் சுட்டிக்காட்டி வந்தது. பாராளுமன்ற ஜனநாயகம் அதற்கேயுரிய வன்முறையை வெளிப்படையாக இப்போது செயற்படத் தொடங்கிவிட்டது.

இந்தத் தேர்தல் மூலம் அது மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

முதலில் இந்தத் தேர்தலை ரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை சரிநிகரும் உயர்த்திப் பிடிக்கிறது!

கூடவே இந்தத் தேர்தல் முறையையும் அதைக் காட்டி மக்களை ஏமாற்றும் போலி ஜனநாயக முறையையும் மாற்றுவது பற்றியும் உரத்துச் சிந்திக்க வேண்டிய தருணம் இது என்பதையும் சரிநிகர் சுட்டிக் காட்ட விரும்புகிறது.

## வடமேல் மாகாண சபை தேர்தல்: வாக்குகளைப் போட்டது யார்? எப்படிப் போட்டார்கள்?

### ஒரு நேரடி றிப்போர்ட்

**தேர்தல்** முடிவுகள் வெளியாகி விட்டன. பொ.ஐ.மு. வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டு விட்டது. ஆனால் தேர்தல் நடந்த அன்று தேர்தலை நேரடியாகப் பார்வையிட புத்தளம் மாவட்டத்திற்குச் சென்றிருந்த எமது நிருபர்கள் தரும் தகவல்கள் இந்த வெற்றியை கேலிக்குரிய ஒரு வெற்றியாக எண்ண வைக்கின்றன. புத்தளத்தில் இருந்து நமது நிருபர் அனுப்பி வைத்த நேரடித் தகவல்கள் இவை.

புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சகல வாக்கெடுப்பு நிலையங்களிலும் ஆளும் பொ.ஐ.மு. சார்பில் போட்டியிட்ட விஜிதபெர்ணான்டோ என்பவரும் அவரது ஆதரவாளர்களும் பாதளஉலகக் கேடிகளும் ஐ.தே.க., ஜே.வி.பி. மு.ஐ.வி.மு. ஆதரவாளர்களையும் தேர்தல் முகவர்களையும் அச்சுறுத்தியும் தாக்கியும் விரட்டினர். ஒரு பஸ் வண்டியில் வந்த 200க்கு மேற்பட்ட குண்டர்கள் எல்லா வாக்களிப்பு நிலையங்களிலும் தலா 200 வாக்குகளைப் பலவந்தமாக பெட்டி-களுக்குள் திணித்தனர். பொலிசாரோ, தேர்தல் அதிகாரிகளோ செய்வதறியாது திண்டாடினர். இச் சம்வங்களை அறிக்கையிட்டு தாம் சிரமத்தில் மாட்ட விரும்பவில்லையென அவர்கள் தெரிவித்தனர்.

காலை 11மணியளவில் திகழி, ஏத்தாலை வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப் பெட்டிகள் வன்முறைக் கும்பல்களால் சூறையாடப்பட்டு விட்டன. கந்தல்குளி வாக்குச் சாவடியில் 11மணிக்கே 1867 வாக்குகளில் 950 வாக்குகள் போடப்பட்டு விட்டன. பெட்டி நிரப்பப்பட்டு விட்டது எனக் கூறி விஜித பெர்ணான்டோ மேலதிக பெட்டி கொண்டுவரும்படி தேர்தல் அதிகாரியை விரட்டியதை நேரடியாகக் கண்டோம். இச் சாவடிக்கு முன்னால் ஆளும் கட்சி ஆதரவாளர்களின் டசின் கணக்கான வாகனங்களும் ஆதரவாளர்களும் நாள் முழுவதும் குழுமியிருந்ததோடு வாள், கத்தி, மணல் பெற்றோல் குண்டுகளை வைத்திருந்ததைக் காணமுடிந்தது. கந்தல் குளி வாக்குச் சாவடியில் விஜித பெர்ணாண்டோ கலாட்டா செய்து ஐ.தே.க. ஜே.வி.பி முகவர்களை விரட்ட முயன்ற போது தேர்தல் அதிகாரி தேர்தல் விதிகளை விளக்கி நீ மனித சுபாபவம் உள்ள பிறவியானால் வெளியே போய்விடு என உபதேசித்துள்ளார். பி.ப. 2மணிக்கு இவ்விடத்திற்கு சென்ற கண்காணிப்பாளர்கள் விஜிதவால் விரட்டப்பட்டனர்.

தேர்தல் தினத்தன்று அதிகாலை-யிலேயே தலவில வாக்குச்சாவடிக்குச் செல்ல ஆயத்தமான ஜே.வி.பி. தேர்தல் முகவர் இரண்டு வான்களில் வந்த ஆயுதம் தாங்கிய நபர்களால் கொலை அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டார். அதே வேளை வாக்குச் சாவடியிலிருந்த ஐ.தே.க. முகவரும் ஆதரவாளர்களும் ஆளுங்கட்சியினரால் தாக்கப்பட்டு விரட்டப்பட்டனர். அதிகாலை சில பஸ்களில் வந்த 200 பேர் பலவந்தமாக வாக்குப்பெட்டியில் வாக்குச் சீட்டுகளை திணித்துள்ளனர்.

நுரைச்சோலை கல்மடுவ கந்தகுடா வாக்குச்சாடிகளில் ஆளுங்கட்சி வேட்பாளர் விஜித்த பெர்ணாண்டோ மற்றும் அவரது ஆதரவாளர்களால் ஐ.தே.க. முகவர்களும் ஆதரவாளர்களும் தாக்கி விரட்டப்பட்டனர். இச்சம்பவங்களைப் பார்வையிடச் சென்ற தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு நிலையத்தை சேர்ந்த அலுலகர்களை வாக்களிப்பு நிலையத்தக்கு உள்ளே நுழைய விடாது தடுத்ததோடு அடையாள அட்டைகளை பறித்துச் சோதனையிட்டனர்.

நுரைச்சோலை தனியார் தகவல் தொடர்பு நிலையம் ஒன்றில் வைத்து தேர்தல் கண்காணிப்பாளர்களை சுற்றிவளைத்த நூற்றுக்கணக்கான ஆளுங்கட்சி ஆதரவாளர்கள், தகவல் எதனையும் கொடுக்கக்கூடாது என்று சத்தமிட்டதுடன் மீறினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மிரட்டினர்.

கற்பிட்டியில் அமைந்திருந்த வாக்களிப்பு நிலையங்கள் மூன்றிலும் ஐ.தே.க. ஆதரவாளர்கள் அச்சுறுத்தி விரட்டப்பட்டனர். மேலும் காலை 9.30 மணிக்கு ஜயமான்ன மேரிகே ஜோன் லீனஸ், பிரான்ஸிஸ் என்ற முகத்துவாரத்தைச் சேர்ந்த மீனவர்களின் வாக்குச்சீட்டை இனந்தெரியாதோர் பறித்து விட்டு அவர்களை அச்சுறுத்திச் சென்றனர். பண்ணையடி இலந்தவளையைச் சேர்ந்த நிமல் பெர்ணாண்டோ தம்மை ஐ.தே.க.வினர் மிரட்டியதாகவும் வாக்களிக்கப் போக வேண்டாம் என அச்சுறுத்தியதோடு வீட்டு ஜன்னல்களை உடைத்துள்ளதாகவும் முறையிட்டுள்ளார்.

வாக்களிப்பு நடைபெற்ற புத்தளம் மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்த பின்னரும் கூட பொ.ஐ.முவின் பதாகைகள், கொடிகள் என்பன அகற்றப்படவில்லை. மேலும், பிரச்சார வேலைகள் வாக்களிப்பு நிலையங்கள் வரை பகிரங்கமாகவே நடைபெற்றன. சகல வாக்களிப்பு நிலையங்களிலும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாக்களிப்பு மிகவும் மந்தமாகவே நடைபெற்றது.

முந்தல் வாக்களிப்பு நிலையங்களின் முன்னால் ரயர்கள் எரிக்கப்பட்டன. மதுங்குளி முந்தல் சிங்கள மகா வித்தியாலயம், முந்தல் வித்தியாலயம், மங்களவெளி வித்தியாலயம், மதுரங்குளி ஆதார மகா வித்தியாலயம் கடையா-மோட்டை, கணேமுல்லை முஸ்லிம் வித்தியாலய வாக்களிப்பு நிலையங்களில் 6 வாகனங்களில் (அவற்றில் இரு வாகனங்களின் இலக்ககங்கள்:251-4446 பிக்அப், 61-7735 பொலிஸ் பஜிரோ) வந்த விஜித்த பெர்ணாண்டோவும் அவரது ஆதரவாளர்களும் ரயர்களை எரித்ததோடு ஐ.தே.க., ஜே.வி.பி. ஆதரவாளர்களை அச்சுறுத்தி விரட்டினர்.

முந்தல் சிங்கள வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் விஜித்தவின் ஆதரவாளர்கள் மக்களைப் பயமுறுத்தி வாக்களிக்கச் செய்ததோடு, திட்டமிட்ட முறையில் கள்ள வாக்குகளை பெட்டிகளில் திணித்தனர். நாகேஸ் என்பவர் தேர்தல் கண்காணிப்பாளர்களை அச்சுறுத்தியதோடு, ஆளுங்கட்சி ஆதரவாளர்கள், கண்காணிப்பாளர்கள், கோவைகள் வன்முறை தகவல் திரட்டுக்கள், அடையாள அட்டைகள் என்பவற்றையும் தம்மைப் பற்றிய முறைப்பாடுகளையும் பறித்தெடுத்தனர்.

புத்தளம் பாலாவி, சிங்கள வித்தியாலய வாக்களிப்பு நிலையத்துக்கு முன்னால் வாகனங்களில் வந்து கூடிய பொ.ஐ.மு. ஆதரவாளர்கள் வீதியால் வந்த வாகனங்களை மறித்து கொடிகளைக் கட்டுமாறு பலவந்தப்படுத்தியதுடன் வாக்களிக்க வந்த மக்களையும் தமக்கு வாக்களிக்குமாறு மிரட்டினர். கடையாமோட்டை முஸ்லிம் வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் திட்டமிட்டு வந்து கள்ள வாக்குகள் போடப்பட்டன. இதனால் நூற்றுக்கணக்கான மக்கள் தமது வாக்குகள் ஏற்கெனவே போடப்பட்டுள்ளன என்று குறைபட்டுக்கொண்டனர். பொ.ஐ.முவின் ஆதரவாளரான நவ்பர் என்பவர் ஒரு இளைஞனை வற்புறுத்தி வாக்களிக்கச் செய்ததை வாக்களிப்பு நிலையத்தின் உள்ளேயே நாம் கண்டோம். வாக்களிப்பு நிலையங்களுக்கு உள்ளேயே ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் நின்று வாக்காளர்களை அச்சுறுத்திக்கொண்டிருந்தனர். வெளிமாவட்டத்திலிருந்து வந்த ஒரு குழுவினர் பலவந்தமாக வாக்குப்பெட்டிகளை நிரப்பினர். வந்தவர்களில் ஒருவர் ஆண்களின் வாக்குகள் அனைத்தும் போடப்பட்டு விட்டன. பெண்களை மட்டும் அழைத்து வாக்களிக்க விடுங்கள் என்று அச்சுறுத்தினார் ஒருவர்.

கணேமுல்ல முஸ்லிம் வித்தியால-யத்தில் தமது அட்டகாசத்தை முடித்துக் கொண்ட பொ.ஜ.மு.வேட்பாளர் நவாவியின் ஆதரவாளர்கள் கடையாமோட்டையில் வாக்காளரின் தேர்தல் முகவர்களையும் அச்சுறுத்தினர்.

பாலாவி, தில்லையடி வாக்களிப்பு நிலையத்தில் பி.ப. 1மணிக்கே வாக்குப்பெட்டிகள் இறக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டதோடு ஆளும் கட்சி ஆதரவாளர்கள் பின்னர் வந்த வாக்காளர்களை அச்சுறுத்தி விரட்டினர். தமது வாக்குகள் முன்கூட்டியே போடப்பட்டதை அறிந்த வாக்காளர்கள் தமது ஆயுட் காலத்திலேயே இவ்வளவு மோசமான தேர்தலை சந்தித்ததில்லை என வெதும்பியதைக் காணமுடிந்தது.

புத்தளம், மண்ணைத்தீவு வாக்களிப்பு நிலையத்தில் உரிய நேரத்திற்கு முன்பே வாக்களிப்பு நடந்து விட்டத்தாக அறிவிக்கப்பட்டது. ஷாஹிராக்கல்லூரி வாக்களிப்பு நிலையத்தில் பொ.ஐ.மு. வேட்பாளர் நவவியின் ஆதரவாளர்கள் இரண்டு பேர் வாக்குப்பெட்டிக்கு அருகிலேயே நின்று கொண்டு பெட்டிகளை நிரப்பினர். வாக்கெடுப்பு முடியும் தருவாயிலும் அவர்கள் வாக்குப் பெட்களை நிரப்பிக் கொண்டிருந்தனர்.

இந்த லட்சணத்தில் தான் வடமேல் மாகாண சபைக்கான ஜனநாயக தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்றது.

## தேர்தல் களம் ?

நன்றி: லங்காதீப




வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிறின்ற இன். இல. 07, கெகடிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை.

19990127